Follow us:

# தமிழன்
THAMILAN
තමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 293 பிலவ வருடம், ஆடி மாதம் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(03.08.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 23, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## நக்கல் நமசிவாயம்




# ஆசிரியர்மாருக்கு அடுத்த பட்ஜட்டில் நிதி ஒதுக்கீடு அமைச்சரவை முடிவு

- தொழிற்சங்கங்களுடன் அரசு இன்று மீண்டும் பேச்சு
- சரியான தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் - தொழிற்சங்கம்

02»

# புகையிரத திணைக்களத்துக்கு 5 வருடங்களில் 390 கோடி ரூபா நட்டம்

•நமது விசேட செய்தியாளர்

இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களத்துக்கு கடந்த ஐந்து வருடங்களில் அண்ணளவாக 390 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதில் அதிகூடிய நட்டமாக கடந்த 2020ஆம் ஆண்டு 100 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

புகையிரத சேவைகள் திணைக்களம் 2018ஆம் ஆண்டுக்குப் பின் பாரியளவு நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு 6.77 பில்லியன் ரூபா இழப்பும், 2017ஆம் ஆண்டு 7.60 பில்லியன் ரூபா இழப்பும் திணைக்களத்துக்கு ஏற்பட்டுள்ளது. 02»



அரசாங்க ஊழியர்கள் அனைவரையும் நேற்றுமுதல் பணிக்கு சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பெரும் எண்ணிக்கையிலானோர் நேற்றுக்காலை வருகைதந்ததை படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)



# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மைத்ரியிடம் கோரிக்கை

## சு.க. உள்ளூராட்சி உறுப்பினர்கள் நேரடியாக கடிதம் கையளிப்பு

•நா.தினுஷா

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை எதிர் வரும் 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பிலான கோரிக்கை கடிதம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்ரிபால சிறிசேனவிடம் நேரடியாக கையளிக்கப்பட்டுள்ளது.

இதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹபராதுவ தொகுதி அமைப்பாளரும் மத்திய குழு உறுப்பினருமான திஸர குணசிங்க 'தமிழனிடம்' உறுதிப்படுத்தினார்.

அக்கட்சியின் காலி மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் கடந்த ஜூலை மாதம் 29ஆம் திகதி இடம்பெற்றபோது இந்தக் கோரிக்கை கடிதம் மைத்ரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் குறித்து முன்னாள் ஜனாதிபதி உடனடியாக எவ்வித பதிலையும் அளிக்கவில்லையென திஸர குணசிங்க மேலும் குறிப்பிட்டார்.

# மூன்றாவது தடுப்பூசி குறித்து ஆராய்கிறது மருத்துவத்துறை

## சுகாதார அமைச்சு தகவல்



•யோ.தர்மராஜ்

வைரஸ் காய்ச்சலுக்கு வருடாந்தம் தடுப்பூசிகள் வழங்கப்படுவது போன்று கொரோனாவை தடுப்பதற்கும் வழங்கவேண்டிய தேவை ஏற்படலாம். அதற்கமைய உலக நாடுகள் மூன்றாவது தடுப்பூசி வழங்குவது குறித்து ஆய்வுகளை முன்னெடுக்கின்ற நிலையில் இலங்கையும் அதற்கு தயாராகும் வகையிலான ஆய்வுகளை முன்னெடுத்து வருவதாக சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். 02»

# போராட்டங்களை மழுங்கடிக்க அரசாங்கம் சூழ்ச்சி செய்கிறது

## அமைச்சின் சுற்றுநிருபங்களுக்கு ஆசிரியர்கள் பதிலடி கொடுத்துள்ளதாக ஸ்டாலின் தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

பாடசாலைகள் சுத்தம்செய்யப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் அங்கு சமுகமளிக்கக்கூடிய சூழல் உருவாக்கப்படாது. அத்தோடு சில பாடசாலைகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் தங்கியிருக்கின்றனர். இவ்வாறானதொரு நிலையில் பாடசாலைக்கு சமுகம் தருமாறு கல்வி அமைச்சினால் ஆசிரியர்களுக்கென சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளமையானது போராட்டங்களை மழுங்கடிக்கச் செய்யும் அரசின் சூழ்ச்சியாகும் என ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப்... 02»

# டயகம சிறுமி விவகாரம் 40 பேரிடம் வாக்குமூலம்

## ரிஷாட்டின் மைத்துனரால் பெண் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டமை உறுதி

•நா.தினுஷா

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிவந்த நிலையில் தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த டயகமவைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுமி விவகாரத்தில் நேற்றுவரை 40 பேரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று முன்தினம் 29 வயதுடைய மேலுமொரு பெண்ணிடம் வாக்குமூலம்... 02»




# இந்திய மீனவர்கள் மீது கடற்படை துப்பாக்கிச்சூடு

## நால்வர் படுகாயம்

14»

# பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு சான்றிதழ்கள் இணையவழியில்!

## பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிப்பு

பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவுச் சான்றிதழ்களை இணையவழியில் பெற்றுக்கொள்ள முடியும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த சான்றிதழ்களை இணைய வழியில் பெற்றுக் கொள்வதற்காக கையடக்கத் தொலைபேசி மற்றும் கணினி வழியாக ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம். அத்துடன், கிரெடிட் அட்டைகளைப் பயன்படுத்தி இதற்கான கட்டணங்களைச் செலுத்த முடியும். 02»

# 7 மாதங்களில் 10,700 டெங்கு நோயாளர்கள்; 3,459 பேருக்கு எலிக்காய்ச்சல்

•நா.தினுஷா

நடப்பாண்டின் முதல் ஏழு மாதங்களில் 10 ஆயிரத்து 700 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 3 ஆயிரத்து 459 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, கடந்த ஜூலை மாத்தில் டெங்கு நோயினால் 397 பேரும் எலிக்காய்ச்சலினால் 490 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. 02»



# அண்ணனும் தங்கையும் நீரில் மூழ்கிப் பலி

## படல்கும்புரவில் பரிதாபம்

12»

# விஸா சேவைகள் தாமதமாகலாம்

## இந்தியத் தூதரகம் அறிக்கை

02»

# பால்மாவுக்கு தட்டுப்பாடு!

•யோ.தர்மராஜ்

நாட்டின் பல பிரதேசங்களில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரு நாட்களுக்கு மேலாக பால்மா தட்டுப்பாடு நிலவுவதாக அறிய முடிந்தது.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக உள்ளூர் சந்தையில் பால் மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றதாகவும் கூறப்படுகின்றது. 02»

# மேன்முறையீட்டு நீதிமன்றில் ரணில் மனுத் தாக்கல்

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இரத்துச் செய்யுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் அவர் இந்த மனுவை நேற்று தாக்கல் செய்துள்ளார்.

## பால்மாவுக்கு...

பால்மா நிறுவனங்கள் விலை அதிகரிப்புக்கு அனுமதி கோரியிருந்த நிலையில், அதற்கு அனுமதி வழங்காத நிலையிலேயே இந்தத் தட்டுப்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன்படி, சிறுவர்களுக்கான பால்மா தவிர்ந்த மற்றைய அனைத்துவகை பால்மாவுக்கும் தட்டுப்பாடுகள் காணப்படுவதாக அறிய முடிகின்றது.

## மூன்றாவது தடுப்பூசி...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைரஸ் காய்ச்சலைபோன்றே அறிகுறிகளை தோற்றுவிக்கும் வைரஸ்களை கட்டுப்படுத்த வருடாந்தம் தடுப்பூசிகள் வழங்கும் செயற்பாடு தற்போதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போதுள்ள கொரோனா போன்று புதிய வைரஸுக்கும் அவ்வாறு தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டுமா என்பதை வைத்தியத்துறை பக்கத்தில் ஆராயும்போது அதற்கு வாய்ப்புள்ளதாக தெரிகின்றது. அந்த வகையில் அதற்குத் தேவையான தரவுகளும் சேகரிக்கப்படுகின்றன.

முதல் கட்ட மற்றும் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டு காலம் செல்லும் போது எவ்வாறான முறையில் நோய் எதிர்ப்புச் சக்தி உருவாகும் என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

மேலும், இவ்வாறான வைரஸ் காலத்திற்கு காலம் மாற்றமடைவதால் அந்தந்த காலத்திற்குத் தேவையான முறையில் தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வைரஸ் காய்ச்சல் போன்றவற்றிலிருந்து நாங்கள் கண்டறிந்துள்ளோம். தடுப்பூசிகள் கண்டறியப்பட்டதுமுதல் தற்போதுவரை காலத்துக்கு காலம் ஏற்றவாறு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன.

அதற்கமைய, அதிகமான நாடுகள் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான மூன்றாவது கட்ட தடுப்பூசி வழங்கல் அல்லது வருடாந்தம் தடுப்பூசி வழங்கப்பட வேண்டுமா என்பது குறித்து ஆய்வுகளை முன்னெடுத்துவருகின்றன.

அதேபோன்று, இலங்கையிலும் இரு தடுப்பூசிகள் வழங்கப்பட்டு மூன்றாவது தடுப்பூசிகள் வழங்குவதற்கு தேவை ஏற்பட்டால் அதற்கு சுகாதாரத்துறையினர் தயாராக வேண்டும் என்பதால் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு முன்னெடுத்து வருகின்றது – என்றார்.

## பிறப்பு, இறப்பு,...

விரைவுத் தபாலில் அல்லது மிக அருகாமையில் இருக்கும் பிரதேச செயலகத்திலோ சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் https://online.ebmd.rgd.gov.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசித்து சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையைச் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் www.rgd.gov.lk என்ற இணையத்தளத்திலும் 011 2889518 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமும் இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## புகையிரத...

அத்துடன், 2018இல் 6.96 பில்லியன் ரூபாவும் 2019இல் 7.56 பில்லியன் ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக நட்டத்தொகை மேலும் அதிகரித்துள்ளது. அந்த ஆண்டில் 10.1 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பயணக்கட்டுப்பாடு நீக்கத்தினால் மக்களின் உயிருக்கு ஆபத்து

## உயிரிழப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

***யோ.தர்மராஜ்***

டெல்ட்டா மட்டுமல்ல, டெல்ட்டா ப்ளஸ் திரிபு உருவாகுவதற்கும் வாய்ப்புள்ளது. அதனை தடுப்பதற்கு அரசாங்கத்திடம் உரிய நடவடிக்கைகள் இல்லை. எனினும், அரசாங்கம் நாட்டை திறந்து, கொரோனா நோயாளர்களையும் மரணங்களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பதற்கு முயற்சிக்கின்றது. பயணக் கட்டுப்பாடுகளை நீக்கி மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்று ஆரம்பத்திலிருந்து நாங்கள் உண்மை நிலைமைகளை முன்வைத்தோம். தற்போது அதிக மரணங்களையும் அதிக கொரோனா நோயாளர்களையும் உருவாக்கும் ஆபத்தான கொரோனா அலை உருவாகியுள்ளது. இதனால் சுகாதாரத்துறையினர் அதிக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

வைத்தியசாலைகளின் வாட்டுகள் நிரம்பி வழிவதோடு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளும் நிரம்பியுள்ளது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக கொரோனா நோயாளர்களும் மரணங்களும் அதிகரித்துள்ளன. இது தொடர்பாக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் என்ன. அத்தோடு, கொரோனா கட்டுப்பாட்டுக்காக முன்வைக்கப்பட்ட சுகாதார விதிமுறைகளை தளர்த்துவது பொருத்தமானதா என்பதை அரசாங்கம் மீண்டும் சிந்திக்க வேண்டும்.

இந்த அலையில் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை மற்றும் கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பது ஒரு தீவிரமான மட்டத்தில் உள்ளது. இவற்றினால் ஏற்படும் இறப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

அத்தோடு, அனைத்து அரச ஊழியர்களையும் பணிக்கு சமுகமளிக்குமாறு கூறி அரசாங்கம் புதிய சுற்றறிக்கைகளை வெளியிட்டுள்ளது. அவ்வாறாயின் கர்ப்பிணிப்பெண்கள், சிறுவர்கள் இருக்கும் தாய்மார்களையும் சேவைக்கு வருகை தரவேண்டுமா? ஆபத்தான கொரோனா அலை உருவாகியுள்ள நிலையில் அரசாங்கம் இவ்வாறா செயற்படுவது.

டெல்ட்டா மட்டுமல்ல, டெல்ட்டா ப்ளஸ் திரிபு உருவாகுவதற்கும் வாய்ப்புள்ள நிலையில் அதனை தடுப்பதற்கு அரசாங்கத்திடம் உரிய நடவடிக்கைகள் இல்லை. இந்நிலையில் அரசாங்கம் நாட்டை திறந்து, கொரோனா நோயாளர்களையும் மரணங்களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பதற்கு முயற்சிக்கின்றது.

இனிவரும் காலங்களில் வைத்தியசாலைகளில் இடமில்லை. ஹோட்டல்களிலேயே கொரோனா நோயாளர்களை அனுமதிக்கவேண்டிவரும். ஆனால், அங்கும் உரிய வைத்திய வசதிகள் இருக்காது. ஆகவே, இது நாட்டை திறப்பதற்கான நிலைமையில்லை. மக்களின் உயிருக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், அரசாங்கம் மக்களின் உயிருடன் விளையாடுகின்றது. இதனை உடனடியாக நிறுத்திவிட்டு புதிய சுகாதார விதிமுறைகளை உருவாக்கி டெல்ட்டா அலையை கட்டுப்படுத்தி பொதுமக்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் - என்றார்.

## 7 மாதங்களில்...

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் ஆயிரத்து 516 டெங்கு நோயாளர்களும் 496 எலிக்காய்ச்சலுக்குள்ளான நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி மாதத்தில் எலிக்காய்ச்சலினால் 487 பேரும் டெங்கு காய்ச்சலினால் ஆயிரத்து 834 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மார்ச் மாதத்தில் டெங்கு நோயினால் ஆயிரத்து 741 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 797 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, ஏப்ரல் மாதத்தில் எலிக்காய்ச்சலினால் 754 பேரும் ஆயிரத்து 900 டெங்கு நோயாளர்களும், மே மாத்தில் 959 பேர் எலிக்காய்ச்சலுடனும், 297 பேர் டெங்கு நோயுடனும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஜூன் மாதத்தில் 138 பேர் எலிக்காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளதுடன், 822 பேர் டெங்கு நோயுடனும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஏழு மாதங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது எலிக்காய்ச்சலுக்கு உள்ளானவர்கள் அதிகளவில் இரத்தினபுரி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 509 பேருக்கு எலிக்காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மொனராகலை மாவட்டத்தில் 268 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 327 பேரும் எலிக்காய்ச்சலுக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், சகல மாவட்டத்திலும் இந்த நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அதிகளவான டெங்கு நோயாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 2 ஆயிரத்து 979 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 357 பேரும் கம்பஹா மாவட்டத்தில் ஆயிரத்த 18 பேரும் டெங்கு நோயினால் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்மாருக்கு...

***யோ.தர்மராஜ்***

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று மாலை கூடிய அமைச்சரவை விரிவாக ஆராய்ந்தது.

இதன்போது ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் கடந்த வாரம் நடத்திய சந்திப்பு குறித்து நீண்ட விளக்கமொன்றை அமைச்சரவைக்கு வழங்கிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதனை விளக்கும் வகையிலான அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்தார்.

தற்போதைய நிலைமையில் நாட்டில் நிதி நெருக்கடி இருப்பதால் 2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தேவையான நிதியை ஒதுக்கி ஆசிரியர்களின் பிரச்சினையை தீர்க்க அமைச்சரவை தீர்மானித்தது.

சம்பள ஆணைக்குழுவுக்கு உரிய சிபாரிசுகளை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் போராட்டத்தினால் ஏற்பட்டுள்ள மாணவர்களின் கல்வி பாதுகாப்பு குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது. அதேசமயம், ஆசிரியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவது தொடர்பில் எழுந்துள்ள நீதி பிரச்சினைகள் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு அரசால் வழங்கப்படக்கூடிய தீர்வு குறித்து மீண்டும் தொழிற்சங்கங்களுடன் இன்று பேசுவதற்கும் அமைச்சரவை தீர்மானித்தது.

1997ஆம் ஆண்டுக்குப் பின்னராக நாட்டில் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு நிலவிவரும் சம்பள உயர்வு முரண்பாடு மற்றும் சம்பள நிலுவை உட்பட கல்வியை தனியார்மயமாக்கும் கொத்தலாவல பல்கலை சட்டமூலத்தை கிழித்தெறிய வேண்டும் என்ற கோரிக்கைகளுடன், நாட்டின் தேசிய வருமானத்தில் ஆறு வீதத்தை ஆசிரியர் சேவைக்கு ஒதுக்க வேண்டும் உட்பட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நடத்திவரும் ஆசிரியர் போராட்டம் உடனடியாக முடிவுக்கு கொண்டுவரும் அவசியத்தை அமைச்சர்கள் பலரும் இங்கு வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகள் சரியான தீர்வை தராத பட்சத்தில் போராட்டத்தை தொடர்வதென ஆசிரிய தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன. அரசு ஆசிரியர்களின் பிரச்சினையை தீர்க்க அக்கறை செலுத்தாமல் இருப்பதாக அந்தச் சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின் விபரம் வருமாறு,

ஒன்றிணைந்த அமைச்சரவை பதிவு

ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்த்தல்

ஜனாதிபதியின் “சௌபாக்கிய தெக்ம” கொள்கைக்கமைய கல்வித்துறையில் சேவையாற்றுவோரின் அர்ப்பணிப்பை மதித்து அதனை அர்த்தமுள்ளதாக்குவதற்காக அவர்களின் பெரும்பாலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அனைத்து சேவைகளையும் இணைத்து தனிச் சேவையாக உருவாக்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது. முரண்பாடுகளை முதன்மையாகக்கொண்டு விசேட மற்றும் துறைசார் நிபுணர்களைக்கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு 2019.12.13ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மனித வளங்களை வடிவமைப்பதில் பிரதான சேவையை வழங்குவதில் முக்கியம் பெறுவதால் ஆசிரியர் மற்றும் அதிபர் சேவையை ஏனைய சேவைகளிலிருந்து வேறாக்கி தனிச் சேவையாக முன்னெத்துச் செல்வதற்காக SCFR282/2008 என்ற வழக்கு தீர்ப்பு வழங்கி இலங்கை உயர்நீதிமன்றம் அவதானம் செலுத்தியுள்ளதாக கல்வி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 21/1358/308/114-1 மற்றும் 2021.07.22ஆம் திகதி முன்வைக்கப்பட்ட அமைச்சரவை திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட 21/1358/308/114-1 மற்றும் 2021.07.22 ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரத்தை 2021.07.26ஆம் திகதி கூடிய அமைச்சரவையில் கலந்துரையாடி கீழ் குறிப்பிடப்படும் முடிவுக்கு வந்துள்ளது.

கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே, வர்த்தக அமைச்சர் பேராசிரியர் பந்துல குணவர்தன, கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச, வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, பெருந்தோட்டத்துறை அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண மற்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோரின் பங்குபற்றுதலுடன் தொழிற்சங்க உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, இணக்கப்பாடு எட்டப்பட்ட விடயங்களை அமைச்சரவையில் முன்வைக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2021.07.26ஆம் திகதி அமைச்சரின் தலைமையில், அரசியல் அதிகாரிகள், அரச அதிகாரிகள், ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சங்க உறுப்பினர்களுடன் நீண்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இதன்போது, கல்வி அமைச்சரினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் குறித்து தெளிவூட்டப்பட்டுள்ளது.

இதன்போது, 2021.02.19ஆம் திகதி தேசிய சம்பள சபைக்கு கல்வி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும் அந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் முறைமை மற்றும் காலம் குறித்து தெளிவுபடுத்துமாறும் ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சங்க உறுப்பினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த அனைத்து விடயங்களையும் 2021.08.02ஆம் திகதி கூடவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் முன்வைப்பதற்கும் இந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தி, காத்திரமான தீர்வொன்றை எடுப்பதற்கு அமைச்சரவையில் ஒத்துழைப்பு வழங்குவதற்கும் 2021.07.27ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## டயகம சிறுமி....

பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் ரிஷாட் எம்.பி.யின் வீட்டில் பணிபுரிந்த காலப்பகுதியின் ரிஷாட்டின் மனைவியின் சகோதரரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் வாக்குமூலமளித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிவந்த 16 வயது சிறுமி தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தொடர் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, பரிசோதனை சாட்சிகளினூடாக அடையாளப்படுத்தப்பட்ட ஒருசில காரணங்கள் தொடர்பில் தனிநபர்களிடம் வாக்கமூலம் பதிவுசெய்யும் நடவடிக்கைகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

அதேபோன்று, விசேட சட்டவைத்திய நிபுணர்கள் மூவரடங்கிய குழுவினால் முன்னெடுக்கப்பட்ட பிரேத பரிசோதனை தொடர்பான அறிக்கையும் கிடைக்கப்பெறவுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான பரிசோதனை சாட்சிகளுடன் தொடர்புடைய தொலைபேசி அழைப்பு தரவு தொடர்பான ஆய்வு அறிக்கை, ஏனைய தொழில்நுட்ப காரணங்கள் தொடர்பிலும் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினமும் அவ்வாறான இரண்டு வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. உயிரிழந்த சிறுமி உட்பட, 2019ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் டயகம பிரதேசத்திலிருந்து குறித்த தரகரினால் வீட்டுப்பணிகளுக்காக 11 பெண்கள் அழைத்துவரப்பட்டுள்ளதாக விசாரணைகளில உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் உயிரிழந்த 16 வயது சிறுமி உட்பட மூவர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் புற்றுநோயினால் உயிரிழந்துள்ளதுடன் மற்றைய பெண் வீட்டிலிருந்து வெளியேறியதன் பின்னர் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இதற்கு மேலதிகமாக ஏனைய 8 பெண்களிடமும் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இறுதி வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இந்த வாக்குமூல பதிவின்போது 22 வயது பெண் ஒருவர்தான் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய, ரிஷாட் எம்.பி.யின் மனைவியின் சகோதரர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் 29 வயதுடைய மேலுமொரு பெண்ணிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. இதன்போது அந்தப் பெண் ரிஷாட் எம்.பி.யின் மனைவியின் சகோதரரினால் தான் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவித்திருந்தார். அதுதொடர்பிலும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதுடன் குறித்த பெண்ணை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண் ரிஷாட் எம்.பி.யின் வீட்டில் 2009 மற்றும் 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றியுள்ளார். அதன்பின்னர் டயகமவுக்கு சென்று பின்னர் களனி பிரதேசத்தில் பணியாற்றி வந்த நிலையிலேயே அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இதேவேளை, இந்த பெண்ணுடன் டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமி உயிரிழந்த இடமான பொரளையிலுள்ள வீட்டில் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இநத விவகாரம் தொடர்பில் ரிஷாட்டின் மனைவியின் சகோதரரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## போராட்டங்களை...

ஸ்டாலின் தெரிவித்தார்.

அத்தோடு, ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்லாது, செயலாளரின் சுற்றுநிருபத்தை நிராகரித்து உரிய பதிலடியை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரச துறையினர் நேற்றுமுதல் சேவைக்கு சமுகமளிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், போராட்டத்தில் இறங்கியுள்ள அதிபர் மற்றும் ஆசிரியர்களும் சமுகமளிக்க வேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்டிருந்த சுற்றுநிருபம் குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பள முரண்பாடுகளை தீர்த்தல், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை நீக்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அதிபர் மற்றும் ஆசிரியர் சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்த போராட்டம் 21ஆவது நாளையும் தாண்டியுள்ளது.

கடந்த 12ஆம் திகதிமுதல் ஒன்லைன் கல்வி கற்றல் செயற்பாடுகளிலிருந்து விலகியதுடன், தற்போது உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை கோரல் செயற்பாடுகள் உள்ளிட்ட பல செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ளோம். அதேபோன்று, வலய, மாவட்ட மற்றும் கல்வி அமைச்சு அழைக்கும் எவ்வித கூட்டங்களில் இருந்தும் விலகியுள்ளோம்.

இவ்வாறு எங்களுடைய போராட்டங்களை தொடரும் நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமருடனான பேச்சுவார்த்தையின்போது, இன்று (நேற்று) கூடும் அமைச்சரவையில் உரிய தீர்வை பெற்றுத்தருவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதாக கூறினார்.

எனினும், கல்விசார்ந்த துறையினரும் பாடசாலைக்கு வருகைதருமாறு கல்வி அமைச்சின் செயலாளரினால் விசேட சுற்றுநிருபம் ஒன்று நேற்று (நேற்றுமுன்தினம்) மாலை அவசர அவசரமாக வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான அவசரம் என்ன. பாடசாலைகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளதா, பாடசாலைக்கு சமுகமளிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளதா, சில பாடசாலைகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தங்கியுள்ள நிலையில் அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனரா, இல்லை. அவ்வாறாயின் ஏன் இந்த அவசரம்.

ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வீதிக்கு இறங்கி தங்களுடைய பலத்தைக் காட்டி முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களை மழுங்கடிக்கச் செய்வதற்கான சூழ்ச்சி முன்னெடுக்கப்படுகின்றது.

செயலாளரின் இந்தச் செயற்பாடு வெட்கமடையவேண்டியது. எனினும், ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்லாது, செயலாளரின் சுற்றுநிருபத்தை நிராகரித்து உரிய பதிலடியை வழங்கியுள்ளனர்.

நாட்டிலுள்ள ஆசிரியர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணாது பாடசாலைக்கு வருகைதருமாறு அழைப்பு விடுத்துள்ளார். எனினும், ஆசிரியர்கள் சேவைக்குச் செல்லாதிருந்தமைக்கு நாங்கள் நன்றி செலுத்துகின்றோம்.

அமைச்சரவையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து, உரிய பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாய்ப்பு தருவதாக கூறியுள்ள நிலையில், இவ்வாறான சுற்றுநிருபத்தை வெளியிடுவதற்கு கல்வி அமைச்சருக்கு அதிகாரம் வழங்கியது யார்? செயலாளர் ஏன் இவ்வாறு செயற்படுகின்றார் என்பதையும் செயலாளர் வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.

## விஸா சேவைகள்....

இந்திய விஸா மற்றும் கொன்சியுலர் சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டிய திட்டமிடல்களை மேற்கொள்ளுமாறும், சில சேவைகளைப் பூர்த்திசெய்வதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேற்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உயர்ஸ்தானிகரகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விஸா மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பாக இலங்கை பிரஜைகளிடமிருந்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் பல்வேறு கோரிக்கைகளை பெற்றுள்ளது.

சாத்தியமான சகல வழிகளிலும் இக்கோரிக்கைகளுக்கு சேவை வழங்குவதில் உயர்ஸ்தானிகராலயமும், உத்தியோகத்தர்களும் வழமைபோலவே அர்ப்பணிப்புடன் உள்ளனர்.

2. இலங்கையில் தற்போது காணப்படும் சூழ்நிலை தொடர்பான உத்தியோகபூர்வ, (https://hpb.health.gov.lk/) தரவுகளுக்கு அமைவாக கொவிட் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கையும் உயிரிழப்புகளும் துரதிர்ஷ்டவசமாக அதிகரித்த நிலையில் உள்ளதுடன், டெல்டா வகையான கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் காணப்படும் நிலையிலும் பொதுமக்களின் நலன்களின் மீதான அக்கறை காரணமாக சூழலுக்கு ஏற்றவாறு அலுவலக கடமைகளை முன்னெடுப்பதற்கு உயர்ஸ்தானிகராலயம் தீர்மானித்துள்ளது. இதன் காரணமாக விஸா மற்றும் ஏனைய கொன்சியூலர் சேவைகளுடன் தொடர்புடையவை உள்ளிட்ட பொதுமக்களுக்கான சேவைகளை பூர்த்திசெய்வதில் மேலதிகநேரம் செலவிட வேண்டிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

3. மேல் குறிப்பிட்டுள்ள விடயங்களை கவனத்திற்கொண்டு உயர்ஸ்தானிகராலயத்திடமிருந்து விஸா மற்றும் கொன்சியூலர் சேவைகளை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு அதற்கமைவாக செயற்பட வேண்டுமென அறியத்தருகின்றோம்.

4. பாதுகாப்பானதும், கொவிட் சூழலுக்கு உகந்ததுமான பயணங்களின் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான மக்கள் தொடர்பினை ஊக்குவித்து மிகவும் புராதனமானதும், நெருக்கமானதுமான நட்புறவை வலுப்படுத்துவதில் உயர்ஸ்தானிகராலயம் உறுதியான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 03.08.2021 செவ்வாய்க்கிழமை – ஆடி18**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| சுப நேரங்கள் | அசுப நேரங்கள் | |
|---|---|---|
| காலை 7.54 - 8.32 | **ராகு காலம்** | **எமகண்ட காலம்** |
| மாலை 4.57 - 5.53 | பிற்பகல் 3.24 - 4.56 | காலை 9.13 - 10.46 |
| **பிரம்ம முகூர்த்தம்** 04.08.2021 | **குளிகை காலம்** | **துர் முகூர்த்தம்** |
| காலை 4.35 - 5.21 | பிற்பகல் 12.19 -1.51 | காலை 8.33 - 9.23 |

**மேடம்** – வணிக விடயங்களில் புதிய திட்டம் உருவாகலாம். வழக்குகளில் கவனம் தேவைப்படலாம். பணியிடங்களில் கோபங்களை குறைப்பதால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

**ரிஷபம்** – பணிகளில் உற்சாகம்/திறமை அதிகரிக்கும். நீண்டகால வியாபாரங்களில் இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகளின் முயற்சிகள் திருப்தி தரும்.

**மிதுனம்** – இல்லத்தில் செலவுகள் அதிகரிக்கலாம். பண விடயங்களில் சுய தேவைகளுக்கு மட்டும் வைத்திருப்பது நன்மை.

**கடகம்** – தம்பதியரிடையே மகிழ்ச்சி நிலவும். வியாபார திட்டங்களில் நன்மை. இனிமையான நாளாக அமையலாம்.

**சிம்மம்** – பணிகளில் நுட்பமான திறமைகள் உருவாகலாம். உயர்நிலை உள்ளோரின் நட்பு கிடைக்கும்.

**கன்னி** – உணவு விடயங்களிலும், பிள்ளைகளின் கல்வியிலும் கவனம் தேவைப்படலாம். பணிகளுக்கான தேர்வுகளில் நன்மை.

**துலாம்** – வேலைத்தளங்களில் பணிகள் அதிகம் உண்டாகலாம். இறைவணக்கம் நன்மை தரும்.

**விருச்சிகம்** – திருமண விடயங்களில் சுப செய்திகள் கிடைக்கக்கூடும். உயர்கல்வி பெறும் மாணவர்களும் சுப செய்திகள் கிடைக்கப் பெறலாம்.

**தனுசு** – பணியிட பதவியில் நினைத்த எண்ணங்கள் நிறைவேறலாம். வேலைகளும் சிறப்புறும்.

**மகரம்** – ஊடகங்களில் பணிபுரிவோருக்கு சுப செய்திகள் கிடைக்கக்கூடும். தம்பதியரிடையே மகிழ்ச்சி பெருகும். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம்.

**கும்பம்** – பணியிடங்களில் முயற்சி/திறமை/சிறந்த சிந்தனை அதிகம் தேவைப்படலாம். உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

**மீனம்** – பணியிடங்களில் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். தொழில் மேம்பாட்டுக்கான எண்ணங்கள் மதிப்பு பெறும்.

# பாணந்துறை வைத்தியசாலையில் ஒட்சிசன் தேவை அதிகரிப்பு



பாணந்துறை பொது வைத்திய சாலையில் கொரோனா தொற்றுக் குள்ளானோர் நாளாந்தம் அனுமதிக்கப்படுகின்ற நிலையில், அங்கு ஒட்சிசன் தேவையும் அதிகரித்துள்ளது. அந்த வைத்தியசாலையில் நேற்று மாலைவரை 30 பேருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு வருவதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாணந்துறை நகரில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் 12 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நகரத்திலுள்ள வர்த்தகர்கள் 60 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 12 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இதனையடுத்து அவர்களை தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். மேலும் அவர்களுடன் தொடர்பில் இருந்தோரை தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# பிலியந்தலை தபால்நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது

பிலியந்தலை பிரதான தபால்நிலையத்தின் அதிபர் உள்ளிட்ட அங்கு பணியாற்றும் 20 ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி இந்திக்க எல்லாவல தெரிவித்துள்ளார்.

தபால்நிலைய அதிபர் மற்றும் தபால்காரருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், ஊழியர்களுக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் மேலும் 18 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து தபால்நிலையத்தை தற்காலிகமாக மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், பொதுமக்களுக்கு சேவை வழங்குவதற்காக மாற்றுத்திட்டத்தை முன்னெடுக்குமாறு தலைமை அலுவலகத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, பிலியந்தலையில் அமைந்துள்ள உப தபாலகங்கள் சிலவற்றில் பணியாற்றும் பெரும்பாலான ஊழியர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 3,11,349 | 25,973 | 2,80,868 | 2,510 | 4,508 |

# கொரோனா நோயாளி திடீரென விழுந்து பலி

**ராகமவில் துயரம்**

ராகம பகுதியில் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்த நபர் கொரோனா நோயாளியென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ராகம பட்டுவத்த சுபசிங்க மாவத்தையில் வசித்த 62 வயதான இரு பிள்ளைகளின் தந்தையாவார் எனத் தெரியவந்துள்ளது.

இருமல் மற்றும் இருதய வலி காரணமாக ராகமவிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெறுவதற்காக அவர் சென்றுள்ளார். இந்நிலையில், அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்த அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக வைத்தியசாலைக்கு வருகைதந்தபோது மயக்கமுற்று விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் கொரோனா தொற்றை தடுப்பதற்கான முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டவரென வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

# தலவாக்கலையில் 47 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் சென்கூம்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 47 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.


லிந்துலை பொதுச் சுகாதார அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பகுதியில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட 75 அன்ரிஜன் பரிசோதனைகளில் 47 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. கொரோனா தொற்று லிந்துலை பகுதியில் தீவிரமாக பரவிவருவதன் காரணமாக எழுமாறாக பரிசோதனைகளை முன்னெடுக்க தீhமானித்ததாக பொதுச் சுகாதார அதிகாரி ஜனத் அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்றுக்குள்ளானோரில் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார். இதன் காரணமாக அவர்களை உடனடியாக தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், தொற்றுக்குள்ளானோருடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என ஜனத் அபேகுணவர்தன சுட்டிக்காட்டினார்.

# பசறை - மடூல்சீமையில் 53 பேருக்கு தொற்று

(பதுளை நிருபர்)



பசறை மற்றும் மடூல்சீமை ஆகிய பகுதிகளில் 53 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதென்று அவ்வப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

பசறை நகர் கோணக்கலை, கனவரல்லை, தொலம்பவத்தை ஆகிய இடங்களின் சந்தேகத்திற்கிடமானவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை நேற்று வெளியானபோது, 29 பேருக்கு கொவிட் -19 தொற்று உறுதியாகியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

அத்துடன், மடூல்சீமை பகுதியின் கொக்காகலை பெருந்தோட்டத்தில் 84 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையின்போது, 24 பேருக்கு கொவிட் - 19 தொற்று உறுதியாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் கொவிட்-19 தொற்று சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பட்டுள்ளதாக பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

பண்டாரவளை பகுதியின் ஊவா-ஹைலன்ஸ் தோட்டத்தில் 42 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதாகவும், அவர்கள் பிந்துனுவெள சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், பொதுச் சுகாதார பரிசோதகர் ரோய் விஜயசூரிய தெரிவித்தார்.

# திக்வெவ கிராமத்தில் புதிய கொத்தணி உருவாகும் அபாயம்

**இரகசிய திருமண வைபவம் நடத்தியதால் 52 பேருக்கு தொற்று**

அநுராதபுரம், கலென்பிந்துனுவெவ திக்வெவ கிராமத்தில் 52 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில், குறித்த கிராமத்தை தனிமைப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, அப்பகுதியில் சுகாதார விதிமுறைகளை மீறி திருமண வைபவம் ஒன்று நடத்தப்பட்டுள்ளதாக கலென்பிந்துனுவெவ பொதுச் சுகாதார அதிகாரி அருண செனவிரத்ன தெரிவித்தார்.

இதன்காரணமாக பாதிப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த கிராமத்தில் 250 குடும்பங்களைச் சேர்ந்த 756 பேர் வசிப்பதாகத் தெரிவித்த பொதுச் சுகாதார அதிகாரி, அவர்களில் 150 இற்கும் அதிகமானோர் திருமண வைபவத்தில் கலந்துகொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

திருமண நிகழ்வில் கலந்துகொண்ட அறுவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் அவர்கள் அனைவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில், மேலும் 72 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் 33 பேர் தொற்றுக்குள்ளானதாக அடையாளங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் திருமணத் தம்பதியினரும் அடங்குவதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் நேற்றுமுன்தினம் மாலைவரை அடையாளங்காணப்பட்டுள்ள 52 பேரும் திருமண நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கம்பஹாவில் 24 மணித்தியாலங்களில் 1037 பேருக்கு கொரோனா தொற்று



கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக்காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் ஆயிரத்து 37 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அந்த மாவட்டத்தில் 66 ஆயிரத்து 477 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அங்கு 15 கிராமசேவகர் பிரிவுகளிலும் அதிக எண்ணிக்கையிலான கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதனடிப்படையில் 24 மணித்தியாலங்களில் பியகமவில் 143 பேரும் வத்தளையில் 106 பேரும் கம்பஹாவில் 89 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். மேலும் மினுவங்கொடை, தொம்பே, மீரிகம, களனி ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் 89, 74, 109, 80 ஆகிய எண்ணிக்கையிலும் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், அத்தனவல்லையில் 50 பேரும் ஜாஎலவில் 49 பேரும் சீதுவவில் 48 பேரும் 24 மணித்தியாலங்களில் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொற்றுக்குள்ளானோருடன் தொடர்பில் இருந்த 15 ஆயிரத்து 916 பேரை தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கெஸ்பேவ நீதிமன்றில் 23 பேருக்கு கொரோனா

கெஸ்பேவ நீதவான் நீதிமன்றில் கடமையாற்றும் அதிகாரிகள் 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதிமன்றத்தின் முதலாம் இலக்க அறையும் இரண்டாம் இலக்க அறையும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இந்த அதிகாரிகளுக்கு கடந்த 30ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அறிக்கைகள் நேற்றுக்காலை கிடைக்கப்பெற்றுள்ளன. அதன்பிரகாரம் 23 பேர் தொற்றுக்குள்ளானதாக அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நீதிமன்றத்தில் கடமையாற்றும் மேலும் 52 பேருக்கு அன்ரிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ள சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மூடப்பட்டுள்ள நீதிமன்ற அறைகளில் இடம்பெறவேண்டிய வழக்கு விசாரணைகள் அடுத்த மாததத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.



சர்வதேச மதச் சுதந்திர விவகாரங்களுக்கான அமெரிக்கத் தூதராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரஷாத் ஹுசைனை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நியமித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் ஒரு பிரிவான சர்வதேச மதச் சுதந்திர விவகாரங்களுக்கான அலுவலகத்தின் தலைமைப் பொறுப்புக்கு வழக்குரைஞர் ரஷாத் ஹுசைனை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பரிந்துரைத்துள்ளார்.

41 வயதாகும் ஹுசைன், தற்போது தேசிய பாதுகாப்புச் சபையின் சர்வதேச கூட்டாண்மை அமைப்பின் இயக்குநராக உள்ளார். இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'அமெரிக்காவின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில், அனைத்து மதத்தினரையும் உள்ளடக்கிய அரசை உருவாக்குவதற்கான ஜனாதிபதி பைடனின் உறுதிப்பாட்டை ரஷாத் ஹுசைனின் நியமனம் பறைசாற்றுகிறது. சர்வதேச மதச் சுதந்திர விவகாரங்களுக்கான அமெரிக்கத் தூதராக நியமிக்கப்படும் முதல் முஸ்லிம் ஹுசைன் ஆவார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நீதித்துறை தேசிய பாதுகாப்புப் பிரிவில் முதுநிலை ஆலோசகராக ரஷாத் ஹுசைன் பணியாற்றியுள்ளார். ஒபாமா ஆட்சிக் காலத்தின்போது அவர் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புக்கான (ஓஐசி) அமெரிக்க சிறப்புத் தூதர், பயங்கரவாதத் தடுப்பு தகவல் தொடர்புகளுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர், வெள்ளை மாளிகை துணை ஆலோசகர் ஆகிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் விவகாரங்கள் குறித்தும் நன்கு அறிந்துவைத்துள்ள ரஷாத் ஹுசைன், மதச் சுதந்திரம் குறித்தான இலங்கை விவகாரங்கள் தொடர்பிலும் ஆராய்வாரென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. தாக்குதல்கள் வன்முறைகள்,

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஒகஸ்ட் 03ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மதச் சுதந்திரமும் இலங்கையும்!

நாசவேலை, தொல்லைப்படுத்தல், பகையைத் தூண்டும் பேச்சு மற்றும் சொத்துகளை அபகரித்தல் போன்றன மதச் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவித்தன. தேசிய பௌத்த குழுக்களாலான அறிக்கைகள் அவற்றை மேலும் தீவிரமடையச் செய்தன.

உதாரணத்திற்கு, பொதுபலசேனா, ஒரு கட்டத்தில் இலங்கை அரசாங்கம் "சிங்கள பௌத்தமாக தொடர்ந்தும் இருத்தல் வேண்டும். இது ஒரு சிங்கள நாடு. சிங்கள அரசாங்கம். ஜனநாயக மற்றும் பன்மைத்துவ விழுமியங்கள் சிங்கள இனத்தைக் கொல்கின்றன", என்று தெரிவித்திருந்தது. அதன் பின்னரான மதத்தலங்கள் மீதான தாக்குதல் அமைதியற்ற நிலையினையே உருவாக்கியது. மதங்களின் அமைதியான தன்மையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கையை எடுப்பதற்கும், அவற்றுக்கு ஊறு விளைவிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் தவறியிருக்கிறது என்பதே உண்மை.

கடந்த காலங்களில் மதச் சுதந்திரம் மீறப்பட்டபோதெல்லாம் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகங்களின் தலைமைகள் தாக்குதல் மீதான தங்கள் கரிசனைகளை வெளிப்படுத்தியும் மற்றும் இவற்றுக்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகளை வலியுறுத்தியும் வந்தன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைகூட இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்கள் மீதான அடக்குமுறையை கண்டித்து பல தடவைகள் அறிவிப்புகளை வெளியிட்டிருந்தன. ஆனால், இலங்கையில் மத ரீதியான சுதந்திரம் இன்னும் சிறுபான்மை இனங்களால் முழுமையாக அனுபவிக்கப்படாமல் உள்ளதென்பதே உண்மை.

இவற்றைவிட கொரோனா வைரஸ் நோய்க்கான (COVID-19) தொற்றுநோயானது மதச் சுதந்திரம் அல்லது நம்பிக்கையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்றும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான நடைமுறையிலுள்ள ஓரங்கட்டப்படுதல் மற்றும் பாகுபாட்டை அதிகப்படுத்தியுள்ளது. மேலும் கொவிட்-19 இனால் இறந்த முஸ்லிம்கள் மற்றும் பிற மதங்களின் உறுப்பினர்கள் அவர்களின் அடக்கம் செய்யும் மதச்சடங்கு முறைமையிலிருந்து தடுக்கப்பட்டது. முஸ்லிம்கள் மற்றும் பிற மதங்களின் உறுப்பினர்கள் தங்கள் சொந்த அடக்கம்செய்யும் மதச் சடங்குகளை செய்வதிலிருந்து தடுக்கப்பட்டனர். இவ்வாறான மத விரோதப் போக்குகள் இலங்கையில் சிறுபான்மை எண்ணிக்கையிலான இனங்களை பாதித்ததுடன் துன்பம் மற்றும் பதற்றங்களை அதிகப்படுத்தியதே அண்மைக்கால வரலாறு.

அமெரிக்காவின் புதிய பிரதிநிதி தெற்காசிய விடயங்களைகையாளும்போது இலங்கை அரசும் பல கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அவற்றுக்கு பதிலளிப்பதைவிட மக்களின் உரிமைகளை உரியவகையில் வழங்குவதே மேல். இலங்கை அதனை முதலில் செய்ய வேண்டும்.




போதைப்பழக்கத்துக்கு ஒருவர் அடிமையாகும் குற்றச் செயலில் அவரது மூளைதான் முதல் குற்றவாளி.

போதைப்பொருட்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு முன்பு நமது மூளையைப் பற்றி கொஞ்சம் விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். போதைப்பொருள் அல்லது போதைப்பழக்கத்துக்கு அடிமையாவதற்கு மூளையில் என்னென்ன மாற்றங்கள் நடக்கின்றன என்று விவரிக்கிறார் தமிழக மனநல மருத்துவர் சுபா சார்ள்ஸ்.

மனித மூளையில் போதைக்காகவே சில இடங்கள் இருக்கின்றன. அவை, அமிக்டெலா (Amygdala), எக்ஸ்டெண்டட் அமிக்டெலா (Extended Amygdala), நினைவாற்றல் திறனைக் கொடுக்கக்கூடிய லிம்பிக் சிஸ்டம் (Lymphic system). திட்டமிடல், யோசனை, உத்திகளை எப்படி உருவாக்குவது என்பது போன்ற திறன்கள் அடங்கிய Prefrontal Cortex என்கிற மூளைப்பகுதி, மற்ற மிருகங்களைவிட மனிதனுக்கே உரிய தனித்துவமான விடயம். இந்தப் பகுதி மனிதர்களின் நெற்றிப் பகுதியில் புருவங்களுக்கு மேல் அமைந்துள்ளது.

மெடுல்லா ஆப்ளங்கேட்டா (Medulla Oblongata) என்னும் மூளைப் பகுதி, தண்டுவடத்தின் மேல் பகுதியிலும் மூளையின் அடிப்பகுதியிலும் அமைந்துள்ளது. தாகத்துக்குத் தண்ணீர் குடிக்கவேண்டும், உப்பு வேண்டும் என்பன போன்ற உள்ளுணர்வுகளுக்கெல்லாம் இந்தப் பகுதி மிக முக்கியம். நடுப்பகுதியின் ஆழ மையப் பகுதியில் தொடங்கி மூளை முழுக்க போதை வஸ்துகளின் செயற்பாடுகள் விரிகின்றன.

### போதை என்பது என்ன?

போதை பல விடயங்களில் கிடைக்கலாம். சிலருக்கு சில எண்ணங்களே மகிழ்ச்சியைக் கொடுக்கலாம். கற்பனைத் திறன், கிரியேட்டிவிட்டி போன்றவை அடங்கிய எண்ணங்கள் சந்தோஷத்தையும் ஒரு வகையான போதையையும் கொடுக்கும். பாலியல் தூண்டுதல் உள்ளிட்ட சில உணர்வுகளும் போதையைக் கொடுக்கும். சில உணவுகளை ருசிக்கும்போது மீண்டும் மீண்டும் அதற்கு நாக்கு ஏங்கலாம். மகிழ்ச்சி, பேரானந்தம், மீண்டும் மீண்டும் அந்த நிலையை அடையவேண்டும் என்கிற ஆசையே போதை என்பது.

சிலருக்கு சில செயல்கள் போதையைத் தரும். அவருக்கு அந்தச் செயல்களைச் செய்தால்தான் மனது நிம்மதியடையும். இதனால் மனப்பதற்ற குறைபாடுகளில் ஒன்றான Obessive Compulsive Disorder (OCD) ஏற்படலாம். ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்யும் பழக்கத்துக்கு அடிமையாவார்கள். தான் செய்வது சரியானது இல்லை. இப்படிச் செய்யக் கூடாது என்று நன்கு தெரிந்தாலும், அந்த உணர்வைக் கட்டுப்படுத்த முடியாமல் அதற்கு அடிமையாகிவிடுவார்கள்.

### அடிமைத்தனம் ஏன் ஏற்படுகிறது?

காட்டில் ஒரு யானைக்கூட்டம் இருக்கிறது. அவை வசிக்குமிடத்தில் தண்ணீர் இல்லை என்று வைத்துக் கொள்வோம். தண்ணீரைத் தேடி கூட்டமாகச் செல்கின்றன. பல இடங்களுக்கு அலைந்து திரிந்த பிறகு மிகவும் ரம்மியமான சூழலில் நீர்வீழ்ச்சியுடன்கூடிய தடாகத்தைப் பார்க்கின்றன. அங்கு அவை பருகும் தண்ணீர் உயிரளிக்கக்கூடிய விதமாக இருக்கும். மனது ஆனந்த நிலையை அடையும்போது டோபமைன்' (Dopamine) என்ற மகிழ்ச்சி ஹோர்மோன் சுரக்கும். மூளையில் இந்த ஹோர்மோன் சுரக்கும்போது கிளர்ச்சி ஏற்பட்டு மகிழ்ச்சியான அனுபவம் கிடைக்கிறது. ஞாபகம் வைக்கும் மூளையின் பகுதியான hippocampusஇல் வழித்தடங்களை ஞாபகம் வைத்துக்கொள்ளக்கூடிய செல்கள் எல்லாம் தூண்டப்பட்டு, அந்த வழியை நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்ளும்.

கூட்டத்திலுள்ள அனைத்து யானைகளுக்கும் மகிழ்ச்சியளித்த, கிளர்ச்சியுடன்கூடிய அந்த நினைவு நன்றாக மூளையில் பதிந்துவிடும். அந்த நினைவு மூளையில் ஒருங்கிணைக்கப்படுகிறது. பின்பு யானைக்கூட்டம் தங்கள் வழக்கமான இடத்துக்குக் கிளம்பிப்போய் விட்டன. ஆனால், மீண்டும் தாகம் எடுக்கும்போது எந்தவித வழிகாட்டலும் இல்லாமல் அதே வழித்தடத்தில் அந்தத் தடாகத்துக்கு வந்து தண்ணீரைக் குடிக்கும். மீண்டும் தாகம் ஏற்படும்போது மனதில் உடலில் அமைதி பெறுவதற்காக மீண்டும் மீண்டும் அந்த இடத்துக்குச் செல்லும்.

போதைமருந்தும் இதே வேலையைத்தான் செய்கிறது. பொதுவாக, போதைக்கு அடிமையாகும் வயது 10 முதல் 12 என்கின்றனர். இதே வயதையொத்த ஒரு சிறுவன் பெற்றோர் திட்டியதாலோ, ஆசிரியர் திட்டியதாலோ சோர்வாக இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனின் நண்பன் வந்து, காரணத்தைக் கேட்டறிந்து, சரி இதெற்கெல்லாம் சோர்வாகாதே. வா! விளையாடப் போகலாம். கிரிக்கெட் விளையாடி ஸ்ட்ரெஸ் ஸைப் போக்கலாம் என்று கூறி அவனை அழைத்துச் செல்கிறான்.

விளையாடும்போது மகிழ்ச்சியைக் கொடுக்கும் டோபமைன், செரடோனின் ஹோர்மோன்கள் அதிகம் சுரக்கும். பந்தைக் கூர்ந்து, பார்த்து மட்டையை அடிக்கும்போது செயல்திறன், கவனம் குவிதலைக் கொடுக்கக்கூடிய அசிட்டைல்கோலைன் (Acetylcholine) இரசாயனங்களும் மூளையில் சுரக்கும். அவன் விளையாடி, பின்பு ஓய்வெடுத்து மனநிலையை சீராக்கிக்கொள்கிறான். எதிர்காலத்தில் இதேபோன்று பிரச்சினைகள் ஏற்படும்போதும் இதே வழியைப் பின்பற்றி நல்லவிதமாக அதைக் கடந்து வருவதற்கு அவனது மனம் பழகும்.

மனித மூளை விசித்திரமானது. எந்தவொரு விடயம் மகிழ்ச்சியை, உற்சாகத்தைத் தருகிறதோ, அதை மீண்டும் மீண்டும் தேடிப்போக நினைக்கும்.

இதே சூழலில் மனது துவண்ட நிலையில் வேறொரு சிறுவன் இருக்கிறான். சோர்வடைந்த மனதுடன் இருக்கும் அவனை உற்சாகப்படுத்த கவலையை மறக்க புகை, மது அல்லது போதைப் பழக்கத்தைக் கற்றுக்கொடுக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். தனக்கான ஒரே நண்பன் அல்லது அவனுடைய நெருக்கம் தேவைப்படும் நிலையில் அவன் சொல்வதைச் செய்வது தீங்கானது என்று உள்ளுணர்வு சொன்னாலும் அதைச் செய்யவேண்டும் என்ற மனநிலைக்கு வந்துவிடுவான்.

நண்பன் சொல்லும் விடயத்தில் என்னதான் இருக்கிறது என்று முயன்றுதான் பார்ப்போமே என்றும் நினைத்து அதை முயற்சி செய்வான். முதலில் இந்தப் பழக்கத்தைக் கற்றுக்கொடுப்பவர்கள் இலவசமாகவே அதைப் பயன்படுத்தக் கொடுப்பார்கள். வழக்கமாக இதுபோன்ற பழக்கங்கள் நண்பர்கள் மூலம் அல்லது தன் வயதினர், சக ஊழியர்கள், சக மாணவர்களால் ஏற்படும்.

உங்கள் மூளையையும் நடத்தையையும் வாழ்க்கையையும் பாதிக்கும் போக்குதான் அடிமைத்தனம். குறிப்பாக, போதைமருந்துகளுக்கு ஒருவர் அடிமையாகும்போது அவை ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பது தெரிந்தாலும் அவற்றுக்கு அவர் அடிமையாகிவிடுவார். எவ்வளவு சீக்கிரம் அதிலிருந்து மீள்கிறீர்களோ, அவ்வளவு சீக்கிரம் அவற்றின் ஆபத்துகளிலிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தையும், இந்தச் சமூகத்தையும் பாதுகாக்கிறீர்கள்

### எது அடிமைத்தனம்?

உங்கள் மூளையையும் நடத்தையையும் வாழ்க்கையையும் பாதிக்கும் போக்குதான் அடிமைத்தனம். குறிப்பாக, போதைமருந்துகளுக்கு ஒருவர் அடிமையாகும்போது அவை ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பது தெரிந்தாலும் அவற்றுக்கு அவர் அடிமையாகிவிடுவார். எவ்வளவு சீக்கிரம் அதிலிருந்து மீள்கிறீர்களோ, அவ்வளவு சீக்கிரம் அவற்றின் ஆபத்துகளிலிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தையும், இந்தச் சமூகத்தையும் பாதுகாக்கிறீர்கள்.

போதைமருந்து அடிமைத்தனம் என்பது ஹெரோயின், கொக்கெய்ன் அல்லது சட்டத்துக்குப் புறம்பான போதை வஸ்துகளுக்கு அடிமையாவதை மட்டும் குறிப்பதில்லை. நிகோடின், எல்கஹோல், தூக்க மருந்துகள், பதற்றத்தைக் குறைக்கும் மருந்துகள் எல்லாம் இதில் அடக்கம். இவ்வளவு ஏன்... இருமல் மருந்துகள், சிலவகை வலி நிவாரணிகள்கூட ஒருவரை அவற்றுக்கு அடிமையாக்கலாம்.

போதையை ஏற்படுத்தும் மேற்குறிப்பிட்ட எந்த ஒன்றையும் முதல் முறை எடுத்துக் கொள்ளும்போது, சும்மா ஒருமுறை முயற்சிசெய்து பார்ப்போமே... என் கன்ட்ரோல் என்கிட்டதானே இருக்கு... நானாவது அடிமையாகிறதாவது... என்ற எண்ணத்தில்தான் ஆரம்பிப்பார்கள். ஆனால், அந்த முதல் உபயோகமே உங்களைச் சும்மா விடாது. மீண்டும் மீண்டும் உபயோகிக்கத் தூண்டும். உங்கள் மூளையை மழுங்கடிக்கும். உடல் ரீதியாகவும் அவை ஏற்படுத்தும் விளைவுகள் நீண்டநேரம் நீடிக்கும். ஒரு கட்டத்தில் கட்டுப்பாட்டை இழப்பார்கள். அதன் விளைவாக அவர்களின் நடத்தைகளில் மாறுபாடு ஏற்படும்.

ஆங்கிலத்தில் துஷ்பிரயோகம் என்போம். அதுதான் துஷ்பிரயோகம். அதாவது, ஒன்றைச் செய்யக்கூடாத வழிகளில் செய்வது. உதாரணத்துக்கு ஒருவர், தனக்கு மருத்துவர் பரிந்துரைத்த மாத்திரை, மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்துவது அல்லது மற்றவர்களுக்குப் பரிந்துரைத்த மருந்துகளைத் தானும் எடுத்துக் கொள்வது. அப்படி எடுத்துக் கொள்வதால் அந்த நபருக்கு ஒருவித நிம்மதி கிடைக்கலாம், மன அழுத்தம் குறைவதாக உணரலாம் அல்லது கற்பனை உலகில் பயணிக்க உதவலாம். செயற்கையான, தற்காலிகமான இந்தப் பழக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிவது எளிது. மன உறுதியும் சரியான வழிகாட்டுதலும் இருந்தால் வெளியே வந்துவிடலாம்.

அடிமைத்தனம்... அதாவது ஈடுபாடு என்பது ஒருவரால் மீள முடியாத நிலை. அந்த நிலை அவரது ஆரோக்கியத்தைக் கேள்விக்குறியாக்கி, உளவியல் ரீதியான சிக்கல்களை, பொருளாதார சிக்கல்களை, உறவுச் சிக்கல்களை ஏற்படுத்தும். உபயோகிக்கும் போதை வஸ்துவைச் சுற்றியே சிந்தனை சுழலும். அது தவறு, அதிலிருந்து மீள வேண்டும் என நினைத்தாலும் முடியாது.

இதற்கும் பழக்கப்பட்டுப் போதலுக்கும் வித்தியாசம் உண்டு. ஒரு பழக்கத்தை நிறுத்த முற்படும்போது வித்ட்றோவல் சிம்ப்டம்ஸ் (Withdrawal Symptoms) எனும் அறிகுறிகள் தோன்றும். பழக்கப்பட்டுப்போதல் என்பது, தொடர்ந்து பயன்படுத்துகிற ஒரு பொருளின் செயல்திறன் காலப்போக்கில் குறையும்போது ஏற்படுவது. உதாரணத்துக்கு ஒருவர் மருத்துவர் பரிந்துரையின்பேரில் நீண்டகாலமாக வலி நிவாரணி எடுத்துக்கொள்கிறார் என வைத்துக்கொள்வோம். அதற்கு அவர் அடிமையானதாக அர்த்தமில்லை. அதாவது, முறையான மருத்துவப் பரிந்துரையின்பேரில் எடுத்துக்கொள்ளப்படும் பட்சத்தில் போதையைத் தரும் மருந்துகளாக இருந்தாலும் அவை எல்லோரையும் அடிமையாக்கிவிடுவதில்லை.

### மூளையில் என்ன நடக்கிறது?

மூளை விசித்திரமானது. எந்தவொரு விடயம் மகிழ்ச்சியை, உற்சாகத்தைத் தருகிறதோ, அதை மீண்டும் மீண்டும் தேடிப்போக நினைக்கும். போதையை ஏற்படுத்தக்கூடிய மருந்துகள் உங்கள் மூளையின் ரிவார்ட் சிஸ்டத்தை (Reward System) குறிவைப்பவை. மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய டொபமைன் எனும் ஹோர்மோனை அதிகளவில் சுரக்கச் செய்வதோடு, போதைவஸ்துகளைத் தேடி உங்களைத் துரத்துபவை. ஒரு கட்டத்தில் அந்தக் கிளர்ச்சியான உணர்வு போதாமல், இன்னும், இன்னும் என உங்கள் உள்ளம் வருந்தி ஏங்கத் தொடங்கும்.

அதிகளவிலான போை மருந்துகளை எடுக்கப் பழகுவீர்கள். அந்தப் போதை தரும் இன்பத்துக்கு, உங்கள் குடும்பம், உறவுகள், நட்பு என எதுவுமே இணையில்லை என நினைக்க ஆரம்பிப்பீர்கள். ஒருவிஷயத்தில் முடிவெடுப்பது, அதிலுள்ள நியாய அநியாயங்களை அலசுவது, நினைவாற்றல், கற்றுக் கொள்ளும் ஆர்வம் என உங்கள் எல்லா நற்குணங்களும் மழுங்க ஆரம்பிக்கும்.

### யாரெல்லாம் அடிமையாக வாய்ப்புகள் அதிகம்?

ஒவ்வொரு மனிதனின் மூளையும் உடலமைப்பும் வேறுவேறு. போதை அடிமைத்தனத்துக்கு அவர்கள் எப்படி எதிர்வினையாற்றுகிறார்கள் என்பதும் நபருக்கு நபர் வேறுபடும். ஒருமுறை போதைவஸ்துவை முயற்சி செய்கிற எல்லோருமே அதற்கு அடிமையாகிவிடுவதில்லை. ஆனால், அதையும் மீறி அடிமையாகிறவர்கள் எந்த வயதிலும் வாழ்வின் எந்தக் காலகட்டத்திலும் இருப்பார்கள். குடும்பப் பின்னணியில் யாருக்கேனும் மது, போதைப் பழக்கம் இருந்தால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பிறருக்கும் அது வரலாம். இதில் மரபணுக்களுக்கும் பங்குண்டு.

மிக இளவயதில் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகிறவர்களுக்கு, (உதாரணத்துக்கு குழந்தைகள்) அது பல வருடங்கள் தொடர வாய்ப்பிருக்கிறது. உளவியல் ரீதியான பிரச்சினைகள் உள்ளவர்களும் போதை அடிமைத்தனத்துக்கு எளிதில் இலக்காகிறார்கள். உளவியல் பாதிப்புகளிலிருந்து மீள முறையான சிகிச்சைகளை எடுக்காமல், போதைப் பழக்கத்தைத் தீர்வாக நாடுவார்கள். அது மனநலனை மேலும் பாதித்து பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கும். குடும்ப அமைப்பில் சுமுக நிலை இல்லாதவர்கள், உறவுச் சிக்கல்களைச் சந்திப்பவர்கள் போன்றோரும் போதைக்கு அடிமையாகும் வாய்ப்புகள் மிக அதிகம்.

நன்றி - விகடன்

## மக்கள் கடிதம்

வாசகர்களே ,

உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.

பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

# ஜப்பானால் அன்பளிப்பு செய்யப்பட்ட எஸ்ட்ராசெனிகாவின் அடுத்த தொகுதி எதிர்வரும் சனிக்கிழமை நாட்டுக்கு






ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்வைத்த கோரிக்கைக்கமைய ஜப்பான் அரசாங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகளின் அடுத்த தொகுதி, எதிர்வரும் சனிக்கிழமை நாட்டுக்குக் கொண்டுவரப்படவுள்ளதாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அக்கிரா சுகியாமா (Akira Sugiyama) தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கடந்த சனிக்கிழமை நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகளை, நேற்று ஜனாதிபதியிடம், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து உத்தியோக பூர்வமாக கையளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் கோரிக்கை தொடர்பில் விசேட கவனம் செலுத்தியும் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை நினைவுகூர்ந்தும் ஜப்பான் பிரதமரின் தலையீட்டின்பேரில், இந்த 1,456 மில்லியன் தடுப்பூசிகளை இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டதாக தூதுவர் அக்கிரா சுகியாமா மேலும் தெரிவிததுள்ளார்.

இதன் முதல் தொகுதியான 7 இலட்சத்து 28 ஆயிரத்து 460 தடுப்பூசிகள், ஸ்ரீலங்கன் விமானசேவைக்குச் சொந்தமான UL- 455 விமானத்தின்மூலம், கட்டுநாயக்க விமான நிலயத்துக்கு அனுப்பப்பட்டிருந்தன.

நேற்று முதல் மேல் மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட 20 மத்திய நிலையங்களில், இந்தத் தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்ற சில மணித்தியாலங்களுக்குள்ளேயே தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதல் மற்றும் இலங்கையின் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள், அதற்கு நாம் வழங்கிவரும் தலைமைத்துவம் என்பன தொடர்பாக ஜப்பான் தூதுவர், உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெப் நிறுவனங்களின் இலங்கைப் பிரதிநிதிகள், பெரிதும் பாராட்டியுள்ளனர்.

கடந்த மே மாதம், தனிப்பட்ட முறையில் ஜப்பான் தூவரிடம் நான் முன்வைத்த கோரிக்கைக்கு சாதகமாகப் பதிலளித்து, எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகளை அன்பளிப்புச் செய்தமைக்காக இலங்கை அரசாங்கத்தினதும் மக்களினதும் பிரத்தியேக நன்றியை ஜப்பான் பிரதமருக்கும் ஜப்பான் அரசாங்கத்துக்கும், ஜப்பான் தூதுவருக்கும் ஜனாதிபதி தெரிவித் துள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி அலக்கா சிங்(Alaka Singh), யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி எமா பிரிகம் (Emma Brigham), ஜப்பான் தூதுவராலயத்தின் முதல் செயலாளர் ஷிஹாரு ஹோசியாய் (Chiharu Hoshiai), இரண்டாவது செயலாளர் செய்யா நினோமியா (Seiya Ninomiya), வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# மட்டு. பாலையடிவட்டை பகுதியில் காட்டு யானை புகுந்து அட்டகாசம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள போரதீவுப்பற்று பிரதேசத்தின் எல்லைக் கிராமமான பாலையடிவட்டை பகுதியில் நேற்று முன்தினம் இரவு புகுந்த காட்டுயானை அங்கிருந்த பயன்தரும் பல மரங்களை அழித்துவிட்டுச் சென்றுள்ளதாக கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் மாலைவேளையானதும் தொடர்ச்சியாக காட்டுயானைகளின் தொல்லைகளும், அட்டகாசங்களும் அதிகரித்துவருகின்றன. இவ்வாறு கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானையால் அப்பகுதி மக்கள் பெரும் அல்லோல கல்லோலப்பட்டுள்ளனர்.

திடீரென மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த காட்டு யானையை மக்கள் ஒன்றிணைந்து துரத்துவதற்கு முனைந்துள்ளபோதிலும், அந்த யானை அங்கிருந்த பயன்தரும் தென்னை, வாழை, பப்பாசி உள்ளிட்ட பல மரங்களை அழித்து துவம்சம் செய்துவிட்டு ஒருவாறு கிராமத்தை விட்டு நகர்ந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மிக நீண்டகாலமாக தாம் எதிர்கொண்டுவரும் இந்த காட்டு யானை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை எடுத்துக்கூறியும் அது இற்றைவரையில் தீர்க்கப்படாமல் தொடர்கதையாகவுள்ளமை தமக்கு மிகுந்த வேதனையளிப்பதாக அப்பகுதிவாழ் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.





# சி.ஐ.டியில் ஆஜராகுமாறு கரைச்சி பிரதேச சபை தவிசாளருக்கு அழைப்பாணை

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனிடம் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காக வருகை தருமாறு பயரங்கரவாத தடுப்புப் பிரிவினரால் அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றினை பெறுவதற்காக எதிர்வரும் 06ஆம் திகதி கிளிநொச்சியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு அவருக்கு கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

# வத்தளையில் 24 மணிநேர நீர்வெட்டு

(பேருவளை நிருபர்)

வத்தளை பிரதேசத்தில் இன்று காலை 10 மணிமுதல் நாளையதினம் முற்பகல் 10 மணிவரை 24 மணிநேர நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

ஹெந்தலை பாலத்தின் வழியாக நீர் குழாய் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இந்த நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக அந்தச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வத்தளை - நீர்கொழும்பு வீதியில் சில பகுதிகளில், மாபோலையில் ஒரு பகுதி, வெலிக்கடமுல்ல, ஹெந்தலை, வீதி, நாயகந்த சந்தி வரையிலான கிளை வீதிகள், எல்விஸ் ஒழுங்கை, மருதானை வீதி, புவக்வத்த வீதி, கலகஹதுவ, கெரவலப்பிட்டியவில் சில பகுதிகளில் இந்த நீர்வெட்டு அமுல்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புவக்பிட்டிய பென்றித் தோட்டத்தில் மரக்கறி வியாபாரிக்கு இடையூறு

## பிரதேச நிர்வாகத்தால் அடாவடி செயற்பாடு

(ரா.கமல்)

புஸ்ஸலாவ பெருந்தோட்ட கம்பனிக்கு உட்பட்ட அவிசாவளை புவக்பிட்டிய பென்றித் தோட்ட நிர்வாகத்தின் குரோத செயற்பாட்டால் மரக்கறி வியாபாரியின் வாழ்வாதாரம் ஒருநாள் முழுமையாக பாதிப்படைந்துள்ளது.

பென்றித் தோட்டத்தைச் சேர்ந்த ராஜமாணிக்கம் ரகுமான் என்பவர் இந்த இடர்காலத்தில் தமது வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளதால் அவிசாவளை - கொழும்பு பிரதான வீதியில் கிரிவந்தல பென்றித் தோட்டத்திற்கு செல்லும் பாதையின் முகப்பில் தமது முச்சக்கரவண்டியில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். தனது மனைவியுடன் 9 மாத கைக்குழந்தையையும், ஒன்றரை வயதுடைய குழந்தையுடன் சிறிய குடும்பமாக வாழ்ந்துவரும் இவர் தொழிலின்றி சுயமுயற்சியாக இவ்வாறு மரக்கறி விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், தோட்ட நிர்வாகம் இவருக்கு வியாபாரத்தை செய்யவிடாது கடந்த வெள்ளிக்கிழமை முழுவதும் தோட்ட ட்ரக்டர்



மற்றும் லொறிமூலம் வியாபாரத்தை இடையூறு செய்யுமுகமாக மூன்று பக்கமும் மறைத்து வங்குரோத்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த வியாபாரி தமக்கு தீர்வை பெற்றுத்தருமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அண்ணாமலை பாஸ்கரனிடம் வேண்டுகோள் விடுத்ததையடுத்து, அவர் உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகைதந்து தோட்ட முகாமையாளருடன் கலந்துரையாடி, மறைத்திருந்த வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் தொடர்ந்து வியாபாரத்தை மேற்கொள்வதற்கும் தீர்வை பெற்றுக் கொடுத்துள்ளார்.

# மாவனல்லையில் ஆசிரியர்கள் 3500 பேருக்கான முதலாவது தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று

மாவனல்லை கல்வி வலயத்திலுள்ள தமிழ், சிங்கள மொழி மூல 138 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 3500இற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான கொவிட் - 19 (கொறொனா) முதலாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நேற்று அரநாயக்க, ரம்புக்கனை பின்னவலை மத்திய கல்லூரி, மாவனல்லை மயுரபாத மத்திய கல்லூரி மற்றும் மாவனல்லை பொதுச் சுகாதார பணிமனை ஆகிய நான்கு நிலையங்களில் இடம்பெற்றன.

மாவனல்லை கல்வி வலயத்திற்குள் இயங்கி வருகின்ற மேற்படி 138 பாடசாலைகள் உட்பட சர்வதேச கல்லூரிகள், பாலர் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் உள்ளடங்கலாக இந்த தடுப்பூசி ஏற்றல் நடைபெற்றது. முதலாவது தடுப்பூசியாக ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்ட எஸ்ட்ராசெனிகா ஊசி ஏற்றப்பட்டது.

அதேநேரம் மாவனல்லை பிரதேசத்தில் இதுவரையில் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள், கைத்தொழில் நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள், அரசாங்க திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்கள் உள்ளடங்கலாக சுமார் 90,000 பேர்களுக்கு மேற்பட்டவர்களுக்கு இதுவரையில் முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டிருப்பதாக மாவனல்லை பொதுச் சுகாதார பணிமனையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரையில் மாவனல்லை பிரதேசத்தில் 73 கிராமசேவகர் பிரிவுகளையும் சேர்ந்த சுமார் 1530 பேர் அளவில் கொறொனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதோடு 43 பேர் அளவில் மரணமடைந்துள்ளனர்.

அத்துடன், மாவனல்லை பிரதேச சபையைச் சேர்ந்த சில ஊழியர்களுக்கும் கொறொனா வைரஸ் தொற்று ஏற்பட்டும் மேலும் பலர் தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப் பட்டிருக்கின்ற காரணத்தால் மாவனல்லை பிரதேசத்தில் தினசரி குப்பைகளை சேகரிக்கும் பணி சில தினங்களுக்கு தடைப்படுவதால் ஒவ்வொருவரும் அவரவர் வீடுகளிலேயே குப்பைகளை அழித்துவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவனல்லை பிரதேச சபையின் பிரசாரப் பிரிவு நேற்று திங்களன்று அறிவித்தல் செய்திருக்கின்றது.




சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி களனி தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தோட்டத் தொழிற்சாலை முன்பாக இடம்பெற்றது. தோட்டத் தொழிற்சாலையில் முன்பாக ஆரம்பமாகிய பேரணி, தோட்ட காரியாலயம் வரை சென்றது. (படம் - அருண் யுகேஷ்)

# வடக்கில் 69 பேருக்கு கொரோனா!

யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 50 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், வடமாகாணத்தில் மொத்தமாக 69 பேருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் நேற்று 351 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேருக்கும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேருக்கும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் 07 பேருக்கும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 03 பேருக்கும் கொரோனா தொற்று உறதிப்படுத்தப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 03 பேர், உருத்திரபுரம் பிரதேச வைத்திய சாலையில் ஒருவர், அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் ஒருவர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 05 பேர், முல்லைத் தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் முல்லைத்தீவு தனிமைப் படுத்தல் நிலையத்தில் (இராணுவத்தினர்) 06 பேர் என் அடிப்படையில் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.




உயர்ந்தபட்ச சம்பளம் தொடர்பான தேசிய சட்டத்துக்கு அரசாங்கம் உடனடியாக வீட்டுப் பணியாளர்களை இணைத்துக்கொள்ள வேண்டும் எனவும் உயிரிழந்த டயகம சிறுமி ஹிஷாலினி விவகாரம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தி வீட்டு வேலை தொழிலாளர் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்று நாரஹேன்பிட்டி தொழில் அமைச்சின் செயலாளர் அலுவலகத்தின் முன்னால் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)



ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரியும் கொத்தலாவல சட்டமூலத்தை இரத்துச்செய்யக் கோரியும் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்று அனுராதபுரம், கெக்கிராவ நகரில் இடம்பெற்றது. (படங்கள் : அனுராதபுரம்)



ஐக்கிய புலமைத்துவ ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட “இலவச கல்வியை பாதுகாத்திடு, கொத்தலாவல சட்டமூலத்தை மீளப் பெறு” எனும் தொனிப்பொருளிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – கிரிஷான் காரியவசம்)

## இறந்த மாணவனுக்கு நீதிகோரி இரத்தினபுரியில் ஆர்ப்பாட்டம்



(மஹிந்த குமார்)

இரத்தினபுரி பம்பரலகந்த தோட்டத்தில கடந்த 25ஆம் திகதி 15 வயதுடைய மாணவன் ஒருவன் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளான். அந்த மாணவன் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் என்ன, தற்கொலை செய்து கொண்டு உயிரிழக்கவில்லை, மாணவனை கொலை செய்திருக்கலாம் என சந்தேகத்தில் மாணவனின் குடும்பத்தார் சில சந்தேகநபர்கள் மீது சந்தேகம் உள்ளது என்று வெவல்வத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

எனினும், பொலிஸ் அதிகாரிகள் இதுவரையிலும் இரு தரப்பினரிடமும் விசாரணை செய்யாத காரணத்தினால் நேற்று அத்தோட்ட மக்கள் மற்றும் மாணவனின் உறவினர்கள் நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். சுமார் 200 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். பம்பரலகந்த தோட்டத்திலிருந்து சுமார் 6 கிலோமீற்றர் தூரம் பேரணியாக கம்பியடி பிரதேசத்திற்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்கு வந்த வெவல்வத்த பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

## ஆசிரியர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் விரைவில் தீர்வு காண்பது அவசியம்

### உதயகுமார் எம்.பி. வலியுறுத்து

நாட்டில் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் ஆசிரியர்கள் சேவையாற்றும் எங்களது ஆசிரிய சமூகத்தின் நியாயபூர்வமான கோரிக்கைகளை அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது மிகவும் அவசியமாகும் - என நுவரெலியா நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கத்துக்கும் ஆசிரியர் சங்கங்களுக்கும் இடையே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்துமுடிந்துள்ள போதும் எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை. பலரது வாழ்வின் உயர்வுக்கு உந்துசக்தியாக இருக்கின்ற எமது ஆசிரியர் சமூகத்தின் கோரிக்கைகள் உன்னிப்பாக அவதானிக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில், நம் நாட்டின் ஆசிரியர்கள் பெரும் வேதனத்தை விட அவர்கள் 2, 3 மடங்கு அதிகமான சம்பளம் பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது ஏன்? எமது நாட்டின் அரச துறையினரும் தனியார்துறையினரும்



அனுபவிக்கின்ற சலுகைகள் எமது ஆசிரியர் சமூகத்துக்கு கிடைப்பதில்லை? இவர்கள் குறைந்த சம்பளத்துடன், அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள். தனது வாழ்நாளில் அனைவரின் உயர்வுக்காக பாடுபட்ட ஆசிரியர் சமூகம் கடைசிவரையும் வறுமையின் பிடியில் சிக்குண்டவர்களாவே இருக்கின்றது.

எனவே, ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு சமூகத்தின் தலைசிறந்த பிரஜைகளாக வாழ அரசாங்கம் வழிசமைக்க வேண்டும். இல்லையெனில், பல சமூகப் பிரச்சினைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஆசிரியர்களின் அறவழிப் போராட்டம் நாட்டின் அனைத்து பாகங்களிலும் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டு கடந்த முதலாம் திகதி நுவரெலியாவில் மாபெரும் கண்டனப் பேரணியாக மாறி அரசாங்கத்தை அச்சுறுத்தும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட பலர் முறையற்ற வகையில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தால் விடுதலைசெய்த பின் பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது.

1997ஆம் ஆண்டுமுதல் நிலவிவரும் சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டும், சம்பள உயர்வு வாழ்க்கைச் செலவுக்கேற்ப அமையவேண்டும், குறைந்தளவிலான வட்டியுடன் வீட்டுக்கடன் உதவி, ஆசிரியர்களுக்கான முழு ஓய்வூதியம், உரிய பாதுகாப்பின்றி பாடசாலைகளை மீள் ஆரம்பிக்கக்கூடாது மற்றும் கொத்தலாவல பல்கலைக்கழக தீர்மானத்தை மீளப்பெறுதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்போராட்டம் நியாயபூர்வமாக தகுந்த முறையில் தீர்க்கப்படாவிட்டால் அரசு பல சமூக பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும் - என்றார்.

## மவுசாகலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறப்பு



(எம். கிருஸ்ணா)

மவுசாகலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் நேற்று திறக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த மத்திய நிலையப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி நீர்த்தேக்கத்தில் திருத்தவேலைகள் இடம்பெறவுள்ளதால் அவ்வப்போது வான்கதவுகள் திறந்து மூடப்படும் எனவும் தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு இவ்வாறு வான்கதவுகள் திறக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்நாட்களில் மேற்படி நீர்த்தேக்கத்திற்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் மேற்படி அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஹிஷாலினிக்காக... தொடரும் போராட்டங்கள்!

### குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

(இரா.யோகேசன், செ.தி.பெருமாள்)

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் உயிரிழந்த சிறுமி ஹிசாலினியின் மரணத்திற்கு நீதி கோரி வட்டவளை கரோலினா தோட்ட நிர்வாகத்திற்குட்பட்ட கரோலினா இரண்டாம் கட்டை, தியகல, அகரவத்தை, கடவளை, பின்னோயா ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் கரோலினா இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கரோலினா தேயிலை தொழிற்சாலைக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் முன்னெடுத்தனர்.

இதன்போது பல்வேறு வகையில் எழுதியிருந்த பதாகைகளை ஏந்தியிருந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி வேண்டும், குற்றவாளி தண்டிக்கப்படல் வேண்டும் என்ற கோஷங்களையும் எழுப்பினர்.



வட்டவளை கரோலினாவில்...

### சிறுவர்களுக்கெதிரான வன்முறையை தடுத்துநிறுத்துக!



பொகவந்தலாவையில்...

(எம்.கிருஸ்ணா)

உயிரிழந்த டயகமவைச் சேர்ந்த ஹிஷாலினியின் இறப்புக்கு உரிய நீதி கிடைக்கவேண்டி பொகவந்தலாவை, பொகவான தோட்டத் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8 மணிமுதல் 8.30 மணிவரை தோட்டத் தொழிற்சாலைக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

பெண்கள், சிறுவர்களுக்கெதிரான வன்முறையை தடுத்துநிறுத்து, உரியவர்களுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்வைத்தனர்.

### பணிப்பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்க!

லிந்துலையில்..





(க.கிஷாந்தன்)

டயகம சிறுமி ஹிஷாலினிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோஷத்துடன் நேற்றுக் காலை பணிக்கு செல்லாது லிந்துலை மட்டுக்கலை தோட்டத் தொழிலாளர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 9.30 மணிக்கு மட்டுக்கலை தேயிலை தொழிற்சாலை அருகிலிருந்து ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதிவரை பேரணியாக சென்று தமது போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

பேரணியில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். இறுதியில் மரணித்த ஹிஷாலினிக்கு நீதி கிடைக்கவும் ஆத்ம சாந்திக்காகவும் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன.

அத்துடன், வீட்டுப் பணியாளர்களாக செல்லும் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்தும், பெண்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியும் இதன்போது குரல் எழுப்பட்டது.






**ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கோரி கொட்டகலை மேபீல்ட் தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நேற்று முன்னெடுத்தனர். மேபீல்ட் சந்தியிலிருந்து ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் சென்ற பேரணி, கொட்டகலை கொமர்சியல் பகுதிவரை சென்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி வேண்டும், பெண்களின் பாதுகாப்பை உறுப்படுத்து என பதாகைகள் ஏந்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எம்.கிருஸ்ணா)**

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## டெவோன் நீர்வீழ்ச்சி பகுதியில் பெண்ணின் சடலம் மீட்பு



(க.கிஷாந்தன், பி.கேதீஸ் )

டெவோன் நீர்வீழ்ச்சியை அண்மித்த பகுதியில் (2 கிலோ மீற்றர் தூரத்தில்) பெண் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக திம்புள்ள - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தனை நகரைச் சேர்ந்த வீரமலை மலர்விழி (வயது 52) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பெண்ணின் சடலம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திம்பளை - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப் பட்ட பெண் பத்தனை நகரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான வீ.மலர்விழி என உறவினர்களால் பொலிஸாருக்கு அடையாளம் காட்டப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் 26ஆம் திகதி வீட்டிலிருந்து காணாமற்போன இப்பெண் தொடர்பில் திம்புள்ளை - பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனடிப்படையில் வீட்டிலிருந்து காணாமற்போன இப் பெண் நீலம் மற்றும் வெள்ளை நிற கோடுகள் இட்ட ஆடை ஒன்றே அணிந்திருந்ததாக பொலிஸ் முறைப்பாட்டில் உறவினர்கள் பதிவிட்டுள்ளனர்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸார் டெவோன் நீர்வீழ்ச்சிப் பகுதியில் தேடுதல் முயற்சிகளை மேற்கொண்டிருந்த நிலையில் குடை, பாதணிகள், மற்றும் கைப்பை ஒன்று நீர்வீழ்ச்சி உச்சப்பகுதியில் இருந்ததை கண்டறிந்துள்ளனர்.

அத்துடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் பெண்ணின் தகவல் ஏதும் கிடைத்திராத நிலையில், நேற்றுமுன்தினம் மாலை நீர்வீழ்ச்சியில் சுமார் 200 அடி பள்ளத்தில் நீரில் மிதந்த நிலையில் இப்பெண்ணின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இவரின் மரணம் தொடர்பில் பிரேத பரிசோதனைக்காக சடலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## பெருந்தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தை தொழிற்சங்கங்கள் திசை திருப்பக்கூடாது

### செங்கொடி சங்கத்தின் பிரதித் தலைவர் செல்லையா சிவசுந்தரம் தெரிவிப்பு

(செ.தி.பெருமாள் இரா.யோகேசன்)

தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணய சபையினால் தீர்மானித்தபடி ஆயிரம் ரூபா வழங்கும்படியும் தொழிற்சங்க முறியடிப்புக்கு எதிராகவும் கட்சி அரசியல் பேதமின்றி வீதியில் இறங்கி தொழிலாளர்கள் உரிமைக்காக போராடி வருகின்றனர்

இந்நிலையில், தொழிற்சங்கவாதிகள் மற்றும் அரசியல்வாதிகள் முன்வந்து போராட வேண்டுமே தவிர, அதை விடுத்து அரசியல் நோக்கத்திற்காக போராட்டங்களை திசை திருப்பக்கூடாது என மூத்த தொழிற்சங்கவாதியும் செங்கொடி சங்கத்தின் பிரதித் தலைவருமான செல்லையா சிவசுந்தரம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறும்போது,

அரசாங்கத்தினால் தொழிலாளர்களுக்கு ரூபா ஆயிரம் வழங்கும்படி அறிவித்தல் கொடுத்துள்ளது. கம்பனி நிர்வாகிகளும் கடிதம் வாயிலாக ஆயிரம் ரூபா வழங்கும்படி அறிவித்தும் தோட்ட நிர்வாகிகள் அதை வழங்காமல் வழமையாக பறிக்கும் தேயிலை கொழுந்து எடையை அதிகரித்து 20 கிலோ எடுத்தால் ஆயிரம் ரூபாவும் 19 கிலோவுக்கு 950 ரூபா படியும் 18 கிலோவுக்கு 900 ரூபா படியும், 17 கிலோவுக்கு 850 ரூபா படியும் 16 கிலோவுக்கு 800 ரூபா படியும் வழங்குவதாக தெரியவருகின்றது.

அதன்படி, கிலோ ஒன்றுக்கு 50 ரூபா வீதம் மட்டுமே வழங்கப்படுவதாகவும் நிரந்தரமற்ற தொழிலாளர்களுக்கு நாளாந்தமாக 500 ரூபா மட்டுமே வழங்கி வருகின்றனர். அத்தோடு, ஒருவேளைக்கு 5 கிலோ கழித்தே தொழிலாளர்களுக்கு பற்றுச்சீட்டில் பதிவதாகவும் இவ்வாறு ஒரு நாளைக்கு மூன்றுவேளை கொழுந்து நிறுக்கும்போது 15 கிலோ தோட்ட நிர்வாகத்தால் தொழிலாளர்களிடமிருந்து சூறையாடப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

தற்போது, நாட்டில் சகல பொருட்களின் விலையும் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இதனை தாங்கிகொள்ள முடியாதளவிற்கு வேதனையை அனுபவிக்கின்றனர். இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களாக செய்துவரும் கூட்டு ஒப்பந்தத்தை காலாவதியாகியும் நிறைவேறாமல் கிடங்கில் விடப்பட்டுள்ளது. கூட்டு ஒப்பந்தத்தை கம்பனி நிர்வாகமும் தொழிற்சங்கங்களும் காலத்திற்கு காலம் புதுப்பித்து கையொப்பமிட்டு வருகின்றனர். மேலும் 22 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் கையொப்பம் இடப்படாததால் வேலை நாள் குறைவு விடுமுறையில் சென்று மீண்டும் பணிக்கு செல்பவர்களுக்கு புதிதாக பெயர் பதிவுசெய்தல், பச்சை கொழுந்து பறிப்பதை அதிகரித்தல், புதிதாக பெயர் பதிவுசெய்தலை தவிர்த்தல் போன்ற பாரிய இழப்பீடுகளை தோட்டத் தொழிலாளர்கள் இழக்கவேண்டி நேரிட்டுள்ளது. கூட்டு ஒப்பந்தம் இம்மக்களுக்கு அவசியம் தேவை. அவ்வாறு கூட்டு ஒப்பந்தம் கையொப்பமிடப்படுமாயின் 22 கோரிக்கைகள் அந்தக் கூட்டு ஒப்பந்தத்தில் மீண்டும் நடைமுறைக்கு வரும்.

இன்று தொழிலாளர்களை பகடைக்காய்களாக வைத்துக்கொண்டு பல விடயங்களை நிறைவேற்ற கம்பனி நிர்வாகிகள் தொழிற்சங்க முறியடிப்பில் ஈடுபட்டு வருவதோடு தொழிலாளர்கள் அவர்கள் சார்ந்த தொழிற்சங்கத்திற்கு சந்தாவை வழங்க உரிமை இருந்தும் அந்த உரிமையை தடுத்துள்ளதோடு, இனி தொழிலாளர்களின் உரிமைகள் விடயத்தில் தொழிற்சங்கங்கள் தலையிட கூடாது எனவும் கம்பனிகள் எடுக்கும் தீமானத்தின்படியே பணிபுரிய வேண்டும் என தொழிலாளர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.



கூட்டு ஒப்பந்தத்தை நடைமுறைக்கு கொண்டுவந்து தொழிற்சங்க உரிமைகளை முன்வைக்க வேண்டும். இந்த விடயத்தில் அரசியல் தொழிற்சங்கங்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் போராட்டங்களை திசை திருப்பக்கூடாது. போராடும் தொழிலாளர்களுக்கு அரசியல் வாதிகளும் தொழிற்சங்கங்களும் முன்வர வேண்டும். அப்போதுதான் கம்பனிக்காரர்கள் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு செவிசாய்த்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வருவார்கள் - என்றார்.

# ஆட்பதிவுத் திணைக்களத்துடன் சம்பத் வங்கி இணைந்து வாடிக்கையாளர் தகவல் திரட்டு (KYC) நடைமுறையை டிஜிட்டல்மயமாக்கியுள்ளது

ஆட்பதிவுத் திணைக்களத்தின் இடைமுகத்தின் மூலம் வாடிக்கையாளர்களை அடையாளம் காணவும், அவர்களுடைய தகவல் விபரங்களை சரிபார்க்கவும் வசதியாக ஆட்பதிவுத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை சம்பத் வங்கி ஏற்படுத்திக்கொண்டுள்ளது. வாடிக்கையாளர்கள் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவுத்தளத்தின் மூலம் தங்கள் அடையாளத்தை சரிபார்த்து உறுதிசெய்வதன் மூலம், அவர்கள் வங்கிக்கு நேரடியாக வருகை தர வேண்டிய சிரமத்தைப் போக்கி, சம்பத் வங்கியில் டிஜிட்டல் ரீதியாக வாடிக்கையாளர்களாக இணைந்துகொள்ள இது இடமளிக்கின்றது. கட்டாய வாடிக்கையாளர் தகவல் திரட்டு ((KYC - Know Your Customer - உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள்) செயல்முறையை டிஜிட்டல்மயமாக்கும் இந்த கூட்டாண்மையானது தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதிலும், தேசத்திற்கு கூடுதல் மதிப்பை சேர்ப்பிக்கும் புத்தாக்கமான தீர்வுகளை அறிமுகப்படுத்துவதிலும் சம்பத் வங்கி காண்பித்து வருகின்ற அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டிற்கு சிறந்ததொரு சான்றாகும்.

சம்பத் வங்கியின் குழுமத் தலைமை தகவல் அதிகாரியான அஜித் சல்காது மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமான பி. வியனி குணதிலக்க ஆகியோர் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதுடன், ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் சம்பத் வங்கி ஆகியவற்றின் ஏனைய அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் சமூகமளித்திருந்தனர்.

"சம்பத் வங்கியானது ஆரம்பத்திலிருந்தே, தொழில்நுட்பத்தின் சக்தியைப் பயன்படுத்துவதற்கும், நாட்டின் நிதிச் சேவைக் கட்டமைப்பை மாற்றுவதற்கும் தனது பங்குதாரர்களுக்கு கூடுதல் மதிப்பை வழங்கும் வகையில் சந்தைக்கு மிகவும் பொருத்தமான மற்றும் புத்தாக்கத்துடனான தீர்வுகளை வெளிக்கொண்டு வருவதை எப்போதும் முன்னெடுத்து வருகின்றது. இதற்கிணங்க, வாடிக்கையாளர்களையும் வங்கி கட்டமைப்பையும் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்ற ஒரு கட்டாய செயல்முறையான வாடிக்கையாளர் விபரத் திரட்டு செயல்முறையை டிஜிட்டல் மயமாக்குவதில் ஆட்பதிவுத் திணைக்களத்துடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த வசதியால் கிடைக்கப்பெறும் கூடுதல் சௌகரியம் மற்றும் பாதுகாப்பைப் பெற அனைத்து இலங்கை மக்களுக்கும் நாம் அழைப்பு விடுப்பதுடன், அவர்களை டிஜிட்டல் முறையில் சம்பத் வங்கியின் வாடிக்கையாளர்களாக இணைத்துக்கொள்வதற்கு ஆவலாக உள்ளோம்" - என்று சம்பத் வங்கியின் குழுமத் தலைமை தகவல் அதிகாரியான அஜித் சல்காது குறிப்பிட்டார்.

வாடிக்கையாளர்கள் தற்போது வழக்கமான வங்கிச்சேவை நேரங்களுக்கும் அப்பால் நீடிக்கப்பட்ட நேரங்களில் கூட தெரிவுசெய்யப்பட்ட கிளைகளில் அமைந்துள்ள சம்பத் மெய்நிகர் டெலர் இயந்திரத்தின் (Virtual Teller Machine -VTM) மூலமாக டிஜிட்டல்ரீதியாக வாடிக்கையாளர்களாக இணைந்துகொள்ளும் சேவையைப் பயன்படுத்தி, கணக்கொன்றை புதிதாக ஆரம்பித்துக்கொள்ள முடியும். படிப்படியான அணுகுமுறையுடன் அனைத்து கணக்குகளையும் திறக்கும் நடவடிக்கைகளுக்கு டிஜிட்டல் முறையில் வாடிக்கையாளர் விபரத் திரட்டு செயல்முறையை நடைமுறைப்படுத்துவதன்



சம்பத் வங்கியின் குழும தலைமை தகவல் அதிகாரியான அஜித் சல்காது மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமான பி. வியனி குணதிலக ஆகியோர் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் வைத்து இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபோது..

மூலம் டிஜிட்டல்ரீதியாக வாடிக்கையாளர்களை உள்ளிணைத்துக்கொள்ளும் செயல்முறையை அதன் பிற டிஜிட்டல் தளங்களில் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளிலும் வங்கி தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

சம்பத் வங்கியின் மெய்நிகர் டெலர் இயந்திர மையத்திற்குச் செல்கின்ற வாடிக்கையாளர்கள் கணக்கொன்றைத் திறந்துகொள்ள உதவ, நிகழ்நேர நேரடி வீடியோ மாநாடு வசதியின் மூலமாக வங்கியின் வாடிக்கையாளர் சேவை அதிகாரியுடன் இணைக்கப்படுவார்கள். வாடிக்கையாளர்களை தங்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் பிற துணை ஆவணங்களை மெய்நிகர் டெலர் இயந்திரத்தின் மூலமாக பதிவேற்றும்படி வாடிக்கையாளர் சேவை அதிகாரிகள் அவர்களைக் கேட்டுக்கொள்வார்கள். ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவுத்தளத்தைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் அடையாளத்தை சரிபார்ப்பதற்கு அவர்களின் ஒப்புதலையும் பெறுவார்கள். வெற்றிகரமான சரிபார்ப்பின் பின்னர், கணக்கு உடனடியாக திறக்கப்படும். வாடிக்கையாளர்கள் வெறுமனே திரையில் காண்பிக்கப்படும் ஆணைப் படிவத்தில் டிஜிட்டல் முறையில் கையொப்பமிட வேண்டும் மற்றும் கணக்கு திறக்கும் செயல்முறையை நிறைவு செய்வதற்கு ஆரம்பத் தொகையை வைப்புச் செய்ய வேண்டும். செயல்படுத்தப்பட்ட டெபிட் அட்டைகள் மற்றும் பரிவர்த்தனைகள் தொடர்பான குறுஞ்செய்தி தகவல் விழிப்பூட்டல் வசதியையும் அவர்கள் உடனடியாகப் பெறலாம்.

100 வீதம் உள்நாட்டு வங்கியாகத் திகழ்ந்து வரும் சம்பத் வங்கியானது இலங்கை மக்களின் வாழ்வில் ஆழமாக வேரூன்றியுள்ளது. 1987ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த வங்கி ஒரு அதிநவீன நிதி நிறுவனமாக மாறியுள்ளதுடன், அதன் தொடர்ச்சியான புத்தாக்கம் மற்றும் வணிகத்தில் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையின் பலனாக இன்றும் சந்தையில் முன்னிலை வகிக்கும் வங்கியாக தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. சம்பத் வங்கி செயற்பட ஆரம்பித்ததிலிருந்து 'வங்கித்துறையில் முதன்முதலாக அறிமுகப் படுத்தியுள்ள' பல புத்தாக்கங்களின் வரிசையில் வங்கித்துறையில் முதன்முதலாக அறிமுகமாக்கும் மற்றுமொரு புத்தாக்கமாக டிஜிட்டல் வழிமுறையில் வாடிக்கையாளர் விபரத் திரட்டு ஒருங்கிணைப்புடனான மெய்நிகர் டெலர் இயந்திர முறைமை மாறியுள்ளது.

வங்கி எமது பாரம்பரியங்களையும், விழுமியங்களையும் கட்டிக்காத்தவாறு, தொழில்நுட்பத்தால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற நிதியியல் சேவைகள் வழங்குனர் என்ற பரிமாணத்தை நோக்கி படிப்படியாக தொடர்ந்தும் வளர்ச்சி மாற்றம் கண்டு வருகின்றது.

## மக்கள் வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ரெகாவுல ஆரம்பப் பாடசாலைக்கு புதியதோர் கட்டடம்



மக்கள் வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைசை முன்னிட்டு அதன் நிறுவன ரீதியான மற்றும் சர்வதேச வங்கிப் பிரிவினர்களுடன் இணைந்து பொல்பிதிகம, தலாகொலவெவ வ/ம/பொபீ/ரெகாவுல ஆரம்பப் பாடசாலைக்கு புதியதோர் கட்டடத்தினை நிறுவி அதனை மாணவர்களுக்கு கையளித்திடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. சமூக பொறுப்புணர்வுத் திட்டமாக நிறுவன ரீதியாக மற்றும் சர்வதேச வங்கிப் பிரிவு ஊழியர்களின் முழுமையான பங்களிப்புடன் இக்கட்டடத்தை நிறுவிட கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் தொகை செலவளிக்கப்பட்டது.

சரியான வகுப்பறை வசதிகள் இல்லாத காரணத்தால் தென்னையோலைகளால் பின்னப்பட்ட சிறிய அறைகளிலேயே பல வகுப்புகளை நடத்திவந்தனர். எனவே, இனிவரும் காலங்களில் மாணவர்களுக்கு முழுமையான வசதிகளுடன் புதிய கட்டடத்தில் கல்வி கற்பதற்கான வசதி கிடைக்கப்பெறுகிறது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதி பொது முகாமையாளர் (வியாபார கொடுக்கல் வாங்கல்) நிபுனிகா விஜயரட்ன, உதவி பொது முகாமையாளர் (விற்பனை நிதி) ஏ.எஸ்.எம்.வீ. குமாரசிறி, பிரதான முகாமையாளர் (சர்வதேச வங்கி நடவடிக்கைகள்) கே.சுபசிங்ஹ, பொல்பித்திகமை கிளையின் முகாமையாளர் - இந்து குறுப்பு, மஹவ வலய கல்விப் பணிப்பளாளர் - டீ. எம்.அருண ஷாந்த, மஹவ உதவி கல்விப் பணிப்பாளர் - லக்ஷ்மன் ஹபுஆரச்சி, ரெகாவுல ஆரம்பப் பாடசாலையின் அதிபர் - எச்.எம்.செனவிரத்ன பண்டா ஆகியோருடன் ஆசிரியர்கள் பலரும் வங்கி ஊழியர்களும் மற்றும் மாணவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.


தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 24 26 55 80
திகதி: 02.08.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0554

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 70 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 182 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4400 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2930 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 73386 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 13685 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 2,949,220.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 94,655

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 101,819,367.20

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ஜாதிக லொத்தர் மண்டலய
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk



கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 2819 சீட்டிழுப்பு திகதி: 02.08.2021
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 03 07 61 79

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 7 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 153 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 361 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8683 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5561 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 140011 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 25493 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 180,270
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 6,767,820.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 62,369,108.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஜாதிக லொத்தர் மண்டலய
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk



சூடான செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்



ஜாதிக சம்பத
JATHIKA SAMPATHA
NLB
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம்: 1129
திகதி: 02.08.2021
லக்னம்
வெற்றி இலக்கங்கள்: 1 1 0 6 1 9

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | பரிசுத் தொகை | வெற்றியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 பரிசு | | 1 | 1 | 0 | 6 | 1 | 9 | ரூ. 1,000,000.00 | பரிசு 0 |
| 02 பரிசு | | | 1 | 0 | 6 | 1 | 9 | ரூ. 100,000.00 | பரிசுகள் 3 |
| 03 பரிசு | | | | 0 | 6 | 1 | 9 | ரூ. 10,000.00 | பரிசுகள் 27 |
| 04 பரிசு | | | | | 6 | 1 | 9 | ரூ. 1,000.00 | பரிசுகள் 255 |
| 05 பரிசு | | | | | | 1 | 9 | ரூ. 100.00 | பரிசுகள் 2449 |
| 06 பரிசு | | | | | | | 9 | ரூ. 20.00 | பரிசுகள் 24565 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | பரிசுத் தொகை | வெற்றியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 பரிசு | | 1 | 1 | 0 | 6 | 1 | | ரூ. 10,000.00 | பரிசுகள் 9 |
| 08 பரிசு | | 1 | 1 | 0 | 6 | | | ரூ. 1,000.00 | பரிசுகள் 23 |
| 09 பரிசு | | 1 | 1 | 0 | | | | ரூ. 200.00 | பரிசுகள் 238 |
| 10 பரிசு | | 1 | 1 | | | | | ரூ. 100.00 | பரிசுகள் 2509 |
| 11 பரிசு | (லக்னம்) | | | | | | | ரூ. 20.00 | பரிசுகள் 20448 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | | | | | | | ரூ. 200.00 | பரிசுகள் 24 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 2,326,460.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,392,106.90

ஜாதிக லொத்தர் மண்டலய
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 4607000, 011 2324324
பக்ஸ்: 011 4669416



சீட்டிழுப்பு இலக்கம்: 4524
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
மஹஜன சம்பத
திகதி: 02.08.2021
வெற்றி எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 2 4 2 1 3 3

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ | 2 | 4 | 2 | 1 | 3 | 3 ரூபா 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ | ■ | 4 | 2 | 1 | 3 | 3 ரூபா 100,000/- | 8 |
| 3ஆம் பரிசு | ■ | ■ | ■ | 2 | 1 | 3 | 3 ரூபா 10,000/- | 101 |
| 4ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | 1 | 3 | 3 ரூபா 1,000/- | 991 |
| 5ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | 3 | 3 ரூபா 100/- | 10117 |
| 6ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 3 ரூபா 20/- | 100085 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ | 2 | 4 | 2 | 1 | 3 | ■ | ரூபா 10,000/- | 9 |
| 8ஆம் பரிசு | ■ | 2 | 4 | 2 | 1 | ■ | ■ | ரூபா 1,000/- | 104 |
| 9ஆம் பரிசு | ■ | 2 | 4 | 2 | ■ | ■ | ■ | ரூபா 100/- | 1010 |
| 10ஆம் பரிசு | ■ | 2 | 4 | ■ | ■ | ■ | ■ | ரூபா 50/- | 10066 |
| 11ஆம் பரிசு | T | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா 20/- | 39878 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,410,260.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,739,161.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk



Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 0872
NLB
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 02.08.2021
ஆங்கில எழுத்து: G
சுப்பர் இலக்கம்: 20
வெற்றி இலக்கங்கள்: 20 28 46 49

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 86 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 194 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4627 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3059 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 75782 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 13620 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 140,549,577.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,856,100.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk
ஜாதிக லொத்தர் மண்டலய
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

# காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பினர் அமைதி காப்பது ஏன்?

## எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி. கேள்வி

(நூருல் ஹுதா உமர்)

கண்மணி நாயகம் முஹம்மது நபியை (ஸல்) பற்றி இழிவாக கருத்து பகிர்ந்த காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறில் மீது தமிழர்களுடன் ஒன்றித்து பயணிக்கும் முஸ்லிம்கள் தனது அதிருப்தியை காட்ட ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் கூட அவர் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித நடவடிக்கையும் எடுக்காது அமைதி காப்பது ஏன் என்பதுதான் விளங்காமல் உள்ளது - என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.



இவ்விடயம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், உலக முஸ்லிம்களின் தலைவராக மட்டுமின்றி உலகவாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற தலைவராகவும் உள்ள கண்மணி நாயகம் முஹம்மது (ஸல்) மீது இவ்வாறான தவறான கருத்தை முன்வைத்த தவிசாளரின் மீது அதிரடி காட்டாமல் சிவில் சமூகம் மிகவும் நிதானமாக நடந்துகொண்டு தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை கருதி இவ்விடயத்தை நிதானமாக கையாண்டுவருவது பாராட்டத்தக்கது.

பள்ளிவாசல்கள் சம்மேளனம், பொது அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் இவருக்கு எதிராக போராட்டங்களை மேற்கொள்ளாது ஜனநாயக ரீதியாக சட்டநடவடிக்கை எடுக்க முனைந்திருப்பது இவ்விடயத்தில் முஸ்லிம்களின் பெருந்தன்மையையும், சட்டத்தின் மீதான நம்பிக்கையையும் காட்டுகிறது.

40 சதவீதமளவில் முஸ்லிம்களை கொண்டுள்ள காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் நிதானமிழந்து செய்திருக்கும் இந்த செயலின் பாரதூரத்தை நன்றாக அறிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவங்கள் இவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து இவ்வாறான சிந்தனை கொண்டோருக்கு தக்க பாடத்தை கற்பிப்பார்கள் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால், இதுவரை அவ்வாறான எவ்வித நடவடிக்கைகளும் நடக்கவில்லை என்பது ஏமாற்றமளிக்கிறது.

இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவங்களை நேரடியாக சந்தித்து முஸ்லிம் எம்.பிக்கள் பேசவுள்ளோம். இவ்வாறான மத நிந்தனை செயற்பாடுகளை பல்லினம் வாழும் எமது நாட்டில் யாரும் செய்ய அனுமதிக்க முடியாது. அது யாராக இருந்தாலும் சரியே. முஹம்மது நபியைப் (ஸல்) பற்றி இழிவாக கருத்து பகிர்ந்த காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறிலுக்கு எனது பலத்த கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

# சாய்ந்தமருதில் 133 பேருக்கு கொரோனா தொற்று

## எண்மர் உயிரிழப்பு

(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டு, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சாய்ந்தமருது-17, தண்டையல் வீதியைச் சேர்ந்த 54 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் தெரிவித்தார்.

இதன்படி சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ள அதேவேளை, கல்முனை பிராந்தியத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்துள்ளது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் இதுவரை 133 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் தற்போது 08 பேர் கொரோனா சிகிச்சை நிலையங்களில் சிகிச்சைபெற்றுவருகின்றனர். மேலும் 39 பேர் வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்டிருக்கின்றனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை 1014 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் 1108 பேருக்கு ரெபிட் அன்ரிஜன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, நேற்று முற்பகல் 10 மணிவரையான 24 மணிநேரத்தினுள் கல்முனை பிராந்திய சுகாதார பணிமனைப் பிரிவில் 27 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் தகவல் வெளியிட்டுள்ளார்.

# கொரோனா காலத்தில் வீட்டில் முடக்கிவிடப்பட்டதனால் இளைஞர்களின் செயற்றிறன்கள் வெகுவாகப் பாதிப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ்

(பாறுக் ஷிஹான்)

நல்லிணக்கத்திற்கான எண்ணக்கரு சமூகத்தின் இளைஞர்களினால் கட்டியெழுப்பப்படல் வேண்டும் - என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.





மனித அபிவிருத்தி தாபனத்தினால் அம்பாறை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துகின்ற திட்டத்தின் ஒரு செயற்பாடாக சகவாழ்வுச் சங்கங்களிலுள்ள இளைஞர்களுக்கு மொழி உரிமைகள், அடிப்படை உரிமைகள் மற்றும் சமகாலத்தில் பெண்கள் எதிர்நோக்கும் மொழி ரீதியான பிரச்சினைகள் தொடர்பான அறிவினை ஏற்படுத்தும் பயிற்சி நேற்று கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் மனித அபிவிருத்தி தாபனத்தின் உதவி இணைப்பாளர் எம்.ஐ.றியாழ் தலைமையில் இடம்பெற்றது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

இச்செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து பரிமாறுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது, கொவிட்-19 தொற்று காலத்தின்போது இளைஞர், யுவதிகள் வீட்டில் முடக்கிவிடப்பட்டதனால் அவர்களின் செயற்றிறன்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இன்றைய காலகட்டத்தில் சமூகங்களைப் பிரிக்கின்ற நிகழ்ச்சிநிரலில் ஒரு சாரார் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்தவகையில் நல்லிணக்கத்திற்கான எண்ணக்கரு சமூகத்தின் இளைஞர்களிடையே கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

இளைஞர்கள் வழிகெட்டுப் போவதற்கான நிறைய சந்தர்ப்பங்கள் இலத்திரனியல் உபகரணங்கள் மூலம் கிடைக்கின்றன. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் பொலிஸார் குற்றவியல் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டிய கடப்பாட்டிற்கு உள்ளாகின்றனர். இதனால் நாட்டின் சட்டம் மேலோங்குகிறது. சட்டத்திற்கு கட்டுப்பட்டு எம்மை நாம் பாதுகாக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு அனைவரும் தள்ளப்பட்டுள்ளதால் பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் பற்றி அறிந்திருக்கவேண்டியது அவசியமாகின்றது.

மேலும், கடந்த பல தசாப்தங்களாக இலங்கைப் பெண்கள் பல்வேறு வகையான சவால்களை சந்தித்துள்ளனர். சமத்துவம் உரிமைகளுக்கான கௌரவம் போன்றவற்றுக்கான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடியுள்ளனர். இலங்கையில் சமூக நீதியினையும் நிலைத்து நிற்கக் கூடிய சமாதானத்தினையும் கொண்டுவருவதற்கு பெரிதும் பெண்கள் பங்களிப்புச் செய்துள்ளனர். இன்று பெண்கள் கொள்கைச் சட்டம் ஆகியவற்றுக்கான சீர்திருத்தங்களையும் மாற்றங்களையும் உருவாக்குவதற்காக முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர் என மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் – யுவதிகளின் தொழில்வாய்ப்புகளை அதிகரிக்க ஏற்பாடு

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மட்டக்களப்பு மாவட்ட தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபைக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.



இதன்போது மட்டக்களப்பு மாவட்ட இளைஞர், யுவதிகளின் தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை மேம்படுத்தி சுயதொழில் வாயப்புகளை அதிகரிக்கும் நோக்கில் கைத்தொழில் அதிகாரசபையில் விசேட கலந்துரையாடல் ஒன்று தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபையின் தலைவர் தரங்க நளின் கம்லத் மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபையின் உதவி பணிப்பாளர் எஸ்.வீ.பீ.விக்ரமசிங்க மற்றும் மட்டகளப்பு மாவட்ட தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபையின் முகாமையாளர் சாலி மௌலானா ஆகியோரின் பங்குபற்றலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகளின் தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை மேன்படுத்திக்கொள்வதற்கு தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் அதிகாரசபையினூடாக பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம். இதற்காக விரைவில் மட்டக்களப்பு மாவட்ட தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் அதிகார சபைக்காக நிரந்தர கட்டிடத்தொகுதி பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனூடாக மட்டக்களப்பு மாவட்டத்தின் இளைஞர், யுவதிகளின் தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை மேம்படுத்தி சுயதொழில்வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் தொழில்சார் தகைமையுடையவர்கள் தொடர்பிலும் இராஜாங்க அமைச்சரினால் கருத்து தெரிவிக்கப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்ட கைத்தொழில் அதிகாரசபையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் மின்னிணைப்பாளர்களுக்கான இலவச NVQ3 சான்றிதழ் பயிற்சி தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் பார்வையிட்டார்.

# திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் 43 ஆவது தலைவராக அகிலன் பதவியேற்பு

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை றோட்டரி கழகத்தின் 43ஆவது தலைவராக த.அகிலன் பதவி ஏற்கும் நிகழ்வு டைக் வீதியிலுள்ள றோட்டரி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.





இவ்வைபவத்தில் திருகோணமலை றோட்டறி கழகத் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம், கழகம் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினார். அவரது காலத்தில் திருகோணமலை றோட்டரி கிளப் சிறப்பாக செயல்பட்டதாகவும் அதற்கு உதவிய தனது குழு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி கௌரவித்தார்.

செயலாளர் அருள் வரதராஜா 2020 - 2021 ஆண்டில் திருகோணமலை றோட்டரி கழக நடவடிக்கைகள் பற்றி ஒரு சுருக்கமான விளக்கத்தை கொடுத்தார். இந்த நிகழ்ச்சியில் திருகோணமலை லிங்கநகர் ஸ்ரீ கோணலிங்கம் மகா வித்தியாலயத்துக்கு இரட்டை மலசல கூடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக வளாக தலைவர் பேராசிரியர் வ.கனகசிங்கம் கலந்துகொண்டார். இதன்போது கடந்த ஆண்டின் தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் புதிதாக தெரிவான தலைவர் த.அகிலனுக்கு தலைமைப்பதவியை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

பிரதம விருந்தினர் பேராசிரியர் வ.கனகசிங்கம் அவரது உரையில் றோட்டரிக் கழகம் இன்னலுற்ற மக்கள் மத்தியில் சிறந்த சேவை புரிவதாக பாராட்டினார். மற்றும் திருகோணமலை மாவட்ட கல்வி நிலைமை வீழ்ச்சியுற்றிருப்பதை புள்ளி விபரங்களுடன் எடுத்துக்கூறி, அதை நல்ல முறையில் சீர்படுத்துவதற்கு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அத்துடன் திருமலை வளாகத்தை எதிர்காலத்தில் தனி பல்கலைக்கழகமாக தரமுயர்த்துவதற்கு அனைவரும் இணைந்து செயல்பட முன்வரவேண்டும் என்றுகேட்டுக்கொண்டார்.

# பாலமுனை பிரதேசத்தில் இலவச குடிநீர் இணைப்பு வழங்கும் நிகழ்வு

(பாலமுனை நிருபர்)

அல்-ஹிக்மதுல் உம்மா பவுண்டேஷன் ஸ்ரீலங்கா அமைப்பின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்திலுள்ள மூவின மக்களும் வாழ்கின்ற பிரதேசங்களிலுள்ள மத ஸ்தாபனங்கள், பாடசாலைகள், ஜனாஸா அடக்கஸ்தலங்கள், வைத்தியசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள் போன்றவற்றுக்கு தற்போது இலவச குடிநீர் இணைப்புகளை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்போது குடிநீர் இணைப்புகளை வழங்கி வருகின்றது.



அல்-ஹிக்மதுல் உம்மா பவுண்டேஷன் ஸ்ரீலங்கா அமைப்பின் பணிப்பாளர் கஸ்ஸாலி பாத்திஹின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின்கீழ் இடம்பெற்றுவரும் இத்திட்டத்தினை பாலமுனை பிரதேசத்திலுள்ள பாலமுனை ஹைமா பள்ளி மற்றும் ஹீஸைனியா பள்ளிவாசல், பாலமுனை அரச ஹோமியோபதி வைத்தியசாலை, பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலை, பாலமுனை ஜனாசா அடக்கஸ்தலம் போனறவற்றுக்கான இலவச குடிநீர் இணைப்புகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அல்-ஹிக்மதுல் உம்மா பவுண்டேஷன் ஸ்ரீலங்கா அமைப்பின் அம்பாறை மாவட்ட உதவிச் செயலாளர் எஸ்.எம்.அஸ்ரப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.எம்.றிபாஸ்தீன், பாலமுனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.எல்.அலியார், ஹோமியோபதி வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் திருமதி பி.பிரவீனா, பாலமுனை சமூகசேவை ஆய்வு சபையின் தலைவர் ஐ.பி.எம்.ஜிப்ரி உட்பட பள்ளிவாசல் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனையில் நிலக்கடலை அறுவடை

(கல்முனை நிருபர்)

அரசாங்கத்தின் சௌபாக்கிய வேலைத் திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட நிலக்கடலை கல்முனையில் அறுவடைசெய்யப்பட்டது.

கல்முனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் வழிகாட்டலில், கல்முனை முதலாம் பிரிவு கிராமசேவகர் பிரிவில் விவசாயி ஒருவரினால் செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலை நேற்று முன்தினம் அறுவடைசெய்யப்பட்டது.



குறித்த அறுவடையானது கல்முனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் பிரதம போதனாசிரியர் எஸ்.கிருத்திகா, விவசாய போதனாசிரியர் என்.யோகலக்ஷ்மி ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெற்றது.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்காக குரு அபிமானி கொடுப்பனவு திட்டம்

(கிண்ணியா நிருபர்)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் திட்ட அமுலாக்கத்துக்கமைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கும் "குரு அபிமானி" நிகழ்வு நேற்று தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மகளிர் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி இராஜாங்க அமைச்சின் ஆலோசனைக்கு அமைய முன்பள்ளி ஆசிரியைகளுக்காக இக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதியால் முதற்கட்டமாக 12 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டது.





குறித்த நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.அன்வர்தீன் மற்றும் முன்பள்ளி ஆசிரியைகளும் கலந்து சிறப்பித்தனர்.

# சம்பள முரண்பாடு உள்ளிட்ட 7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கிழக்கில் அதிபர் - ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்







(மட்டக்களப்பு, திருகோணமலை நிருபர்கள்)

மட்டக்களப்பில் இலங்கை ஆசிரியர் சங்கம், கொத்தலாவல பாதுகாப்புச் சட்டமூலம் உட்பட 7 கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று திங்கட்கிழமை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவர் உதயரூபன் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதனையடுத்து காந்தி பூங்காவிற்கு முன்னால் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஒன்றிணைந்தனர்.

இதில், அதிபர் ஆசிரியர்களின் 24 வருட சம்பள முரண்பாட்டை நீக்கு, அதிபர் ஆசிரியர்களின் சேவையை அகப்படுத்தப்பட்ட சேவையாக அங்கீகரி, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை அமுல்படுத்தாதே, அதிபர், ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர்களுக்கு அழுத்தம் கொடுப்பதை நிறுத்து, இலவச கல்வியை இராணுவமயமாக்காதே, அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கி எமது சேவையை கௌரவப்படுத்து, அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான உயர்நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்து போன்ற 7 கோரிக்கைகளை முன்வைத்து சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

காந்தி பூங்காவிலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் காலை 10 மணிக்கு ஆரம்பித்து, ஊர்வலமாக நகர் மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டத்தின் ஊடாக கோட்டமுனை பாலம் ஊடாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தின் முன்னால் உள்ள சுற்றுவட்டம் வரை சென்று அங்கிருந்து மீண்டும் காந்தி பூங்காவரை ஆர்ப்பாட்ட ஊர்வலம் வந்தடைந்த பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கோரியும் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் சட்டமூலத்தை வாபஸ் பெறக் கோரியும் நேற்று திருகோணமலையிலும் ஆசிரியர்களும் அதிபர்களும் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டமொஒன்றை நடத்தினர்.

திருகோணமலை மாவட்ட ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்களினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த கவனயீர்ப்புப் போராட்டமானது திருகோணமலை - கண்டி வீதி மக்கோ சந்தியிலிருந்து ஆரம்பித்து ஆளுநர் அலுவலகம் வரை சென்றது. பின்னர் அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்தின் முடிவில் அதிபர், ஆசிரியர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

# 24 வருடங்களாக மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா வீதம் ஆசிரியர்களின் சம்பளம் அரசாங்கத்தால் கொள்ளை

## இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவர் உதயரூபன்

(கனகராசா சரவணன்)

கடந்த 1997ஆம் ஆண்டிலிருந்து 24 வருடங்களாக மாதாந்தம் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் எங்களுடைய சம்பளம் அரசால் கொள்ளையிடப்பட்டுள்ளது. எனவே, இந்த சம்பள முரண்பாட்டை தீர்க்க முடியாத கல்வி அமைச்சர், இராஜாங்க அமைச்சர்கள் உட்பட 4 அமைச்சர்களையும் ஏன் வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள் - என இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவர் உதயரூபன் கேள்வி எழுப்பியுள்ளார்.



மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் 7 கோரிக்கைகளை முன்வைத்து நேற்று இலங்கை ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவர் உதயரூபன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டு சம்பள முரண்பாடு தொடர்பாக உயர்தரப் பரீட்சைகளை பகிஷ்கரித்து இலங்கை அரசுக்கு எதிராக முதன்முதலாக அறிவித்தோம். இதனைத் தொடர்ந்து 2008ஆம் ஆண்டு 208 இலக்கமிடப்பட்ட உயர்நீதிமன்ற தீர்ப்புக்கமைவாக அந்த உயர்நீதிமன்ற நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அதிபர், ஆசிரியர்களுடைய சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. எனவே, அந்த தீர்ப்பை மதித்து எங்களுடைய சம்பள முரண்பாடை தீர்க்கும்வரை நாங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம்.

காலத்துக்கு காலம் பந்து விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் இந்த இலங்கை அரசாங்கங்கள் இருந்தபோதும் இந்த நாட்டின் அரசாங்கத்துக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகின்றோம். 2019 பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி தேசிய பிரச்சினையாக கருதி இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம்.

2019 - குளோ சிஸ்டம் என்ற தீர்வுக்கு கொண்டுவந்து இந்த சம்பள முரண்பாட்டை தீர்ப்பதாக வாக்குறுதியளித்திருந்தனர். இதற்குப் பின்னர் 2020ஆம் ஆண்டு இந்த அரசு தமது அமைச்சரவை தீர்மானத்தில் இதனை அங்கீகரித்திருந்தனர். எனவே, அந்த அமைச்சரவை தீர்மானத்திற்கு என்ன நடந்தது? ஏன் இதனை இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை?

இதன்பின்னர் இடைக்கால சுற்றுநிருபம் வெளியிடுவதாக அறிவித்தபோதும் இதுவரை அதனை ஏன் வெளியிடவில்லை? இந்த நாட்டினுடைய சுபீட்சத்தின் நோக்கு என்கின்ற ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்தில் வெளியீட்டு புத்தகத்தில் 20ஆம் பக்கத்தில் அதனை தீர்த்துவைப்பதாக தெரிவிக்கப்பட்டது.

எனவே, ஜனாதிபதியிடம் கேட்கின்றோம் அதற்கு என்ன நடந்தது? 31 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தரவேண்டியவர்கள் வெறும் மூவாயிரத்து 100 ரூபா தருவதாக பேச்சுவார்த்தையில் தெரிவித்து எங்களை வெக்கப்படுத்தியுள்ளனர். எனவே, இதனை நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற ஆசிரியர், அதிபர்களை வெட்கப்படுத்தியதாக கருதுகின்றோம்.

நாங்கள்தான் நல்லாட்சியை கொண்டுவந்தோம். எதிர்காலத்திலும் மாற்றம் ஒன்றை கொண்டுவரவேண்டும். எனவே, எங்களின் இந்த போராட்டத்தை அங்கீகரிக்காவிடின் போராட்ட வடிவங்கள் மாறும். 1997ஆம் ஆண்டிலிருந்து 24 வருடங்களாக மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா வீதம் 1040 மாதங்களில் எங்களுடைய சம்பளம் கொள்ளையிடப்பட்டுள்ளது - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வாழைச்சேனையில் போதைப்பொருள் வாங்க வந்தவர் கேரள கஞ்சாவுடன் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

(எஸ்.எம்.எம்.முர்ஷித்)



போதைப்பொருள் கொள்வனவிற்காக வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை 2ஆம் குறுக்கு தெருவிற்கு வருகை தந்த வாழைச்சேனை, விநாயகபுரத்தைச் சேர்ந்த நபரொருவர் கேரளா கஞ்சாவுடன் நேற்று முன்தினம் பிரதேச பொது மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தொடர்பில் வாழைச்சேனை காகித ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

24 வயதுடைய குறித்த நபரிடமிருந்து 2 கிராம் 850 மில்லி கிராம் கேரள கஞ்சா, 150 ரக பல்சர் மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி போன்றனவும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் போதையொழிப்பு தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள விழிப்புணர்வே இவ்வாறு குறித்த நபர் கைதுசெய்யப்பட காரணமாக அமைந்துள்ளது.

# 118 மில்லியன் ரூபா செலவில் கந்தளாய் பேரமடுகுளம் புனரமைப்பு



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பேரமடுகுளம் புனரமைப்புக்கான அங்குராப்பண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இக்குளமானது நீண்டகாலமாகவே விவசாயிகளின் தேவைகளை பூர்த்திசெய்யாத நிலையில் காணப்பட்டது. அப்பகுதி விவசாயிகளும், விவசாய சங்கங்களும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரலவிடம் விடுத்த வேண்டு கோளுக்கமைய 118 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இக்குளம் 1974ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இதன் சுற்றளவு 2460 ஆகும், விவசாய நிலம் 283 ஏக்கர் கொண்டதாகும். விவசாயிகளின் நன்மை கருதி அமைக்கப்பட்டுள்ளது, இதன்மூலம் விவசாயிகள் பெரிதும் நன்மையடைவுள்ளனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான நுவன் அத்துகோரள பொலநறுவை நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள கந்தளாய் பிரதேச தவிசாளர் உட்பட பலரும் கலந்துகொண்டார்கள்.

# வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தடுப்பூசி





(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் இருபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணிகள் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரி.எஸ்.சஞ்ஜீவ் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவிலுள்ள இருபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கொவிட்-19 தடுப்பூசிகள் நேற்று திங்கட்கிழமை ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்றது.

கொவிட் -19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்ற நிலையில், 14 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரனின் வழிகாட்டலில் நடைபெற்று வருகின்றன.

# காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் அடிக்கடி முஸ்லிம்களின் மத உணர்வை சீண்டிக்கொண்டிருப்பதை நிறுத்தவேண்டும்

## நிந்தவூர் தவிசாளர் தாஹிர் காட்டம்!

(நூருள் ஹுதா உமர்)

முஸ்லிம்கள் தங்களின் உயிரிலும் மேலாக நேசிக்கக்கூடிய முஹம்மது நபி (ஸல்)மீது காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மிகவும் மோசமான அபாண்டத்தை முன்வைத்து முகநூலில் வெளியிடப்பட்ட கருத்துகளை பரப்புரை செய்தமையை வன்மையாகக் கண்டிக்கிறேன். அதனை வாபஸ் வாங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்- என நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். தாஹீர் தெரிவித்துள்ளார்.

தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முஹம்மது நபி (ஸல்) அவர்களை முஸ்லிம்கள் மட்டுமன்றி ஏனைய மதத் தலைவர்களும், பொதுமக்களும் நேசிக்கின்றார்கள் என்ற உண்மையை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறி புரிந்துகொள்ள வேண்டும்.

மாற்று மதத்தினராலும் புகழப்படும் சிறப்பைப் பெற்றுள்ள முஹம்மது நபியை (ஸல்) மிகவும் கீழ்த்தரமாக விமர்சனம் செய்தமையை பரப்புரை செய்வதற்கு காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு எந்த அருகதையும், உரிமையும் கிடையாது. அவர் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதற்கு எண்ணுகின்றார்.



அதேவேளை, Reginold Rgi என்ற பெயரில் முகநூலில் நபி (ஸல்) அவர்களின் மீது அபாண்டத்தை முன்வைத்த முகம் தெரியாத, முகவரியில்லாத அந்த நபரையும் கண்டிக்கிறேன்.

காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அடிக்கடி முஸ்லிம்களின் மத உணர்வையும், இன உறவையும் சீண்டிக் கொண்டிருக்கிறார். அவர் இனவாதம் மற்றும் மதவாதக் கருத்துகளை முன்வைத்து தமது அரசியலை நிலை நிறுத்திக்கொள்வதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றாரா என்று பலமாக சந்தேகிக்கவேண்டியுள்ளது. இவரது இக்கருத்துகளை காரைதீவு மக்களும் வரவேற்கமாட்டார்கள்.

காரைதீவில் இதற்கு முதலும் தவிசாளர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் முஸ்லிம் எதிர் சிந்தனை கொண்டவர்களாக இருக்கவில்லை. காரைதீவு பிரதேச சபையின் எல்லைக்குள் வாழும் தமிழ், முஸ்லிம்களின் தவிசாளர்களாக செயற்பட்டுள்ளார்கள். இரண்டு இனங்களையும் அரவணைத்துச் செல்லும் பக்குவத்துடன் செயற்பட்டுள்ளார்கள்.

ஆதலால், தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தாம் அடிக்கடி வெளியிட்டுக்கொண்டிருக்கும் முஸ்லிம் விரோத சிந்தனையிலிருந்து விடுபடவேண்டும். இனவாத சிந்தனையும், செயற்பாடுகளும் இனங்களுக்கிடையே முறுகல் நிலையை உருவாக்கி அழிவுகளை ஏற்படுத்துவதற்கு உதவுமே அன்றி, இனங்களுக்கு இடையே ஒற்றுமையை ஏற்படுத்தி ஆக்கத்தை உருவாக்குவதற்கு உதவாது என்பதற்கு இலங்கையின் வரலாற்றையும், உலக நாடுகளின் வரலாற்றையும் படிக்கின்றபோது அறிந்துகொள்ளலாம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன் - என்று தெரிவித்துள்ளார்.

# இனங்களுக்கு இடையே முறுகலை தோற்றுவிக்கும் முயற்சியே தவிசாளர் ஜெயசிறில் மீதான குற்றச்சாட்டு

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் சுட்டிக்காட்டு

(வீரமுனை நிருபர்)

பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மீது சேறு பூசும் நோக்கில் யாரோ சிலர் திட்டமிட்டு கருத்துகளை தெரிவிப்பது ஆரோக்கியமானதல்ல - என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசு கட்சி ஊடகச் செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தவிசாளர் ஜெயசிறில், இஸ்லாமிய மதம் சார்ந்து அவதூறான கருத்தை வெளியிட்டதாக சபையின் முஸ்லிம் பிரதிநிதிகள் சிலர் வெளியிட்ட கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த விடயத்தின் உண்மைத்தன்மையை அறிவதற்காக சம்பந்தப்பட்ட எமது கட்சியை சேர்ந்த தவிசாளர் ஜெயசிறிலை தொடர்புகொண்டு கேட்டறிந்தேன். அவர், முஸ்லிம் மதத்தையோ அந்த கடவுளையோ முஸ்லிம் மக்களையோ அவமானப்படுத்தும் விதமாக தாம் எந்தக் கருத்தையும் சமூக வலைத்தளங்களில் பதிவிடவும் இல்லை. எந்த இடத்திலும் பேசவும் இல்லை. வேறு யாரோ இட்ட பதிவுகளை வைத்துக்கொண்டு தம்மீது சில முஸ்லிம் சகோதரர்கள், தமது அரசியல் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ளாத சிலர் சேறு பூசுகிறார்கள் என்பதை கூறினார்.

பொறுப்புவாய்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் பிரதிநிதி ஒருவர் ஏனைய மதங்களை அவதூறாக பேசியிருந்தால் அது தவறு என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இந்த விடயம் தொடர்பாக தற்போது பொலிஸாரிடம் பல முஸ்லிம் பிரதிநிதிகள் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அறியமுடிகிறது.



காரைதீவு பிரதேச சபை, தமிழ் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளை கொண்டியங்கும் ஓர் ஒற்றுமையான பிரதேச சபையாகும். அங்கு இடம்பெறும் அபிவிருத்தி வேலைகள், சிரமதானப் பணிகள், வீதி துப்புரவுப் பணிகள், மின்குமிழ் பொருத்தும் பணிகள் அனைத்தையும் இனப்பாகுபாடுகளின்றி எமது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் தவிசாளர் ஜெயசிறில் மிகவும் நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் ஒற்றுமையாகவும் கடந்த பல வருடங்களாக செய்துவருவதை நாம் அறிவோம்.

பொறுப்புவாய்ந்த கூட்டமைப்பு மக்கள் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் மதத்தை அவமானப்படுத்தும் விதமாக கருத்துகளை தெரிவித்திருப்பின் தவறு என்பது கட்சித் தலைமைக்கு நன்கு விளங்கும். அதற்காகவே சம்பந்தப்பட்ட தவிசாளருடன் தொடர்புகொண்டு இவ்வாறான கருத்துகளை கூறியுள்ளீர்களா என்பதை கேட்டேன். அவர் அதை முற்றுமுழுதாக மறுத்தார். தாம் அப்படி மதம் சார்ந்த அவதூறான கருத்துகள் எதையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கவில்லை என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையே முறுகல் நிலையை தோற்றுவிக்கும் முயற்சியில் இரு இனங்களைச் சேர்ந்தவர்களும் முற்படுவது இன்றைய நிலையில் நல்லதல்ல. ஒருவர் தவறான கருத்தை தெரிவித்ததாக சந்தேகம் ஏற்படின் சம்பந்தப்பட்டவருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பேசித்தீர்ப்பதே சிறந்த அணுகுமுறையாகும்.

ஏட்டிக்குப் போட்டியாக ஊடகங்களிலோ சமூக வலைத்தளங்களிலோ அவதூறாக ஒருவர் மற்றவரை பற்றி கருத்துகளை தெரிவிப்பது சமூக ஒற்றுமையை பாதிக்கும். இதேவேளை, பொலிஸாரிடம் முறையிடுவதனால் கருத்து முரண்பாடுகள் விரிவடையவும் வாய்ப்புகள் உள்ளன.

தமிழ், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து செயற்படும் காரைதீவு பிரதேச சபை தொடர்ந்தும் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்பதே எமது கூட்டமைப்பினதும் இலங்கை தமிழரசுக் கட்சியினதும் எதிர்பார்ப்பு.

ஏதும் மனக்கசப்புகள் ஏற்படின் நேராக பேசி பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்த்து தொடர்ந்தும் பிரதேச சபை ஒற்றுமையாக செயற்பட அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் மனக்கசப்புகளை மறந்து புரிந்துணர்வுடன் தொடர்ந்தும் செயலாற்றுமாறு கூட்டமைப்பின் சார்பாக வேண்டுகிறேன் – என்றார்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைபீடத்தின் 8ஆவது சர்வதேச ஆய்வரங்கு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் 8ஆவது சர்வதேச ஆய்வரங்கு கலாநிதி ஆர்.ஏ.சர்ஜுனின் ஒருங்கிணைப்பில் "இஸ்லாமிய மற்றும் அரபுக் கற்கைகள் ஊடாக நம்பிக்கை சார்ந்த சமூக ஒத்திசைவை ஊக்குவித்தல்" எனும் தொனிப்பொருளில் அரறபு மொழி பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம்.எம்.மஸாஹிரின் தலைமையில் நாளை புதன்கிழமை (04.08.2021) இணையவழியில் நடைபெறவுள்ளது.

இந்த சர்வதேச ஆய்வரங்கிற்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளதுடன், இவ்வாய்வரங்கின் தொடக்க நிகழ்வின் பிரதம பேச்சாளராக மலேசிய கெபங்ஸான் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி துணைப் பேராசிரியர் கலாநிதி அஹ்மத் ஸுனாவரி லோங் கலந்து சிறப்பிக்கிறார்.

இவ்வாய்வரங்கில் 86 ஆய்வுக் கட்டுரைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட விருக்கின்றன என்பது விசேட அம்சமாகும் - என ஆய்வரங்கின் செயலாளர் கலாநிதி எஸ்.றிபா மஹ்ரூப் தெரிவித்தார்.

# சாய்ந்தமருது றியலுள் ஜன்னாவுக்கு இலவச குடிநீர்த்தாங்கியும் நீர் வழங்கலும்



(மாளிகைக்காடு நிருபர்)

குவைத் நாட்டின் அல்-நஜாத் சர்வதேச தொண்டு நிறுவன நிதி அனுசரணையில் இலங்கை அல்-நூர் சமூக அமைப்பினால் சாய்ந்தமருது கமு/கமு/றியலுள் ஜன்னா வித்தியாலயத்திற்கு இலவச குடிநீர்த்தாங்கி நிர்மாணித்து இலவச நீர் இணைப்பை பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை முன்றலில் நடைபெற்றது.

அரச காரியாலயங்கள், பாடசாலைகள், பள்ளிவாசல்களுக்கு இலவச குடிநீர் வழங்குதல் மற்றும் பல சமூகநல வேலைத்திட்டங்களை அல்-நூர் சமூக அமைப்பு சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்காக தொடர்ந்தும் நாடளாவிய ரீதியில் செய்துவருகின்றது. அவர்களின் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக அல்-நூர் சமூக அமைப்பின் பிரதேச இணைப்பாளர் ஐ.எல்.றஸ்மியிடம் அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் தவிசாளர் யூ.எல்.என்.ஹுதா முன்வைத்த கோரிக்கைக்கமைய பாடசாலை மாணவர்களினதும், பிரதேச மக்களினதும் பாவனைக்காக இவ்வேலைத்திட்டத்தை துரிதகதியில் முடித்து, நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

சாய்ந்தமருது கமு/கமு/றியலுள் ஜன்னா வித்தியாலய அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய மின் அத்தியட்சகர் ஆரிஸ் அக்பர், அல்-மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்காவின் தவிசாளர் யூ.எல்.என்.ஹுதா, அல்-நூர் சமூக அமைப்பின் இணைப்பாளர், தொண்டர்கள், பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர் எம்.ஐ.அஹுத், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை பழைய மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# 40 இலட்சம் தென்னங்கன்றுகள் நடும் தேசிய வேலைத்திட்டம் மட்டக்களப்பு - மங்களகமவிலும்



(மண்முனை நிருபர்)

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் உள்ளூர் உற்பத்தியையும் கிராமிய மற்றும் சுயபொருளாதாரத்தினை அதிகரிக்கும் முகமாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் "வீட்டுக்கு வீடு தென்னை" எனும் தொனிப்பொருளில் 40 இலட்சம் தென்னங்கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டம் நேற்று முன்தினம் மங்களகமவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனின் ஆலோசனைக்கமைவாக, ஏறாவூர்ப்பற்று - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மங்களகம கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு தலா இரண்டு தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஏறாவூர் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.திருநாவுக்கரசு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் மற்றும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மீராவோடை அமீர் அலி வித்தியாலயத்தில் சிரமதானம்





(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட மீராவோடை அமீர் அலி வித்தியாலயத்தில் சிரமதான நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்ற இச்சிரமதானப் பணியில், மீராவோடை மேற்கு சமூர்த்தி பயனாளிகள் குழுவினர் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டு பாடசாலை வளாகம் மற்றும் வகுப்பறைகளை சுத்தம்செய்தனர்.

குறித்த சிரமதானப் பணியை மேற்கொண்ட நபர்களுக்கு பாடசாலையின் அதிபர் நன்றிகளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹொரவபொத்தானையில் மோட்டார் சைக்கிள் விபத்து; யுவதியொருவர் அதே இடத்தில் பலி - ஒருவர் படுகாயம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - ஹொரவ பொத்தானை பிரதான வீதி திரியாய் சந்தியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் யுவதியொருவர் உயிரிழந்துள்ளதாகவும், மற்றுமொரு யுவதி படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றில் வேலைசெய்து வருவதாகவும் நேற்று காலை வேலைக்கு செல்வதற்காக வீதிக்கு வந்தபோது ஆடைத் தொழிற்சாலைக்கு சொந்தமான பஸ் நேரத்துக்கு முன்னர் சென்றுள்ளதால் அந்த பஸ்ஸை மோட்டார் சைக்கிளில் துரத்திச்சென்ற இரு யுவதிகள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் மஹதிவுல்வெவ - மயிலகுடாவ பகுதியைச் சேர்ந்த கயானி மதுசானி (21 வயது) யுவதி உயிரிழந்துள்ளதாகவும் அவரது சக நண்பி (17 வயது) படுகாயமடைந்துள்ளதாக வும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த யுவதியின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பிலான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 81 சதவீதமானோருக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது



(அக்கரைப்பற்று நிருபர்)

ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்று முன்தினம் வரையில் 30 வயதிற்கு மேற்பட்ட 11,183 பேர் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுள்ளதுடன், தடுப்பூசிபெற தகுதியானவர்களின் எண்ணிக்கையில் இத்தொகை 81.8 வீதமாக காணப்படுகின்றது.

இரண்டாம் கட்டமாக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொண்டதாக ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார பதில் வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கை தூர பிரதேச மக்கள் நலன்கருதி நடமாடும் சேவை மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கமைவாக கண்ணகி கிராமத்திலும் அலிக்கம்பை கிராமத்திலும் இச்சேவை இடம்பெறுவதாக அவர் கூறினார்.

தூர பிரதேசங்களில் வாழும் மிகவும் கஸ்டமான மக்களின் நலன்கருதியே கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் ஆலோசனையின் பிரகாரம் நடமாடும் சேவை இடம்பெறுவதாக இதன்மூலம் மக்கள் இலகுவான முறையில் தடுப்பூசியினை பெற்றுவருவதாகவும் குறிப்பிட்டார்.

இதேநேரம் மேலதிகமாக தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதன் பிற்பாடே ஏனைய நான்கு இடங்களில் தடுப்பூசிகள் ஏற்றப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.



தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கைகளில் வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் கடமையாற்றி வரும் நிலையில், பிரதேச செயலாளர் வி.பபாகரனின் வழிகாட்டலில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து பொதுமக்களை பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் விழிப்பூட்டல் நடவடிக்கை என பல்வேறு செயற்பாடுகளில் முற்றும் முழுதாக ஈடுபட்டு வருகின்றனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரிவுகளுக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், இந்நடவடிக்கை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் மேற்பார்வையில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பதாகக் கூறி ஹெரோயின் விற்றவர் வாழைச்சேனையில் கைது

(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை 4 மீன்பிடி வீதியில் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரி ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே மூன்று கிராம் போதைப்பொருளுடன் குறித்த நபர் (43 வயது) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து போதைப்பொருள் விற்பனைசெய்த பணம் 35,900 ரூபாவும்





போதைப்பொருள் விற்பனைசெய்ய பயன்படுத்தும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனைசெய்வது போன்று அதனுள் மறைத்துவைத்து மிகவும் சூட்சுமமான முறையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே ஹெரோயின் போதைப்பொருடன் இவரின் மனைவி கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு சிறைச்சாலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரும் இப்பிரதேசத்தில் போதையை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுவருவதுடன், அவர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளினால் போதை வியாபாரிகள் பலர் தொடராக கைது செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்று பரவலினால் மட்பாண்ட உற்பத்தியாளர்கள் பாதிப்பு

(வீரமுனை நிருபர்)

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக மட்பாண்ட உற்பத்தியாளர்கள் பாதிப்படைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பாண்டிருப்பு, போரதீவு, முனைத்தீவு ஆகிய பிரதேசங்களில் கனிமண்ணாலான மட்பாண்டங்களை குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டுவரும் நூற்றுக்கணக்கான உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திகளை உரிய காலத்தில் விற்பனை செய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், மட்பாண்டங்கள் விற்க முடியாமல் வீட்டில் தேங்கிக் கிடப்பில் கிடப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, தமக்கு மானிய அடிப்படையில் நிவாரண உதவிகளை வழங்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மவுசாகலை நீர் விநியோக சுரங்கப்பாதை மீள் திருத்தம்

(செ.தி. பெருமாள்)

சுரங்கம் வழியாக செல்லும் நீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த சுரங்க வழிப்பாதையை திருத்தும் பணிகள் தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் லக்சபான நீர்மின் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

இது விடயமாக லக்சபான நீர்மின் நிலைய உயர் அதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது கெனியோன் நீர்த்தேக்கத்தின் நீர்வரத்துக்காக உபயோகிக்கப்படும் மவுசாகலை நீர்த்தேக்கத்திலிருந்து நீர் செல்லும் சுரங்கப் பாதைகளால் சுமார் 30 ஆண்டுகாலமாக நீர் விநியோகிக்கப்படுவதால் சுரங்கப் பாதையை திருத்தும் பணியை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன் காரணமாக கென்யோன் நீர்த்தேக்க பகுதியிலுள்ள நீர்த்தேக்கத்தை சுத்தப்படுத்தும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கென்யோன் நீர்த்தேக்க பகுதி சுத்தப்படுத்தப்பட்ட பின்னர் மவுசாகலை நீர்த்தேக்கத்திலிருந்து நீர் செல்லும் சுரங்கப்பாதை செப்பனிடப்பட உள்ளதாகவும் அவ்வாறு செப்பனிடும் காலங்களில் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தில் வான்கதவுகள் திறந்து விட வாய்ப்புண்டு. அவ்வாறு திறக்கப்படும் காலங்களில் கெனாயோன் நீர்த்தேக்கத்திலிருந்து ஏனைய நீர் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தற்போது மவுசாகலை நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் அதன் கொள்ளளவை எட்டியுள்ளதுடன், கடந்த வாரம் அதிக மழை மத்திய மலைநாட்டில் பெய்தபோது ஒரு அங்குலம் நீரை மட்டுமே வெளியேற்றியதாகவும் அதன்பின்னர் எந்த வகையிலும் நீர் வெளியேற்றப்படவில்லை எனவும் சுரங்கப்பாதைகள் திருத்தும் பணியில் ஈடுபடும்போது நீர் திறந்துவிடப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# திருமண நிகழ்வு உள்ளிட்ட கொண்டாட்டங்களுக்கு மீண்டும் கடுமையான வரையறைகள் விதிக்கப்படலாம்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(ஜுட் சமந்த)

திருமண நிகழ்வுகள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கென வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களை ஒருசிலர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதால் அவ்வாறான நிகழ்வுகளுக்கு மீண்டும் வரையறைகளை விதிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இதுவரைகாலமும் நாட்டில் விதிக்கப் பட்டிருந்த பிரயாணத் தடை ஓரளவு நீக்கப்பட்டுள்ளது. அதேபோன்று திருமண நிகழ்வு போன்ற நிகழ்வுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த ஒருசில வரையறைகளிலும் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், வழங்கப்பட்டுள்ள இந்த நிவாரணங்களை ஒருசிலர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்து கிறார்கள் என்பது கவலைக்குரியதாகும்.

கடந்த சில தினங்களில் நாட்டின் பல பிரதேசங்களில் இடம்பெற்ற திருமண




நிகழ்வுகள் மற்றும் வேறுசில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்களின் மத்தியில் புதிய கொத்தணி இனங்காணப்பட்டமை அதற்கு சிறந்த உதாரணமாகும்.

இதனால், இவ்வளவுகாலமும் அமுலில் இருந்த சுகாதார கட்டுப்பாடுகளிலிருந்து வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். மாறாக, மக்கள் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களை மீறி செயற்படுவார்களாக இருந்தால் மீண்டும் கடுமையான வரையறைகளை விதிக்க நேரிடும். தற்போதுள்ள நிலைமையை மக்களைபோன்று நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோன்று இவ்வாறான நிகழ்வுகளில் பங்குகொள்பவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் அறியவேண்டியது மிகவும் அவசியமாகும். குறைந்தது நிகழ்வுகளுடன் தொடர்புடைய பிரதான தரப்பினராவது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு தமக்கு கொரோனா தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தியிருப்பது மிகவும் அவசியமாகும். இதுதொடர்பில் மீண்டும் மீண்டும் அவதானமாக இருக்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## அனுராதபுரத்தில் இரு குழுக்களுக்கிடையில் மோதல்

### வெட்டுக்காயங்களுக்குள்ளான ஒருவர் வைத்தியசாலையில்

(அனுராதபுரம்)

அனுராதபுரத்தில் இரு குழுக்களுக்கிடயில் ஏற்பட்ட மோதலின்போது பலத்த வெட்டுக்காயங்களுக்குள்ளான இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு அனுராதபுரம், விமானநிலைய வீதிய தீபாணி வித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற் கொண்டுவரும் அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரம் விமான நிலைய வீதியை வசிப்பிடமாகக்கொண்ட இளைஞனொருவரே இவ்வாறு பலத்த வெட்டுக் காயங்களுடன் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

இரண்டு குழுக்களுக்கிடையில் மிக நீண்டகாலமாக இருந்துவந்த பிரச்சினை காரணமாக ஏற்பட்ட மோதலின்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை மேலும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முறிந்து வீழ்ந்த பாரிய மரம்; போக்குவரத்து முற்றாக தடை







(க.கிஷாந்தன், பி. கேதீஸ்)

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை வைத்தியசாலைக்கு அருகில் பாரிய மரமொன்று முறிந்து விழுந்ததால் நேற்று பிற்பகல் அவ்வீதியினூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக திம்புள்ள - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மரம் விழுந்ததன் காரணமாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியை பயன்படுத்துவோர் கொட்டகலை முதல் போகாஹவத்தை வரையான மாற்று வீதியை தோட்ட பாதையின் ஊடாக பயன்படுத்துமாறு பொலிஸார் வாகன சாரதிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். வீதியின் நடுவே விழுந்த மரத்தில் பல பெரிய குளவிக்கூடுகள் கலைந்துள்ளன.

திம்புள்ள - பத்தனை பொலிஸ் அதிகாரிகளும், கொட்டகலை பிரதேச சபையினரும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரும் இணைந்து வீழ்ந்த மரத்தை அகற்ற நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

# வீட்டுப் பணியாளர்களின் பாதுகாப்புக்காக சுரேன் ராகவன் எம்.பி. விசேட பரிந்துரைகள்



வீட்டுப் பணியாளர்கள் தொடர்பில் தற்போது காணப்படும் கொள்கைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான தனது பரிந்துரைகளை, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் அமைச்சு அலுவலகத்தில் வைத்து நேற்று கையளித்தார்.

வீட்டுப் பணியாளர்களின் குறைந்தபட்ச வயதை 18 ஆக ஆக்குதல், 85 ஆயிரமாகவுள்ள வீட்டுப் பணியாளர்களை பதிவுசெய்தல், வீட்டுப் பணியாளர்களுக்கு ஆயுள் காப்புறுதி / ஊழியர் சேமலாம நிதியத்தை உருவாக்குதல் மற்றும் ஹிஷாலினி-189 எனும் வீட்டுப் பணியாளர் அவசர சேவை இலக்கத்தினை அறிமுகப்படுத்தல் போன்ற பரிந்துரைகளை அவர் முன்வைத்துள்ளார்.

# ஹிஷாலினியின் மரண விடயத்தில் சேறுபூசும் அரசியலின் செல்வாக்கு

## மக்கள் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பாயிஸ் விளக்கம்

ஹிஷாலினியின் மரணம் தொடர்பாக சோடிக்கப்பட்ட பொய்யான விடயங்களைப் பரப்பி குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள ஒருசிலர் முயற்சித்து வருவதாக மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான ஏ.ஜே.எம்.பாயிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்துவந்த ஹிஷாலினியின் மரணம் தொடர்பில், வழக்கு விசாரணை இடம்பெற்றுவரும் நிலையில், ஒருசிலர் பல்வேறுபட்ட ஊடகங்களில் சோடிக்கப்பட்ட, பொய்யான விடயங்களை பரப்பி, இந்த விடயத்தை, குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பயன்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளது.

டயகம பிரதேசத்தைச் சேர்ந்த தரகரொருவரினால் 2020 நவம்பர் 18ஆம் திகதி, ஹிஷாலினி என்பவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டிற்கு வேலைக்கு அழைத்துவரப்பட்டிருக்கிறார். அவர் இந்த வீட்டிற்கு வந்த தினத்திலிருந்து “இசானி” எனும் பெயரிலேயே அறிமுகப்படுத்தப்பட்டு, அந்த பெயரினாலேயே அனைவராலும் அழைக்கப்பட்டுள்ளார். இவர் அங்கு வந்தபோது, அவருக்கு வயது 18 என்றே கூறியிருக்கிறார். எனினும், இவர் எரியுண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதியென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இவர் பணிக்கு அழைத்துவரப்பட்டபோது, இவருக்கு வயது பதினாறு வருடங்களும் ஆறு நாட்கள் என்பது உறுதியாகியுள்ளது. எனினும், ஒருசிலர் இன்றும் இவரை சிறுமியாக இனங்காட்டி குற்றம் சுமத்தி வருகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதியிலிருந்து 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ஆம் திகதிவரை கைதுக்குள்ளாகியிருந்தார். ஹிஷாலினி நாடாளுமன்ற உறுப்பினரது வீட்டிற்கு வரும்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் சிறைச்சாலையிலேயே இருந்திருக்கிறார். அதன்பின், ஏப்ரல் 24ஆம் திகதி அவர் மீண்டும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, இதுவரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவ்வாறான நிலையில் தீக்காயங்களுக்குள்ளாகி, இந்த விவகாரத்துக்கு பொறுப்பு கூறவேண்டியவரும் இவரே எனக்கூறி, ஹிஷாலினியின் மரணத்தை வைத்து ஒருசிலர் அரசியல் செய்கிறார்கள்.

ஹிஷாலினி பணிக்கு அமர்த்தப்பட்டதன் பின் அவரை பார்ப்பதற்கோ அல்லது தொலைபேசியில் தொடர்புகொள்வதற்கோ அனுமதிக்கப்படவில்லையென்ற குற்றச்சாட்டொன்றும் முன்வைக்கப் பட்டுள்ளது. உண்மையில் ஹிஷாலினி தமது குடும்பத்தாரோடு தொடர்புகொள்வதற்கு கோரிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவருக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து, இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் பின் ஹிஷாலினி 12 வயது தொடக்கம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். அதாவது 2016ஆம் ஆண்டிலிருந்து இவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு ஏதோவொரு காரணத்துக்காக இவரை 2017ஆம் ஆண்டு பாடசாலையிலிருந்து



வெளியேற்றியிருப்பது தெரியவந்துள்ளது. இந்தத் தகவல்கள் ஊடகங்களுக்கு கிடைக்கப் பெற்றிருந்தபோதிலும், பெரும்பாலான ஊடகங்கள் இது தொடர்பாக எதனையும் கூறாமலே இருந்துள்ளன.

இவ்வாறான நிலையில் நான்கு வருடங்கள் கழிந்ததன் பின், சேவைக்கு வந்து ஏழரை மாதகால குறுகிய காலப்பகுதியில், நாடாளுமன்ற உறுப்பினரது வீட்டில் இவ்வாறான பாலியல் வல்லுறவு சம்பவம் நிகழ்ந்துள்ளமைக்கான எந்தவொரு சாட்சியங்களும் முன்வைக்கப்படாத நிலையில், ஊடகங்கள் தீர்மானமொன்றுக்கு வந்திருப்பது எவ்வாறு? என்பது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதன்பின் பல வருடங்களுக்கு முன், ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய வேறொருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குமூலமொன்றின் மூலம், நாடாளுமன்ற உறுப்பினரது மனைவியின் சகோதரரினால் பாலியல் வல்லுறவு இடம்பெற்றுள்ளதாக பதிவொன்றை மேற்கொண்டு, அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருக்கெதிராக குற்றப்பத்திரம் தாக்கல்செய்து, அவரை கைது செய்திருக்கிறார்கள். இவ்வாறு ஏற்கனவே பணியாற்றிய அந்தப் பெண் அங்கிருந்து சென்று பல வருடங்கள் கழிந்துள்ள நிலையில், இது தொடர்பில் எவரிடமும் எந்தவொரு முறைப்பாட்டையும் மேற்கொள்ளாத இவர், இந்தச் சந்தர்ப்பத்தில் அவசர அவசரமாக இவ்வாறானதொரு கருத்தை முன்வைத்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றதொன்றாகும். இந்தப் பெண், ஹிஷாலினி மரணிப்பதற்கு முன் இந்த வீட்டில் மீண்டும் பணியாளராக வருவதற்கு விருப்பத்தோடு இருந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதோடு, அவரது இந்தத் திடீர் மாற்றம் ஏதாவதொரு சதியொன்றின் அங்கமா என சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஹிஷாலினிக்கு பதியுதீனின் வீட்டில் வைத்து பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றதற்கான எந்தவொரு சாட்சியும் இதுவரை கிடைக்கப் பெற்றதாக இல்லை. எனினும், ஊடகங்கள் மூலம் ஹிஷாலினிக்கு இந்த வீட்டில் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக பொய்யான தகவல்களை பரப்பி, ரிஷாட்டின் நற்பெயரை அழித்தொழிக்கும் சதித்திட்டத்தை அரங்கேற்றிவருவது நன்றாக புலப்படுகிறது.

அதேவேளை, ஹிஷாலினி காலம் தாழ்த்தியே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது. உண்மையில் ஹிஷாலினி காலை 7.20இற்கு முன்னதாகவே அம்பியூலன்ஸ் ஒன்றின் மூலம் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டிருக்கிறார். எனவே, இந்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அதேநேரம் ஹிஷாலினியை வைத்தியசாலையில் அனுமதிக்கும்போது பொய்யான தகவல்களை வழங்கியுள்ளதாகவும் குற்றம் சுமத்துகிறார்கள். உண்மையில் ஹிஷாலினியின் பெயர் மற்றும் வயதை சரியாக கண்டறியக் கிடைத்தது, அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருசில தினங்களுக்குப் பின்னராகும்.

இந்த வீட்டில் பணியாற்றிய மேலும் இருவர் இறந்துள்ளமை தொடர்பாகவும் மற்றுமொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கிறது. ஹிஷாலினி வேலைக்கு வருவதற்கு முன், இந்த வீட்டில் சேவையாற்றி, சேவையிலிருந்து விலகிச் சென்று இரண்டு வருடங்களுக்குப் பிறகு, தமது காதலனோடு ஏற்பட்ட பிரச்சினையொன்றினால் புகையிரதத்திலிருந்து குதித்து அல்லது மோதி உயிரிழந்த சம்பவமொன்றை இதனோடு தொடர்புபடுத்தி, ஊடகங்களினூடாக இந்த வீட்டில் பணிபுரிந்த காலகட்டத்தில் இடம்பெற்றதொன்றாக பொதுமக்களுக்குக் காட்டி, தப்பபிப்பிராயமொன்றை உருவாக்கி யிருக்கிறார்கள். அத்தோடு, மற்றுமொரு முப்பத்தைந்து வயதுடைய பெண்ணொருவர் இங்கு பணிபுரிந்து, விலகிச்சென்று ஒரு வருடத்திற்குப் பின், அவருக்கு தொற்றியிருந்த நோய் காரணமாக அவர் மரணித்திருக்கிறார். இவையனைத்தும் வேறொரு நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் சதியென்பது தெளிவாக புலப்படுகிறது.

இது ஒருசில இனவாத குழுக்களினால் ரிஷாட் பதியுதீனின் அரசியல் பயணத்தை தடுப்பதற்கும், அவரது நற்பெயரை இல்லாதொழிப்பதற்குமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சதியொன்றாகுமெனவும், மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாவத்தகமையில் வீடொன்றிலிருந்து 30 பாம்புக்குட்டிகள் மீட்பு

மாவத்தகம, தெல்கொல்லவத்தை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் படுக்கையறை மெத்தையின்கீழ் 30 பாம்புக்குட்டிகள் இருந்ததாக குருநாகல் மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் சுற்றுச்சூழல் ஆர்வலர் கெலும் சோமரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று இந்த 30 பாம்புக்குட்டிகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டு உரிமையாளரின் மனைவி மற்றும் குழந்தைகள் படுக்கும் மெத்தையின்கீழ், பல நாட்களாக 30 பாம்புக்குட்டிகள் இருந்துள்ளன. கடந்த சனிக்கிழமை குறித்த வீட்டில் இரண்டு குட்டி பாம்புகள் இருந்ததை அவதானித்துள்ளதுடன் அவ்விரு பாம்புக்குட்டிகளையும் வீட்டின் உரிமையாளர் கொன்றுள்ளார்.

கடந்த சனிக்கிழமையிலிருந்து இரவில், கொசு வலையிலிருந்து மற்றொரு பாம்புக்குட்டி படுக்கைக்குள் நுழைந்து, தூங்கிக்கொண்டிருந்த ஒருவரின் உடலில் ஊர்ந்து சென்றுள்ளது. அதன் பின்னர் வீட்டிலுள்ளவர்கள் அந்த பாம்புக்குட்டி தொடர்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் கெலுமுக்கு தெரிவித்துள்ளனர். அதன்பின்னர், அவர் வீட்டை ஆய்வுசெய்தபோது படுக்கையறையிலுள்ள மெத்தையின்கீழ் இருந்து பாம்புக்குட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டை ஆய்வுசெய்தபோதிலும், பாம்புக் குட்டிகள் பொரித்த முட்டையின் துகள்கள் எதுவும் அங்கு இருக்கவில்லையென்றும், வீட்டின் இன்னொரு பகுதியிலிருந்து தாய்ப் பாம்பென நம்பும் ஒரு பாம்பும் கண்டறியப்பட்டு, பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக சுற்றுச்சூழல் ஆர்வலர் மேலும் குறிப்பிட்டார்.




# இலங்கைக்கு மேலும் ஒருதொகை தடுப்பூசிகளை வழங்க எதிர்பார்ப்பு

## சபாநாயகருடனான சந்திப்பில் அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கையில் கொவிட் தொற்றுநோயைக் கட்டப்படுத்துவதற்கு மேலும் ஒருதொகை தடுப்பூசிகளை வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்கா எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று நாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அமெரிக்கத் தூதுவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்திலுள்ள சபாநாயகரின் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் அமெரிக்கத் தூதரகத்தின் பிரதி அரசியல் தலைவர் மார்கஸ் காப்பென்டர் மற்றும் நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானீ ரோஹனதீர ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.



இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் உள்ளிட்ட இரு நாட்டுக்கும் பரஸ்பர நன்மையளிக்கும் விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. விசேடமாக எதிகாலத்தில் நாட்டின் எரிசக்தித்துறையில் அமெரிக்காவினால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் முதலீடுகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் தற்பொழுது காணப்படும் தேர்தல் முறைமையை மாற்றுவதற்காக நாடாளுமன்றத்தினால் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளமை மற்றும் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா மகிழ்ச்சியடைவதாக அந்நாட்டுத் தூதுவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

முழு உலகமும் எதிர்கொண்டுள்ள பேரழிவைத் தரும் கொவிட் தொற்றுநோய் மத்தியில் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அமெரிக்கத் தூதுவர் சபாநாயகரிடம் தெரிவித்தார்.





# ஆற்றில் நீராடச்சென்ற அண்ணனும் தங்கையும் பலி

## படல்கும்புரவில் பரிதாபம்

மொனராகலை, படல்கும்புர பிரதேச ஆறொன்றில் நீராடுவதற்காக சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர் ஒருவரும் சகோதரி ஒருவரும் (தங்கை) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படல்கும்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரவி எல்ல என்ற இடத்துக்கு ஒருசிலர் நேற்று முன்தினம் மாலை 5.35 மணியளவில் நீராடச்சென்றுள்ளனர். அவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆண் ஒருவரும் பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக படல்கும்புர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காமினிபுர, ஒக்கம்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 30 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரரும் சகோதரியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இருவரதும் சடலங்கள் சிரிகல வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் படல்கும்புர பொலிஸார் மேலதி விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கடற்கரையை சுத்தம் செய்வதற்கான 8 இயந்திரங்கள் இலாப நோக்கமற்ற கூட்டமைப்பினால் வழங்கிவைப்பு



சிங்கப்பூரை தளமாகக்கொண்ட உலகளாவிய இலாப நோக்கமற்ற கூட்டமைப்பு, கடற்கரையை சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் எட்டு பீச் டெக் ஹைட்ரோ ஸ்வீபி இயந்திரங்களை இலங்கையின் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ளது. இந்த இயந்திரங்கள் வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவினால் நேற்று நடைபெற்ற விழாவில் கடலோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்வான நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, கடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆணைக் குழுவின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

அண்மையில் மேற்குக் கடற்கரையில் மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து வெளியேற்றப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகளை சுத்தம்செய்வதற்கு இந்த இயந்திரங்கள் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நன்கொடை சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம், பிராங்போர்ட்டிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகம், வெளிநாட்டு அமைச்சு, கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைக்குழு மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்த இயந்திரங்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

பீச்டெக் ஸ்வீப்பி இயந்திரங்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் இலங்கையின் கடற்கரைகளைத் தூய்மைப்படுத்தும் முயற்சிகளுக்கு உதவிகளை வழங்கியமைக்காக கூட்டமைப்பின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் குழுவினருக்கு இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக கூட்டாண்மை மற்றும் வலையமைப்புக்களை உருவாக்குவதில், பிளாஸ்ரிக் கழிவுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான கூட்டணியுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் எதிர்பார்க்கின்றது.

# பல்துறைசார் ஆளுமைகளை வளர்த்தெடுத்த இருவருக்கு விருது வழங்கி கௌரவிப்பு

இலங்கை பல்லின மத இளைஞர், யுவதிகளை தலைமைத்துவம் மற்றும் பல்துறை சார்ந்த ஆளுமைகளாக வளர்த்தெடுக்கும் நாடளாவிய ரீதியிலான வேலைத்திட்டம் கடந்த வருடம் குருநாகல் மாவட்டத்தில் இடம்பெற்ற மைக்கழகத் தலைவர்களுக்கான மாநாட்டில் ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒன்றுகூடுவோம் அமைப்பின் நெறிப்படுத்தலிலும் சர்வோதய தருணோதய வேலைத் திட்டத்தின் அனுசரணையுடனும் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மைக்கழகம் மற்றும் அடுக்குக் கழகங்கள் ஸ்தாபிக்கப்பட்டு இளைஞர், யுவதிகளுக்கு அத்தியாவசியமான எட்டு பாடப் பரப்புகளைக் கொண்ட வழிகாட்டல் புத்தகப்பயிற்சி இடம் பெற்றுவந்தது.

இவ்வேலைத்திட்டத்தின் அரையாண்டு மதிப்பீடு நடத்தப்பட்டு, அதற்கான விருது வழங்கல் நிகழ்வு ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் தலைவர் பிரஷான் டி விசர்வின் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.





இதன்போது நாடளாவிய ரீதியில் அதிகளவான கழகங்களை உருவாக்கி, அதிக இளைஞர், யுவதிகளை பயிற்றுவித்து திறன்மிக்க இளைஞர் யுவதிகளை உருவாக்கியமைக்காக சுயாதீன ஊடகவியலாளரும், பல்கலைக்கழக மாணவி மற்றும் ஒன்றுகூடுவோம் அமைப்பின் குருநாகல் மாவட்ட இணைப்பாளருமாகிய எம்.எவ்.எவ்.பஸ்னாவுக்கு, ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளருமாகிய ம. சுரேஷ்காந்தனுக்கும் விருது வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வானது இணைய வழி மூலம் இடம்பெற்றதுடன், அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




தொகுப்பு:- நா.தினுஷா

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### எகொடஉயன

எகொடஉயன பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் எகொடஉயன பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 440 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேகநபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பூகொடை

பூகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொரவல சந்தி, மண்டாவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையின் பூகொடை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 420 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் எடுத்துச்சென்ற சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு பூகொடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மண்டாவல பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, விசேட அதிரடிப்படையின் பூகொடை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த மற்றுமொரு தகவலுக்கமைய நேற்று முன்தினம் பூகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டாவல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 310 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 750 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பவற்றுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மண்டாவல பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## துப்பாக்கிகளுடன் இருவர் கைது

### புலியன்குளம்

புலியன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நயினமடு பிரதேசத்தில் நேற்று முன்தினம் புலியன்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புலியன்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### திஹகொட

திஹகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வடிகவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையின் கொக்மாதுவ உப முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் அந்த துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 02 தோட்டாக்கள் என்பவற்றுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு திஹகொட பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நாதுகல, மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நேற்று முன்தினம் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் நாளைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## வீதி விபத்துகளில் இருவர் பலி

### மாபாகே

மாபாகே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீகமுவ கொழும்பு வீதியில் நேற்று முன்தினம் நீர்கொழும்பிலிருந்து கொழும்பை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று முச்சக்கரவண்டியின் பின்னால் மோதியதில் விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டர் சைக்கிள் சாரதி மற்றும் அதில் பயணித்த நபர் ஆகிய இருவரும் வீதியில் புரண்டுசென்றுள்ளதுடன் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணம் செய்த நபர் கொழும்பை நோக்கி பயணித்த பவுசரில் மோதுண்டு படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஹிதோகம பிரதேசத்தைச் சேரந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### கம்பஹா

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பஹா, யக்கல வீதியில் நேற்று முன்தினம் நெலும் மாவத்தைக்கு அருகில் கம்பஹாவை நோக்கி பயணித்த கார் வீதியினூடாக பயணித்த நபரொருவரின் மீது மோதியதால் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயங்களுக்குள்ளான குறித்த நபர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் யார் என்பது இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை.

சடலம் கம்பஹா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்துக்குக் காரணமான காரின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். விபத்துடன் சம்பந்தப்பட்ட காரும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சட்டவிரோத மதுபானத்துடன் ஒருவர் கைது

### மொரட்டுமுல்ல

மொரட்டுமுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வில்லோராவத்த, மொரட்டுவை பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் மொரட்டுவை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 33 லீட்டர் 750 மில்லீட்டர் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு மொரட்டுமுல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வில்லோராவத்த பிரதேசத்தைச் சொ்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், எதிர்வரும் 18ஆம் திகதி மொரட்டுவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்து, சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# யாழில் இன்று தடுப்பூசி செலுத்தப்படும் விபரம்

யாழ்ப்பாணத்தில் 3 ஆம் கட்டத் தடுப்பூசி திட்டத்தின் கீழ் இன்று 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தடுப்பூசி போடப்படவுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, கிராமசேவகர்கள் பிரிவு மற்றும் தடுப்பூசி மையங்கள் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இன்று செயற்படவுள்ள தடுப்பூசி மையங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, கிராமசேவகர் பிரிவு ரீதியாக வருமாறு;

சங்கானை - கர்ப்பவதித் தாய்மார் - வட்டு இந்துக் கல்லூரி.

சாவகச்சேரி - J/300, J/319 - சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபம், J/320, J/321, J/337, J/347 – வரணி பிரதேச வைத்தியசாலை, J/322, J/336 – கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை.

யாழ்ப்பாணம் - J/67, J/70, J/77 – சென். ஜோன்ஸ் கல்லூரி, J/91, J/94 (பகுதி) , J/96 (பகுதி) – அரியாலை மகமாரி அம்மன் மண்டபம், J/102, J/104, J/123 (பகுதி) – இலங்கை வேந்தன் மண்டபம்.

காரைநகர் - J/40, J/48 மற்றும் தனியார் போக்குவரத்து பஸ் பணியாளர்கள் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை -காரைநகர்.

கரவெட்டி - அனைத்து முன்களப் பணியாளர்கள் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை -கரவெட்டி.

ஊர்காவற்றுறை - அனைத்து கிராமசேவகர் பிரிவு முன்களப் பணியாளர்கள் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - ஊர்காவற்றுறை., J/38,39 – அனலைதீவு பிரதேச வைத்தியசாலை, J/55, J/58 – நாரந்தனை மருத்துவ நிலையம்.

கோப்பாய் - J/257, J/260, J/268, J/270 - பிரதேச வைத்தியசாலை- கோப்பாய், J/ –263, J/ –264, J/266, J/277 -ஆரம்ப சுகாதார பராமரிப்பு மையம் - உரும்பிராய், J/274, J/–275,,J/ –280 – அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை.

மருதங்கேணி - J/429 – மருதங்கேணி பாடசாலை.

நல்லூர் - கர்ப்பவதித் தாய்மார் – நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

பருத்தித்துறை - J/386, J/392 – வல்வை மகளிர் கல்லூரி.

சண்டிலிப்பாய் - இளவாலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் - சென். தோமஸ் பாடசாலை - மாதகல், பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் - சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

தெல்லிப்பழை - J/215 – அளவெட்டி அருணோதயாக் கல்லூரி (காலை 8 மணி முதல்), J/216 - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி (முற்பகல் 10 மணி முதல்),

J/217 - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி (மதியம் 12 மணி முதல்).

உடுவில் - J/184 - உடுவில் மகளிர் கல்லூரி, J/190 – இணுவில் இந்துக் கல்லூரி, J/194 – தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, J/197 – சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - உடுவில், J/204, J/205 – ஏழாலை முத்தமிழ் மன்றம், J/209 - புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் பாடசாலை.

வேலணை - J/15, J/16, J/19, J/21 – வேலணை சரஸ்வதி வித்தியாலயம்.

# சுகாதார மேம்பாடுகளை இரட்டிப்பாக்கினால் நோய் பரம்பல் கட்டுப்படுத்தப்படும்

## மருத்துவர் யமுனாநந்தா தெரிவிப்பு



சுகாதார மேம்பாடுகளை தற்போதைய சூழலில் இரட்டிப்பாக அதிகரிக்கும்போதே நோய் தொற்று வீதம் குறைக்கப்பட்டு நோய் பரம்பல் கட்டுப்படுத்தப்படும் – என யாழ். போதனா வைத்தியசாலை பிரதி பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொவிட் தொற்று நோய் பரவல் தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை கொவிட் தொற்று 3 அலைகளாக பாதித்துள்ளது. முதலாவது அலையானது 11.03. 2020 தொடக்கம் 03.10.2020 வரை ஏற்பட்டது. இதில் 3 ஆயிரத்து 397 பேர் பாதிக்கப்பட்டனர்.

இரண்டாவது அலை 4.10.2020 தொடக்கம் 14.4.2021 வரை ஏற்பட்டது. இதில் 92 ஆயிரத்து 340 பேர் பாதிக்கப்பட்டனர்.

மூன்றாவது அலை 15.04.2021 இருந்து தற்போதுவரை உள்ளது. இதில் 2 இலட்சத்து 4 ஆயிரத்து 155 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கொவிட் தொற்றின் முதல் அலையின்போது இறப்புவீதம் 0.38 ஆகவும் (13 இறப்புகள்) இரண்டாவது அலையின்போது இறப்புவீதம் 0.64 ஆகவும் (591 இறப்புகள்) மூன்றாவது அலையில் 1.75 ஆகவும் (3,591 இறப்புகள்) அமைந்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் கொவிட் தொற்றால் 90.15 வீதமானவர்கள் குணமடைந்தவர்களாகவும் 1.4 வீதமானவர்கள் சிகிச்சை பலனின்றி இறந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இதேநேரம் கொவிட் தொற்றில் பாதிக்கப்படுபவர்களில் 12 வீதமானோர் 60 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 60 வீதமானோர் 21-60 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் 7.4 வீதமானோர் 10 வயதிற்குட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இதனிடையே இலங்கையில் 14 கர்ப்பிணித் தாய்மார்கள் கொவிட் தொற்றுடன் இறந்துள்ளனர். 2,400 கர்ப்பிணித் தாய்மார்கள் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, முகக்கவசம் அணிதலை முறையாக கடைப்பிடித்தல் வேண்டும். முகக்கவசம் அணிதல் நேரத்தை இரட்டிப்பாக்குதல் வேண்டும். இவ்வாறு சுகாதார மேம்பாடுகளை தற்போதைய சூழலில் இரட்டிப்பாக்க அதிகரிக்கும்போது நோய் தொற்றுவீதம் குறைக்கப்பட்டு நோய் பரம்பல் கட்டுப்படுத்தப்படும் – என்றார்.

கொவிட் தொற்றின் பாதிப்பிலிருந்து முற்றாக விடுபட பொதுமக்களினதும் மருத்துவப் பணியாளர்களினதும் இடையறாத பங்களிப்பு தற்போது அத்தியாவசியமாகின்றது – என அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் ஆர்ப்பாட்டம்



(மன்னார் நகர் நிருபர்)

அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து நேற்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் வலயக்கல்விப் பணிமனைக்கு முன்னால் குறித்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

இதன்போது 24 வருட ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடுகளுக்கு உடனடியாக தீர்வை வழங்கக் கோரியும், ஆசிரியர், மாணவர், பெற்றோர்களை துன்புறுத்துகின்ற கல்வி நெருக்கடிக்கு உடனடியாக தீர்வை வழங்கக் கோரியும், இலவசக் கல்வியை இராணுவ மயமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக இரத்துச்செய்யக் கோரியும் கோரிக்கைகளை முன்வைத்து குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் மன்னார் வலயக்கல்விப் பணிமனைக்கு முன் ஆரம்பமாகி மன்னார் பஜார் வீதியூடாக சென்று மன்னார் மாவட்ட செயலக வீதியை சென்றடைந்தது.

அங்கிருந்து மன்னார் நகர சபை வீதியூடாக மீண்டும் மன்னார் வலயக்கல்விப் பணிமனை வீதியை சென்றடைந்தது.

குறித்த போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டதோடு, போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வவுனியா பல்கலைக்கழகத்துக்கு பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வாழ்த்து



புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வவுனியா பல்கலைக்கழகத்துக்கு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைவரும் பேராசிரியருமான ஸ்ரீ.பிரசாந்தன் இந்த வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் இயங்கிவந்த வளாகத்துக்கு அண்மையில், அரசாங்கத்தினால் தனியான பல்கலைக்கழக அந்தஸ்து அளிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து வவுனியா பல்கலைக்கழகத்துக்கான உத்தியோகபூர்வ இலச்சினைக்குரிய தெரிவில், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் உதவி விரிவுரையாளரான வி.விமலாதித்தனின் இலச்சினை வடிவமைப்பு தெரிவுசெய்யப்பட்டு, ஏற்று அமுல்படுத்தப்பட்டது.

இதனையொட்டி பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் வெளியிட்ட வாழ்த்துச்செய்தியில், வவுனியா பல்கலைக்கழகம் தனது தொடக்கப்புள்ளியிலேயே பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையுடன் உறவுபூண்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா பல்கலைக்கழகம் தான் சார்ந்த மண்ணுக்கும் நம் நாட்டுக்கும் பெருமையும் புகழும் சேர்க்கும் வகையில், சிறந்தோங்கி வளரவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், ஆய்வுரீதியிலும் கற்பித்தல்ரீதியிலும் அப்பல்கலைக்கழகமானது பலதுறைகளிலும் பிரகாசிக்கவேண்டுமெனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதுவராக ராகேஸ் நடராஜ் நேற்று தனது அலுவலகத்தில் பதவியேற்றார். இவர் தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இதற்கு முன் கண்டி இந்திய உதவி உயர்தானியாராக பணிபுரிந்தார்.**

# விபத்து தொடர்பான செய்தி சேகரிக்கச்சென்ற இளம் ஊடகவியலாளர் சஜீவன் மீது தாக்குதல்



(வவுனியா நிருபர்)

வவுனியா வீரபுரம் உள்ளக வீதியில் நேற்று முன்தினம் மாலை நாற்சந்தியில் மோட்டார் சைக்கிள் - முச்சக்கரவண்டி - இராசேந்திரகுளம் ஆடைத்தொழிற்சாலை வான் என மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் அவ்விடத்தில் மக்கள் ஒன்றுகூடி பதற்றமான நிலை காணப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற இளம் ஊடகவியலாளரான ராஜேந்திரன் சஜீவன் மீது விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டி மற்றும் வேனில் பயணித்த நபர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். ஊடகவியலாளரின் புகைப்பட கெமராவையும் பறித்து வீசியதுடன் அவரின் மோட்டார் சைக்கிளையும் தள்ளி வீழ்த்தியுள்ளனர்.

இந்நிலையில், தாக்குதலுக்குள்ளாகிய ஊடகவியலாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் விபத்து இடம்பெற்ற இடத்தில் பொதுமக்களுடன் தகாத வார்த்தைப்பிரயோகங்களும் பிரயோகித்துள்ளனர்.

NP - ABO 6809 என்ற முச்சக்கரவண்டியில் பயணித்தவரும் இராசேந்திரகுளம் ஆடைத்தொழிற்சாலை வானின் பயணித்தவருமே இவ்வாறு ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்களாவர்கள்.

# வீட்டுத்திட்டத்தின் மிகுதி கொடுப்பனவை வழங்குமாறு கோரி சங்கானையில் ஆர்ப்பாட்டம்




வீட்டுத்திட்டத்தின் மிகுதி கொடுப்பனவை வழங்குமாறு கோரி நேற்று யாழ்ப்பாணம் - சங்கானை பிரதேச செயலகம் முன்பாக வீட்டுத்திட்ட பயனாளிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுழிபுரம் மத்தி ஜே/173 கிராமசேவகர் பிரிவு மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த 2018 மற்றும் 2019 காலப்பகுதியில் ஜே/173 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட 45 குடும்பங்களுக்கு ரூபா ஐந்து இலட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், குறித்த வீட்டுத்திட்டத்திற்கான நிதி எமக்கு முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. ஒரு பகுதியளவு நிதி மட்டுமே எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. மிகுதி வேலைகளை நாங்கள் கடன்பட்டுதான் செய்துள்ளோம். இருந்தாலும் வேலைகளை முழுமையாக பூர்த்திசெய்ய முடியவில்லை.

எமது வீடும் முழுமை பெறாத நிலை ஒரு பக்கம் இருக்க, மறுபக்கம் கடன் கொடுத்தவர்களின் தொல்லை என நாங்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றோம்.

இந்த வீட்டுத் திட்டம் எங்களுக்கு வழங்குவதற்கு முதல் நாங்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருந்தோம். ஆனால், இந்த வீட்டுத் திட்டமானது தற்போது எங்களை கடன் சுமையில் தள்ளியுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் எமது விடயத்தை கருத்திற்கொண்டு எமது வீட்டுத் திட்டத்தின் மிகுதி நிதியை சீக்கிரம் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

# வடமாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் சுகாதாரத் தொண்டர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



(சாவகச்சேரி நிருபர்)

கடந்த 2019/11/25 அன்று நிரந்தர நியமனம் கிடைக்கப்பெற்று பின்னர் இடைநிறுத்தப்பட்டுள்ள வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள் 02/08/2021 திங்கட்கிழமை மதியம் வடக்கு மாகாண சபை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

"மூன்று முறை நேர்முகத்தேர்வுக்கு முகங்கொடுத்த எங்களின் முடிவு என்ன?,

வடமாகாண பிரதம செயலரே பதிலைக் கூறுங்கள்?,

155 நாட்களாக எமது போராட்டம் தொடர்கிறது எமது நிலை என்ன?,

நியமனம் கிடைக்கப்பெற்ற எங்களை கடமையில் அமர்த்துங்கள்.,

எமக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்திற்கு பதில் கூறுங்கள் ஆகிய சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவண்ணம் யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து வடக்கு மாகாண சபை வரை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், புதிதாக நியமனம் கிடைத்து வந்திருக்கும் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவிடம் தமது நிலை தொடர்பான மகஜரொன்றையும் வழங்கி வைத்திருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்த பின்னர் சுகாதாரத் தொண்டர்களை அழைத்துப் பேசுவதாக பிரதம செயலாளர் உறுதியளித்துள்ளார். அத்துடன், குறித்த தினத்தில் ஆளுநரின் செயலாளரிடமும் மகஜர் ஒன்றினைக் கையளித்திருப்பதாக சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 25/11/2019 அன்று 388 சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு பின்னர் அது இடைநிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், பாதிக்கப்பட்ட தொண்டர்கள் தற்போது 155 நாட்களாக தொடர்ந்து ஆளுநர் செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தமிழ் அகதிகள் சட்டவிரோத குடியேறிகளா?

## மனிதநேயமற்ற மத்திய அரசு - ராமதாஸ் கடும் கண்டனம்

"தமிழ்நாட்டில் வாழும் இலங்கை அகதிகள் அனைவரும் சட்டவிரோதமாக குடியேறியவர்கள்''- என மத்திய அரசு கூறியிருப்பது மனிதநேயமற்றது என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டொக்டர் ராமதாஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

''தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் குடியேறியவர்கள் என்றும் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க முடியாது என்றும் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. மத்திய அரசின் இந்த நிலைப்பாடு மனிதநேயமற்றது; ஏற்றுக்கொள்ள முடியாதது.

திருச்சி கொட்டப்பட்டு அகதிகள் முகாமில் வாழும் ஈழத்தமிழர்கள் தங்களுக்கு இந்தியக் குடியுரிமை கோரி தொடர்ந்த வழக்குகளை விசாரித்த மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் ஒற்றை நீதிபதி, அவர்கள் அனைவரிடமும் விண்ணப்பம் பெற்று, மத்திய அரசுக்கு அனுப்பி இந்தியக் குடியுரிமை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கும்படி திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு கடந்த 2019ஆம் ஆண்டு ஆணையிட்டார். அதன்மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளாத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.



**''சட்டவிரோதமாக குடியேறியவர்களாம்''**

இந்நிலையில், இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்க ஆணையிட்டு ஒற்றை நீதிபதி அளித்த தீர்ப்பை எதிர்த்து மத்திய அரசு மேல்முறையீடு செய்துள்ளது.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போதுதான் மத்திய அரசு சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என தெரிவித்துள்ளார். மேலும் இலங்கை தமிழ் அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

**எந்திரத்தனமான நிலைப்பாடு**

மத்திய அரசின் இந்த நிலைப்பாடு தவறானது; சூழல்களை கருத்திற்கொள்ளாத எந்திரத்தனமானதாகும். இந்தியாவுக்குள் கடவுச்சீட்டு, தங்கும் அனுமதி (விஸா) போன்ற ஆவணங்கள் இல்லாமல் வந்தவர்கள், உரிய ஆவணங்களுடன் இந்தியாவுக்கு வந்து தங்கும் அனுமதி காலம் முடிந்த பின்னரும் இந்தியாவுக்குள் தங்கியிருப்பவர்கள் ஆகியோர் தான் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்று இந்தியச் சட்டம் கூறுகிறது.

**இந்தியா வந்தது ஏன்?**

இந்த வரையறை இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு பொருந் தாது. இலங்கைத் தமிழ் அகதிகள் எவரும் தங்களின் சொந்த நாட்டை விட்டுவிட்டு சொகுசு வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக இந்தியாவில் குடியேறவில்லை.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் கடந்த 1980களின் தொடக்கத்திலிருந்து 2009ஆம் ஆண்டுவரை உக்கிரமாக போர் நடைபெற்றது. அந்தக் காலகட்டத்தில் இலங்கை இராணுவம் நடத்திய இனப்படுகொலைகளில் உயிர் பிழைப்பதற்காகவும், இராணுவத்தினனரின் பாலியல் அத்துமீறல்கள், உடல்ரீதியிலான கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து தப்பிப்பதற்காகவும்தான் அவர்கள் இந்தியாவுக்குள் வந்தனர்.

**சரணடைந்தவர்கள்**

அவர்கள் இந்தியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைய வில்லை. கடல்வழியாக வந்தவர்கள் காவல்துறை யினரிடம் சரணடைந்து, மத்திய, மாநில அரசுகளின் கண்காணிப்பில் தான் அவர்கள் காலம் கழித்து வருகின்றனர். அவர்கள் எந்த சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடவில்லை. அவர்களை சட்டவிரோத மாகக் குடியேறியவர்கள் என்று குற்றஞ் சாட்டுவது தவறாகும்.

> **"இலங்கைத் தமிழ் அகதிகள் எவரும் தங்களின் சொந்த நாட்டை விட்டுவிட்டு சொகுசு வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்காக இந்தியாவில் குடியேறவில்லை''**
> **''இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக நுழையவில்லை. கடல்வழியாக வந்தவர்கள் காவல்துறையினரிடம் சரணடைந்து, மத்திய, மாநில அரசுகளின் கண்காணிப்பில்தான் அவர்கள் காலம் கழித்து வருகின்றனர். அவர்கள் எந்த சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடவில்லை. அவர்களை சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்று குற்றஞ்சாட்டுவது தவறாகும்''**

**குடியுரிமை வழங்கல் நடைமுறை**

சொந்த நாட்டில் போரோ, இனம், மொழி, மதம் ஆகியவற்றின் அடிப்படையிலான கொடுமைகளோ இழைக்கப்படும்போது, அந்த நாட்டைச் சேர்ந்த மக்கள் அண்டை நாடுகளில் தஞ்சம் புகுவது இயல்பு. அவ்வாறு தஞ்சம் புகுந்த மக்களை பாதுகாப்பதும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் அவர்கள் வந்த நாட்டிலேயே குடிமகன்களாக வசிக்க விரும்பினால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு குடியுரிமை வழங்குவதும் பல பத்தாண்டுகளாக நடைபெற்று வருகிறது.

**ஐ.நா. உடன்படிக்கை**

இதற்கு வகை செய்வதற்காகவே 1951ஆம் ஆண்டில் ஐ.நா. அகதிகள் உடன் படிக்கை உருவாக்கப்பட்டது. அதில் இந்தியா இன்னும் கையெழுத்திட வில்லை என்பதாலும், இந்தியாவில் அகதிகள் குறித்த தேசியக் கொள்கை இல்லாததாலும்தான் இந்தியாவுக்குள் தஞ்சம் புகும் அகதிகள் அனைவரும் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு. எங்கு மனித உரிமை மீறல்கள் நடந்தாலும் உடனடியாக குரல் கொடுப்பதை வழக்கமாக வைத்திருக்கிறது.

**நியாயம் இல்லை**

அத்தகைய நாடு அகதிகளுக்கு வாழ்வளிப்பதற்கான உடன்படிக்கை யில் கையெழுத்திடாததும், அவர் களை சட்டவிரோத குடியேறிகள் என்று கூறுவதும் இந்தியாவின் உயரத்திற்கு ஏற்றதல்ல. அதுமட்டு மின்றி மதம், இனம், மொழி ஆகிய வற்றின் பெயரால் சொந்த நாடு களில் கொடுமைக்குள்ளாகி இந்தியா வில் நீண்டகாலமாக தங்கியிருப்பவர் களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டு வருகிறது. அந்த உரிமையை இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் மறுப்பது எந்த வகையிலும் நியாயமல்ல.

**சட்டசபை தீர்மானம்**

பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கா னிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து மதம், இனம் ஆகியவற்றின் பெயரால் கொடுமைகளுக்கு ஆளாகி, இந்தியா வுக்கு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு முன்வந்தவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும்போது, இலங்கையிலிருந்து வந்த தமிழ் அகதிகளுக்கு மட்டும் அந்த உரிமை மறுக்கப்படுவது சரியல்ல. எனவே, இலங்கை தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்குவது தான் சரியானதாகும். ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கவேண்டும் என்று கோரி சட்டப்பேரவையில் தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" - இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

**தி.மு.க. தேர்தல் வாக்குறுதி**

தமிழகத்தில் ஆளும் தி.மு.கவின் சட்டசபை தேர்தல் அறிக்கையிலும் ஈழத் தமிழருக்கு இந்திய குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டது. தற்போது மத்திய அரசு அப்பட்டமாக இதனை நிராகரித்து சட்டவிரோத குடியேறிகள் என தெரிவித்திருக்கிறது. இது தமிழக அரசியல் கட்சிகளை கடுமையாக அதிர்ச்சியடைய வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய செய்திகள்

# தமிழக சட்டமன்ற நூற்றாண்டு விழா: கலைஞர் திருவுருவப் படம் திறப்பு

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா நேற்று நடைபெற்றது. இந்நிலையில், சட்டமன்ற அரங்கில் தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் திருவுருவப் படம் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தால் திறந்துவைக்கப்பட்டது.

சென்னை மாகாணமாக இருந்தபோது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைகொண்ட சட்டப்பேரவை, கடந்த 1921ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன்படி, சென்னை மாகாண சட்டப்பேரவை உருவாக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், பேரவை நூற்றாண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது.



டில்லி சென்றிருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை சந்தித்துப் பேசினார். அப்போது, சட்டப்பேரவை நூற்றாண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க வருமாறு அழைப்பு விடுத்தார். அத்துடன், தமிழகத்தின் முதலமைச்சராக 5 முறை பணியாற்றியவரும், 13 முறை சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவருமான கலைஞர் கருணாநிதியின் திருவுருவப் உருவப்படத்தை பேரவையில் திறந்துவைக்கவும் குடியரசுத் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதையொட்டி, ஐந்து நாட்கள் சுற்றுப்பயணமாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தமிழகத்துக்கு நேற்று வருகை தந்தார்.

குடியரசுத் தலைவர் வருகையை முன்னிட்டு சென்னை விமான நிலையம், ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலக



குடியரசு தலைவருக்கு புத்தகங்களை பரிசளித்த முதலமைச்சர் ஸ்டாலின்...

வளாகம், சட்டமன்ற மண்டபம் ஆகிய இடங்களில், காவல் ஆணையர் தலைமையில் காவல் அதிகாரிகள், காவலர்கள், போக்குவரத்துக் காவல், கொமாண்டோ படை வீரர்கள், சிறப்புக் காவல் படை உள்ளிட்ட 5,000 காவல் துறையினருடன் 5 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

**தமிழ்நாடு சட்டமன்ற வரலாறு**

1919ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களின் அடிப்படையில், சென்னை மாகாண மன்றத்திற்கு 1920ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி சுப்பராயலு ரெட்டியார் தலைமையில் முதல் அமைச்சரவை பொறுப்பேற்றது. 1921ஆம் ஆண்டு, ஜனவரி 12ஆம் திகதி சட்டமன்றம் தொடங்கிவைக்கப்பட்டது. சுப்பராயலுவைத் தொடர்ந்து, பனகல் ராஜா, பி.சுப்பராயன், முனுசாமி நாயுடு, பொப்பிலி ராஜா, பி.டி.ராசன் உள்ளிட்ட நீதிக்கட்சியின் முதலமைச்சர்கள் 17 ஆண்டுகாலம் பதவி வகித்தனர்.

நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில்தான் பெண்களும் வாக்களிக்கலாம் என்றும், பிரதிநிதித்துவம் பெறலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன் காரணமாகவே 1927ஆம் ஆண்டு டொக்டர் முத்துலட்சுமி ரெட்டி முதல் பெண் உறுப்பினராக தெரிவானார்.

1957-58ஆம் ஆண்டுகளில் அப்போதைய நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம் தனது பட்ஜெட் உரையை முதன் முதலில் தமிழில் வாசித்தார். 1967-68ஆம் ஆண்டுகளில் சபாநாயகராக இருந்த சி.பா.ஆதித்தனார், பேரவை நிகழ்வு தொடங்கும் முன் திருக்குறள் வாசிப்பதை ஆரம்பித்து வைத்தார். 1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா ஆட்சியின்போது, சென்னை மாகாணம் தமிழ்நாடு என பெயர் மாற்றம் பெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாடு சட்டப்பேரவை அரங்கில் ஏற்கனவே திருவள்ளுவர், காந்தி, அம்பேத்கர், பெரியார், அண்ணா, காமராஜர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா உள்ளிட்ட 15 தலைவர்களின் படங்கள் இடம்பெற்றுள்ளன. 16ஆவதாக, தமிழ்நாட்டில் முதலமைச்சராக 5 முறையும், 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய கலைஞர் கருணாநிதியின் முழு உருவப்படம் திறக்கப்படுகிறது. 1977இல் காமராஜரின் உருவப்படத்தை அன்றைய குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டி திறந்து வைத்தார். அதன்பின்னர் நேற்று கலைஞரின் திருவுருவப் படத்தை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்துள்ளார்.

# இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்: இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு

## படுகாயமடைந்த நாகை மீனவர் வைத்தியசாலையில் அனுமதி

எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக நாகை மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் மீனவரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

அக்கரைப்பேட்டையை சேர்ந்த கௌதமன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் கடந்த 28ஆம் திகதி கலைச்செல்வன் உள்ளிட்ட 10 மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர்.

அவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கே 5 நாட்டிகல் மைல் தூரத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக கூறப்படுகிறது.

இதில் கலைச்செல்வனுக்கு தலையின் இடதுபக்கத்தில் காயம் ஏற்பட்டதையடுத்து, அவரை மீட்ட சக மீனவர்கள் நாகை அரச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இந்தச் சம்பவம் நாகை மீனவர்கள் இடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், காயமடைந்த மீனவரை நாகை மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பி உரிய நடவடிக்கை எடுப்பதாக மீனவர்களிடம் தெரிவித்தார்.



தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா - இலங்கை நாடுகளின் 1974 மற்றும் 1976ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்மூலம் தமிழகத்தின் ஒரு பகுதியான கச்சதீவு, இலங்கைக்கு சொந்தமானது. இதன் பின் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை கேள்விக்குறியானது. தமிழக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போதெல்லாம் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர்.

# 1976இல் நடந்த விமான விபத்தில் இறந்தவர் வீடு திரும்பிய அதிசயம்

மும்பையில் 1976இல் இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்ததாக கருதப்பட்ட கேரளா - கொல்லத்தைச் சேர்ந்தவர் 45 ஆண்டுகளுக்கு பின் வீடு திரும்பியுள்ளார்.

கேரளாவின் - கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்த சஜ்ஜத் டங்கல் என்பவர் தனது 25ஆவது வயதில் கலாசார நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நடிகை ராணி சந்திரா குழுவுடன் 1976இல் அபுதாபி சென்றார். அங்கிருந்து குழுவினர் வந்த விமானம் மும்பையில் விபத்தில் சிக்கியதில் நடிகை ராணி சந்திரா உட்பட 95 பேர் உயிரிழந்தனர். ஒரு சில காரணங்களால் அந்த விமானத்தில் சஜ்ஜத் டங்கல் பயணிக்கவில்லை.




தன்னுடன் வந்த குழுவினர் பலியானதால் அதிர்ச்சியடைந்த அவர், மனதளவில் பாதிக்கப்பட்டார். பின் மும்பை வந்து சிறு வேலைகளை செய்து வாழ்ந்துள்ளார். விமான விபத்திற்குப் பின் சஜ்ஜத் வீடு திரும்பாததால் அவரும் இறந்துவிட்டதாகவே குடும்பத்தினர் கருதினர்.



சஜ்ஜத்தின் உண்மை நிலையை சமீபத்தில் அறிந்த ஒரு தொண்டு நிறுவனம் அவரை குடும்பத்தினருடன் கடந்த சனிக்கிழமை (ஜூலை 31) சேர்த்து வைத்தது. அவரது 91 வயது தாய் பாத்திமா பீவி இறந்ததாக கருதப்பட்ட தன் மகன் 45 ஆண்டுகளுக்கு பின் உயிருடன் வந்தபோது கண்ணீர் மல்க வரவேற்றார். குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அவரை ஆரத்தழுவினர். அவரது கிராமமே உற்சாகத்தில் மிதந்தது.

# சீனாவின் 20 நகரங்களை ஆக்கிரமித்த டெல்ட்டா

## வைரஸ் பரவலை கட்டுப்படுத்த மீண்டும் ஊரடங்கு அமுல்



உருமாறிய கொரோனா டெல்ட்டா வைரஸ் பரவலையடுத்து சீனாவில் மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 20 கோடியை அண்மித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிலைவரப்படி உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 19.90 கோடியை கடந்துள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பரில் முதன் முதலாக கண்டறியப்பட்ட கொவிட்-19 வைரஸ், உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் பெரு நகரங்களில் பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

தொற்று பாதிப்பு ஏற்பட்டு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டாலும் கூட தொற்றின் வீரியம் குறைந்தபாடில்லை. கொரோனா வைரஸ் உருமாற்றமடைந்து பல அலைகளாக தாக்கத் தொடங்கியுள்ளது. இதனால், உலக நாடுகள் விழி பிதுங்கி நிற்கின்றன.

இந்நிலையில், உலகம் முழுவதும் இதுவரை கொரோனாவால் (பத்திரிகை அச்சுக்குச் செல்லும்வரை) 19,90,98,259 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 42,42,952 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனா தொற்றுக்குள்ளானோரில் இதுவரை 17,97,02,762 பேர் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 1,51,52,545 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 90,501பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தற்போதைக்கு தடுப்பூசியால் மட்டுமே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிவருவதால், தடுப்பூசி போடும் பணியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

சீனாவில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறிவரும் நிலையில் தற்போது 20 நகரங்களில் டெல்ட்டா வைரஸ் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது.

டெல்ட்டா வைரஸ் பரவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் பரிசோதனை நடத்த சீனா முடிவு செய்துள்ளது. 12 மாகாணங்களில் டெல்ட்டா வைரஸ் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

வூஹான் மாகாணத்தின் ஜூஜென் நகரில் 3 நாட்களுக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு பரிசோதனை நடைபெறுகிறது. சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு ஏற்கனவே சீனத் தலைநகரான பீஜிங் நிர்வாகம் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

# விண்வெளி ஆய்வில் திருப்புமுனை: கருந்துளைக்கு பின்னால் ஒளி



## முதல் முறையாக கண்டறிந்த விஞ்ஞானிகள்

பூமியிலிருந்து 80 கோடி ஒளியாண்டுகள் தொலைவிலுள்ள மிகப்பெரிய கருந்துளையின் பின்னாலிருந்து வெளிச்சம் வெளிப்படுவதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

கருந்துளை என்பது பிரபஞ்சத்தில் திருப்பங்கள் நிறைந்த ஆச்சரியப்பட வைக்கும் விடயங்களில் ஒன்று. அண்டத்தில் வேகமாக நகரும் துகள்கள் மட்டுமல்ல; ஒளியும்கூட தப்பிக்க முடியாத அளவுக்கு தீவிர ஈர்ப்புச் சக்தியை இது கொண்டுள்ளது. வான்வெளியிலுள்ள நட்சத்திரம் நிறைவு காலத்தில் கருந்துளையாக மாற்றமடைகிறது. அப்போது, அதன் ஈர்ப்பு விசை அதிகமாகி சுற்றியிருக்கும் பொருட்களை தனக்குள் இழுக்கும். பிரபஞ்சத்தில் பல இலட்சம் கருந்துளைகள் இருப்பதை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சூரியனைவிட மூன்று மடங்கு பெரியளவில் இருக்கும் நட்சத்திரங்கள் கூட, கருந்துளையாக மாறும்போது ஒரு நகரின் அளவிற்கு சுருங்கிவிடும். இந்த கருந்துளைகளின் அடர்த்தி மிக அதிகமாக இருக்கும். பூமியிலிருந்து சில கோடி ஒளியாண்டுகள் தொலைவிலுள்ள கருந்துளை, முதன்முறையாக 2019ஆம் ஆண்டு புகைப்படம் எடுக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் கருந்துளைகள் வெறும் வெற்று இடங்கள் என்று நம்பப்பட்டது. இந்நிலையில், ஸ்டான்போர்ட் வானியல் ஆராய்ச்சியாளர் டொன் வில்கின்ஸ் மற்றும் அவரது ஆராய்ச்சிக் குழுவினர், பூமியிலிருந்து 80 கோடி ஒளியாண்டுகள் தொலைவிலுள்ள மிகப்பெரிய கருந்துளையின் பின்னால் இருந்து வெளிச்சம் வெளிப்படுவதை கண்டறிந்துள்ளனர்.

இதுபற்றி இயற்பியல் விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் தனது பொது சார்பியல் கோட்பாட்டில் முன்பே தெரிவித்துள்ளார். ஐன்ஸ்டீனின் கோட்பாட்டின்படி,

'கருந்துளைக்குள் விழுங்கப்படும் நட்சத்திரங்கள், சிறுகோள்களின் ஒளி அலைகள் முற்றிலுமாக கருந்துளைக்குள் மறைந்துவிடுவது இல்லை. இது, சில நேரங்களில் கருந்துளையின் மறுபக்கமோ அல்லது பின்புறத்திலோ தனது ஒளியை வெளிப்படுத்துவதை காண்பதற்கு சாத்தியமுள்ளது' என தெரிவித்துள்ளார்.

கருந்துளைக்குள் செல்லும் எந்த வெளிச்சமும் வெளியே வருவதில்லை என்ற கருத்து நிலவிவந்த நிலையில், கருந்துளையின் மறுபக்கத்திலிருந்து ஒளி அலைகள் வெளியே வருவதை ஆராய்ச்சி யாளர்கள் கண்டறிந்திருப்பது இதுவே முதல் முறை. விண்வெளி ஆராய்ச்சியில் இது மிகப்பெரிய திருப்புமுனையாக கருதப்படுகிறது.

# அரசின் 'ஹெல்த் பாஸ்' முறையை எதிர்த்து போராட்டத்தில் குதித்த பிரான்ஸ் மக்கள்

## கண்ணீர்ப்புகை குண்டுவீச்சால் பதற்றம்






பிரான்ஸில் மக்கள் பொது இடங்களுக்கு செல்ல கட்டுப்பாடு விதிக்க உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தை எதிர்த்து மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

டெல்ட்டா வகை கொரோனா வைரஸ் பரவலை தடுக்க பிரான்ஸ் அரசு 'ஹெல்த் பாஸ்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன்படி எதிர்வரும் 9ஆம் திகதிமுதல் திரையரங்குகள், சுற்றுலாத்தலங்கள், நீச்சல் குளங்கள், அருங்காட்சியகங்கள் உள்ளிட்ட பொது இடங்களுக்கு வருவோர் கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் அல்லது கொவிட் தடுப்பூசி போட்டதற்கான சான்றிதழ் கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்கள பணியாளர்களுக்கு தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பிரான்ஸ் அரசின் 'ஹெல்த் பாஸ்' முறைக்கு பிரான்ஸ் முழுவதும் பரவலாக எதிர்ப்பு எழுந்துள்ளது. பரிஸில் மட்டும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பேரணியாக சென்று ஹெல்த் பாஸ் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதுகுறித்து அங்குள்ள போராட்டக்காரர் ஒருவர் தெரிவித்ததாவது,

அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எனது செவிலியர் பணியை இராஜினாமா செய்துவிட்டேன். அரசு எங்களை மிரட்டுகிறது. நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அரசு தீர்மானம் செய்யக்கூடாது. முதல் அலையில் மக்களை அவர்கள் தவறாக வழிநடத்தினர். இப்போது திடீரென தடுப்பூசி போட்டுக்கொள்ளாததால் நாங்கள் பிறருக்கு தொற்றை பரப்புகிறோம் என்று கூறுகிறார்கள். கட்டுப்பாடுகளை எங்கள் மீது திணிக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

ஒருகட்டத்தில் பேரணியை காவல்துறையினர் தடுத்துநிறுத்த முற்பட்டனர். அப்போது இரு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. போராட்டக்காரர்களை கலைக்க பல இடங்களில் கண்ணீர்ப்புகை குண்டுகள் வீசப்பட்டன. தண்ணீரை பீழ்ச்சி அடித்து கூட்டத்தை கலைக்க முற்பட்டதால் பெரும் பரபரப்பு நிலவியது. போராட்டம் தொடர்பாக 50இற்கும் மேற்பட்டவர்களை பொலிஸார் கைதுசெய்து இழுத்து சென்றனர்.

பரிஸில் போராட்டங்கள் தொடரும் என்ற அச்சத்தால் 4,000 காவலர்கள் மற்றும் கலவரங்கள் தடுப்புப் பிரிவினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸில் தினமும் 20,000 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகிவரும் நிலையில், பரவலை குறைக்கும் நோக்கில் ஹெல்த் பாஸ் முறைக்கு அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# 2023இல் பொதுத் தேர்தல்: மியன்மார் இராணுவம் உறுதி

மியன்மாரில் எதிர்வரும் 2023ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அந்த நாட்டின் இராணுவ ஆட்சியாளர் மின் ஆங் லயிங் உறுதியளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மியன்மாரில் பல கட்சிகளும் பங்கேற்கும் நேர்மையான, சுதந்திரமான தேர்தல் நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இரண்டு ஆண்டுகளில் அந்தப் பணிகள் நிறைவடைந்தவுடன், மியன்மாரில் தேர்தல் நடத்தப்படும் என்று உறுதியளிக்கிறேன். தற்போதைய அவசரநிலை 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை நீடிக்கும் - என தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி கலைத்தது. அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைன்ட் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையை எதிர்த்தும் கைதுசெய்யப்பட்ட அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகி உள்ளிட்ட அரசியல் தலைவர்களை விவிக்கக் கோரியும் மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

இவ்வாறு போராட்டம் நடத்தியவர்களை அந்நாட்டு இராணுவம் இரும்புக்கரம் கொண்டு அடக்கிவருகிறது. இந்த அடக்கு முறைக்கு உலக நாடுகள் பல எதிர்ப்பும் கண்டனமும்தெரிவித்தன.

இதேவேளை, இதுவரை போராட்டத்தில் ஈடுபட்ட ஜனநாயக வாதிகள் 900இற்கும் மேற்பட்டோர் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளதுடன், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப் பட்டனர்.





# காட்டுத்தீயால் வெந்து தணிந்தது துருக்கியின் அன்டால்யா நகர்

## வீடுகள் அனைத்தும் தீயில் கருகி நாசம்; 8 பேர் பலி





துருக்கியில் அதிதீவிரமாக பரவி வரும் காட்டுத்தீயால் ஒரு மாநிலமே பெரும் பாதிப்புகளை சந்தித்துள்ளது.

5 நாட்களுக்கு முன் ஏற்பட்ட காட்டுத்தீ, பலத்த காற்றின் எதிரொலியாக துருக்கியில் தீவிரமாக பரவி வருகிறது. 5ஆவது நாளான நேற்றுமுன்தினம் முக்லா என்ற மாநிலத்தின் மக்கள் வசிப்பிடங்களுக்கு காட்டுத்தீ பரவத் தொடங்கியுள்ளது. இதையடுத்து அப்பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஒரு நகரம் முழுவதையுமே காட்டுத்தீ கபளீகரம் செய்திருக்கும் காட்சிகள் வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அன்டால்யா என்ற மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியிலுள்ள வீடுகள் அனைத்தையும் அழித்துவிட்ட காட்டுத்தீ, 8 பேரின் உயிர்களை பறித்துச் சென்றுள்ளது.

கடந்த ஜூலை 28ஆம் திகதிமுதல் அன்டால்யா மாநிலத்தில் மட்டும் 112 இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டதாக கூறும் துருக்கி வனத்துறையினர், அதில் 107 இடங்களில் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். தீவிரமாக பரவும் தீயை கட்டுப்படுத்தும் பணியில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# அமெரிக்காவில் இலட்சக்கணக்கானோர் வீடற்றவர்களாகும் அபாயம்



கொரோனா பெருந்தொற்று உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திவருகிறது. பொருளாதார ரீதியாக ஏற்பட்ட நெருக்கடிகளை குறைக்கும் வகையில் அமெரிக்கா உட்பட பல நாடுகள் முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றன.

அந்தவகையில், பெருந்தொற்றுக்கு மத்தியில் வாடகை செலுத்த முடியாது தவித்த அமெரிக்கர்களை அவர்களின் வீட்டிலிருந்து வெளியேற்ற நாடு முழுவதும் 11 மாதங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை உத்தரவு நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த நிலையில், வாடகை செலுத்தாத இலட்சக்கணக்கானோரை வீட்டிலிருந்து வெளியேற்றுவதில் பெரும் சிக்கல் நீடித்துவருகிறது.

முன்னதாக, மக்களுக்கு உதவும் வகையில் வீட்டு வாடகை செலுத்துவதற்காக அரசு பில்லியன் டொலர்களை ஒதுக்கியது. ஆனால், இந்த நிதியை பயன்படுத்த உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. இதனால், இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் வீடற்றவர்களாகும் அபாயம் ஏற்பட்டது.

வீட்டிலிருந்து அப்புறப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட தடையை நீடிக்க நாடாளுமன்றத்திடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், குடியரசு கட்சி உறுப்பினர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளாததால் தடையை நீடிக்காமலேயே பிரிதிநிதிகள் சபை ஒத்திவைக்கப்பட்டது.

# கலிபோர்னியா காட்டுத் தீயினால் 2.44 இலட்சம் ஏக்கர் நிலம் நாசம்



கலிபோர்னியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயால் இதுவரை 2.44 இலட்சம் ஏக்கர் நிலம் எரிந்து நாசமாகியிருக்கிறது.

அமெரிக்கா முழுவதும் தற்போது 83இற்கும் மேற்பட்ட வனப்பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டு வருகிறது. இதனால் 10,435 கட்டடங்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக வனத்துறை எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

மேலும், இதுவரை ஒட்டுமொத்தமாக 400 கட்டடங்களும் 342 வாகனங்களும் தீக்கிரையானதாக கூறப்பட்டிருக்கிறது.



# இலங்கையின் இறுதி போட்டியாளராக இன்று களமிறங்கும் மெடில்டா கார்ல்சன்

டோக்கியோ ஒலிம்பிக்கில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி குதிரை ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ளும் மெடில்டா கார்ல்சன் இன்று இலங்கை நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு போட்டியில் களமிறங்குகிறார்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து 9 வீர, வீராங்கனைகள் தெரிவாகியிருந்தனர். இதில் முன்னதாக 8 வீர, வீராங்கனைகள் தங்களுடைய போட்டிகளை முதல் சுற்றுடனேயே முடித்து வெறும் கையுடன் நாடு திரும்பினர்.

இந்நிலையில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி டோக்கியோ ஒலிம்பிக்கில் குதிரை ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ளும் மெடில்டா கார்ல்சன், இலங்கையின் இறுதிப் போட்டியாளராக இன்றைய தினம் களமிறங்குகிறார். எனவே, மெடில்டா கார்ல்சன் இலங்கையின் பதக்க கனவை நிறைவேற்றுவாரா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம். இவர்தான் டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு இலங்கை முதல் போட்டியாளராக தெரிவானமை குறிப்பிடத்தக்கது.



# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## உலக சாதனை படைத்த வெனிசுலா வீராங்கனை

பெண்களுக்கான முப்பாய்ச்சல் இறுதிப்போட்டியில் வெனிசுலா நாட்டைச் சேர்ந்த 25 வயதுடைய யுலிமர் ரொஜாஸ் உலக சாதனை படைத்து தங்கப்பதக்கத்தை சுவீகரித்தார்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பெண்களுக்கான முப்பாய்ச்சல் இறுதிப் போட்டியின் முதல் வாய்ப்பில் 15.39 மீற்றர் தூரத்தைப் பாய்ந்து 2008 பீஜிங் ஒலிம்பிக்கில் கெமரூன் நாட்டு வீராங்கனை எம்பாங்கோ நிகழ்த்திய ஒலிம்பிக் சாதனையை யுலிமர் ரொஜாஸ் முறியடித்தார்.

தொடர்ந்து போட்டியின் மூன்றாவதும், இறுதியுமான வாய்ப்பில் 15.67 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய உலக சாதனை படைத்து தங்கம் வென்றார். முன்னதாக 1995ஆம் ஆண்டு உக்ரைன் வீராங்கனை இனெஸ்ஸா க்ரவெட்ஸ் நிலைநாட்டிய உலக சாதனையை 25 ஆண்டுகளுக்குப் பிறகு யுலிமர் ரொஜாஸ் முறியடித்தார்.






## இந்திய ஒலிம்பிக் வரலாற்றில் சாதனை நிகழ்த்திய சிந்து

டோக்கியோ ஒலிம்பிக்கில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவு பெட்மிண்டனில் வெண்கலப் பதக்கத்தை இந்தியாவின் பிரபல பெட்மிண்டன் வீராங்கனையான பி.வி.சிந்து தட்டிச் சென்றார்.

சீன வீராங்கனையுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் முதல் இரண்டு செட்களை 21-13, 21-15 என்ற அடிப்படையில் கைப்பற்றிய இந்திய வீராங்களை பி.வி.சிந்து டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

கடந்த 2016 ரியோ ஒலிம்பிக்கில் மகளிர் ஒற்றையர் பிரிவு பெட்மிண்டனில் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக்கொண்ட இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்றதன் மூலம் இந்திய ஒலிம்பிக் வரலாற்றில் அடுத்தடுத்து இரண்டு ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் நபர் என்ற சாதனையையும் அவர் ஏற்படுத்தியுள்ளார்.



## டோக்கியோ ஒலிம்பிக் நீச்சலில் 7 பதக்கங்களை அள்ளிய அவுஸ்திரேலிய வீராங்கனை

டோக்கியோ ஒலிம்பிக்கில் அவுஸ்திரேலிய நீச்சல் வீராங்கனையான எம்மா மெக்கியோன் 4 தங்கம், 3 வெள்ளி பதக்கங்களைப் பெற்று புதிய நீச்சல் வீராங்கனையாக உருவெடுத்துள்ளார். பெண்களுக்கான 50 மீற்றர் ப்ரீஸ்டைலில் 23.81 வினாடிகளில் இலக்கை கடந்து ஒலிம்பிக் சாதனையுடன் தங்கப் பதக்கத்தை தனதாக்கிய எம்மா மெக்கியோன், அதன்பிறகு அணிகளுக்கான 4x100 மீற்றர் மெட்லே தொடர் நீச்சலில் 3 நிமிடம் 51.60 வினாடிகளில் பந்தய தூரத்தை எட்டி தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் 4 தங்கம், 3 வெண்கலம் என மொத்தம் 7 பதக்கங்களை அறுவடைசெய்து மலைக்க வைத்த எம்மா மெக்கியோன் ஒரு ஒலிம்பிக்கில் அதிக பதக்கங்களை பெற்ற நீச்சல் வீராங்கனை என்ற சாதனையை படைத்தார்.

ஒலிம்பிக்கில் அதிக பதக்கங்கள் பெற்றவரான சோவியத் யுனியன் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை மரியா கோரோகோவ்ஸ்கயாவின் சாதனையை (1952ஆம் ஆண்டு ஹெல்சின்கி ஒலிம்பிக்கில் 2 தங்கம், 5 வெள்ளியுடன் 7 பதக்கம்) எம்மா சமன் செய்தார்.

ஒலிம்பிக் ஆடவர் நீச்சலில் அமெரிக்க வீரர் மைக்கல் பெல்ப்ஸ் அதை மூன்று முறை செய்தார். 2008 பீஜிங் விளையாட்டுப் போட்டிகளில் எட்டு தங்கங்களைப் பதிவு செய்தார். நீச்சலில் அதிக பதக்கம் பெற்ற பெண் எனும் சாதனையை எம்மா படைத்துள்ளார். எம்மாவின் பதக்கங்களினால் பதக்கப்பட்டியலில் அவுஸ்திரேலியா முன்னிலை பெற்றது. 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவுஸ்திரேலியா அதிக பதக்கத்தை நீச்சல் போட்டியில் பெறுவது இதுவே முதல்முறையாகும்.

## மூன்றாவது போட்டியும் மழையால் வீணானது

### கட்டாய வெற்றியை நோக்கி இன்று களமிறங்கும் மே.இ.தீவுகள்

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டி வெறும் 8 பந்துகள் வீசப்பட்ட நிலையில் மழை காரணமாக கைவிடப்பட்டது.

சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் போட்டி, மழை காரணமாக கைவிடப்பட்ட நிலையில், இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டி நேற்று முன்தினம் கயானாவில் ஆரம்பமானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கி, 1.2 ஓவர்கள் நிறைவில் 15 ஓட்டங்களுக்கு விக்கெட் இழப்பின்றி துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த வேளையில் மைதானத்தில் மழை குறுக்கிட்டது.

நீண்டநேரம் பலத்த மழை பெய்ததன் காரணமாக மைதானத்தில் அதிகமான நீர் தேங்கியிருந்ததால் மீண்டும் போட்டியை ஆரம்பிப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டது. இதனால் மூன்றாவது போட்டி மழையால் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தொடரில் 3 போட்டிகள் நிறைவடைந்திருக்கும் நிலையில் பாகிஸ்தான் அணி 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவதும், இறுதியுமான போட்டி நாளை நடைபெறவுள்ளது.



## அமெரிக்க கிரிக்கெட்டில் தடம்பதிக்கும் தனுஷ்க?




இலங்கை கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான தனுஷ்க குணதிலக்க இலங்கை கிரிக்கெட்டிலிருந்து விடை கொடுத்துவிட்டு அமெரிக்க கிரிக்கெட் அணியில் விளையாட தயாராக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அணி அண்மையில் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் உயிர்குமிழி பாதுகாப்பு வளையத்தை மீறி வீதியில் உலாவித்திரிந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்களான தனுஷ்க குணதிலக்க உள்ளிட்ட மூவருக்கு இலங்கை கிரிக்கெட் சபையானது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஒரு வருட தடை விதித்துள்ளது.

இந்நிலையில், ஆரம்ப துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணதிலக்க, இலங்கை கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்துவிட்டு அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்து, அமெரிக்க தேசிய கிரிக்கெட் அணியில் விளையாடக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான ஷெஹான் ஜெயசூரிய, அமில அபன்சோ ஆகிய வீரர்கள் இலங்கை கிரிக்கெட்டிலிருந்து விடைபெற்று அமெரிக்க அணியில் இணைவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## ஹஸரங்க ஐ.பி.எல். இரண்டாம் பாதி ஆட்டத்தில் களமிறங்குவார் – சேவாக் கருத்து

கிரிக்கெட் உலகில் நட்சத்திர சகலதுறை வீரராக உருவெடுத்து வருகின்ற இலங்கையின் வனிந்து ஹஸரங்க, 2021ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மாற்று வீரராக இடம்பெறுவார் - என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான விரேந்திர சேவாக் தெரிவித்துள்ளார்.

14ஆவது இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் இரண்டாம் பாதி ஆட்டங்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஒருசில நாட்டு வீரர்கள் தங்கள் அணிக்காக சர்வதேச கிரிக்கெட் தொடரில் விளையாட வேண்டும் என்ற காரணத்தினால் இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் இரண்டாம் பாதி ஆட்டத்தில் கலந்துகொள்வதில் கேள்விக்குறி ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில், இலங்கை அணியின் நட்சத்திர சகலதுறை வீரரான வனிந்து ஹஸரங்க, ஐ.பி.எல். தொடரின் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இடம்பெறுவார் என பலரும் கருத்துகளை தெரிவித்து வருகின்ற நிலையிலேயே விரேந்திர சேவாக் தனது கருத்தினை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், “இந்திய அணிக்கு எதிரான ஆட்டத்தில் வனிந்து ஹஸரங்க சிறப்பாக செயற்பட்டதையடுத்து, ஐ.பி.எல். உரிமையாளர்கள் வனிந்து ஹஸரங்கவை மாற்று வீரராக அணியில் இணைத்துக்கொள்ள கவனம் செலுத்தியுள்ளனர். குறிப்பாக, ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி ஏற்கனவே அடம் ஸம்பாவுக்கு பதிலாக வனிந்து ஹஸரங்கவை அணையில் இணைத்துக்கொள்ள கோரியிருந்தது. மேலும், முதல் பாதியில் வேகப்பந்து வீச்சாளர் கேன் ரிச்சர்ட்சனும் பெங்களூர் அணியிலிருந்து வெளியேறியிருந்தார்'' என தெரிவித்தார்.

## TOKYO OLYMPIC 2020

| Rank | Team/NOC | 1 | 2 | 3 | Total |
|---|---|---|---|---|---|
| 1 | People's Republic of China | 29 | 17 | 16 | 62 |
| 2 | United States of America | 22 | 25 | 17 | 64 |
| 3 | Japan | 17 | 6 | 10 | 33 |
| 4 | Australia | 14 | 4 | 15 | 33 |
| 5 | ROC | 12 | 21 | 17 | 50 |
| 6 | Great Britain | 11 | 12 | 12 | 35 |
| 7 | France | 6 | 10 | 7 | 23 |
| 8 | Germany | 6 | 6 | 11 | 23 |
| 9 | Republic of Korea | 6 | 4 | 9 | 19 |
| 10 | Netherlands | 5 | 7 | 6 | 18 |




நேற்றிரவு 8 மணிவரைக்குமான பதக்கப் பட்டியல்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7